
# யூஸுப் இஸ்லாம்

## சில நினைவுகள்



[library stamp] PUBLIC LIB... COLOMBO DATE 25/8/2011

### அஹ்மத் முனவ்வர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

79

# நவ முஸ்லிம் சிந்தனையாளர்

# யூஸுப் இஸ்லாம்

12.50

WITHDRAWN
PUBLIC LIBRARY
COLOMBO 7.
DATE: 201 J/2017

அஹ்மத் முனவ்வர்

தமிழ் மன்றம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# YOOSUF ISLAM
(SOME REFLECTIONS)

by

**AHMEDH MUNAWWAR**

(C) Copyright reserved

307297
20430
315

First published in June, 1985

Cover design : **Kalaivathy Kaleel**
**Basil Sebastian**

Twenty-fourth publication of :
THAMIL MANRAM,
Galhinna, Kandy.
Sri Lanka.

Price : Rs. 12/50

Printed at :
THE KUMARAN PRESS,
201, Dam Street,
Colombo-12.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீதியரசர்

அல்ஹாஜ் எம். எம். அப்துல் காதர் அவர்களின்

# அணிந்துரை

வலிமார்கள் செய்யும் அற்புதங்களை கராமாத்துக்கள் என்றும், நபிமார்கள் செய்யும் கராமாத்துக்களை முஃஜிஸாத் என்றும் கூறப்படும். முஹம்மது நபி (ஸல்) அவர்களுக்கு முன்வந்த நபிமார்களுக்கு வெவ்வேறு முஃஜிஸாத்துக்கள் கொடுக்கப்பட்டு இருந்தன. நபி (ஸல்) அவர்களுடைய முஃஜிஸாத் திருக்குர்ஆன் என்று கூறப்பட்டிருக்கின்றது.

கட் ஸ்டீவன் யூஸுப் இஸ்லாமாக மாறியது திருக்குர்ஆனின் முஃஜிஸாத் என்னும் அற்புதமேயாகும்.

தகப்பன் சைப்பிரஸ் - (சிப்ரியத்) - கிரேக்கர் என்பதனால் துருக்கியருக்கு எதிராகவுள்ள மனக்கசப்பு பொதுவாக முஸ்லிம்களுக்கே எதிராக அவர் மனதில் இருந்து வந்தது. அத்துடன் மேல்நாட்டில் இஸ்லாத்துக்கு எதிராகச் செய்யப்படும் பிரசாரம் முஸ்லிம்களுக்கு எதிரான ஒருவிரோத மனப்பான்மையையும் ஏற்படுத்தி இருந்தது.

இத்தகைய சூழ்நிலையிலும் திருக்குர்ஆனை மாத்திரம் படித்ததனால் துவேஷங்கள் யாவும் நீங்கி, இஸ்லாத்தின்பால் கவர்ச்சி ஏற்படுத்தக்கூடிய சக்தி திருக்குர்ஆனுக்கு இருக்குமானால், திருக்குர்ஆனின் அற்புதத்தையும், அழகையும் புரிந்து கொள்ளலாம். ஜெரூஸலத்தில் இருந்து கொணர்ந்த திருக்குர்ஆனின் மொழி பெயர்ப்புப் பிரதியை அவரது சகோதரர் கொடுத்தபோது வெறுப்புடன் அதனை அணுகி, வாசிப்பதில் நஷ்டம் இல்லை - பெறுமதி ஏதும் இருப்பின் பெற்றுக் கொள்ளலாம் என்ற அரைகுறை மனதுடன் வாசிக்கத் தொடங்கி, அல்லாஹ்வின் ஏகத்துவத்தைப் பிரதிபலிக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கும் பிஸ்மில்லாஹிர்ரஹ்மானிர் றஹீம் (அளவற்ற அருள ளனும் நிகரற்ற அன்புடையோனுமாகிய அல்லாஹ்வின் திருநாமத்தால்) என்ற அற்புத வசனம் அவருடைய மன தைக் கவர்ந்தது.

தனியொரு இறைவன், தனியொரு அருளாளன், தனி யொரு அன்புடையோன் என்ற ஏகத்துவக் கொள்கையால் ஈர்க்கப்பட்ட அவர் தொடர்ந்தும் வாசித்தார். வாசிக்க வாசிக்க புது உலகொன்று அவர் முன்னால் தோன்றியது. பேரானந்தத்தில் ஆழ்ந்து தொடர்ந்தும் வாசித்தார். வெறுப்பு சூரியனைக் கண்ட பனிபோல் முற்றாகமாற குர்ஆனின் முஃ ஜிஸாத்து அவருடைய இருதயத்திலே புது உணர்வுகளை உண் டாக்கியது. தனது சிக்கலான சீர்கெட்ட வாழ்க்கையை அதுவரையும் அனுபவித்த தார்மீக ஒழுக்க முறைகள் தனக் குத் திருப்தி அளிக்காதிருந்த யூஸுப் இஸ்லாத்துக்கு அல் ஹம்து லில்லாஹி ரப்பில் ஆலமீன் - புகழ் யாவும் அகிலங்கள் அனைத்தையும் படைத்து, வளர்த்து, பரிபாலிக்கும் நாயனான அல்லாஹ்வுக்கே ஆகும் என்ற வசனம் புது உறுதியை அவரு டைய மனதில் பதித்தது.

"நாம் மூமீன்களுக்கு ரஹ்மத்தாகவும் அருமருந்தாகவும் உள்ளவற்றையே குர்ஆனில் இறக்கிவைத்தோம்'' என்ற அல்லாஹ்வின் வசனம் (17 - 82) உண்மையாக இருக்க வேண்டும்தானே.

அந்த உண்மை யூஸுப் இஸ்லாம் அவர்களின் வாழ்க் கையில் பிரதிபலித்தது.

மது, மாது, சூது, சங்கீதம், இசைக்கருவிகள் போன்ற பல ஹராமான விடயங்கள் அவருடைய பகுதிற்கு அருவருப்புக் கொடுக்கத் தொடங்கின. இவையனைத்தையும் கைவிட்டார். ஆனால் நண்பர்களின் பழக்க வழக்கங்கள் பழைய வாழ்க் கைக்கு இழுத்துச் செல்லக்கூடியதாகவும் இருந்தது. எனவே, அவ்வாறான நண்பர்களையும் துறந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருக் குர்ஆன் எந்த அளவு யூஸுப் இஸ்லாத்தின் ஆத்மீக லௌகீக வாழ்க்கைக்கு ஷிபாவாக - அருமருந்தாக அமைந்தது என்பதை நாம் கட்டாயம் கூர்ந்து சிந்திக்க வேண்டும்.

ஒரு முஃமினின் அடையாளம் அவனைக் கண்டால் மற்றவர்களுக்கு அல்லாஹ்வின் ஞாபகத்தை உண்டுபண்ணுவதாக இருக்க வேண்டும் என்பது நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் கூற்றாகும்.

யூஸுப் இஸ்லாத்தைக் கண்டோம், கேட்டோம். இப்போது யூஸுப் இஸ்லாம் - சில நினைவுகள் என்ற இந்த நூலையும் வாசிக்கப் போகிறோம்.

இவையனைத்துக்கும் பின் நாம் அல்லாஹ்வைச் சிந்தியாது வாழ்வோமேயானால் குறை நம்முடையதே அன்றி வேறில்லை. சிறு பராயம் முதல் திருக்குர்ஆனைச் சுமக்கிறோம். குர்ஆனை மத்றஸாக்களில் அழகாகப் படித்தோம், கருத்தறியாத நிலையில்.

பருவமடைந்தபோது குர்ஆன் முற்றிலும் அல்லாஹ்வின் அருள்மொழிகள் என்பதும் அறிந்தோம். எனினும் பலர் திருக்குர்ஆனை முற்றிலும் மறந்தனர். சிலர் ஓதி வந்தனர். ஆனால் அனைவரும் திருக்குர்ஆனைக் கருத்துடன் அறிந்து நலவாழ்விற்கு வழியமைக்கும் பாதையாக அதனை ஏற்படுத்திக் கொள்வதற்குத் தவறிவிட்டோம்.

யூஸுப் இஸ்லாத்தின் வரவு நல்வரவாக நமக்கு அமைவதற்கு அல்லாஹ்வின் தூதான திருக்குர்ஆனைக் கருத்துடன் படித்து, அதன் போதனைகளை உணர்ந்து அதன்படி ஒழுகுவதற்கு நாம் இப்போதாவது முயற்சி செய்யாவிட்டால் திருக்குர்ஆன் எமக்கொரு முஃஜிஸாத்தாக அமையாது. பூட்டி வைக்கப்பட்டிருக்கும் பொக்கிஷமாகவே இருக்கும்.

"எவர்கள் தௌராத் வேதம் சுமத்தப்பெற்று பின்னர் அதன்படி நடக்கவில்லையோ, அவர்களுக்கு உதாரணமாவது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருவனைச் சுமக்கும் கழுதையின் உதாரணத்துக்கு ஒப்பாகும். எச்சமூகத்தார் குர்ஆனின் வசனங்களைப் பொய்ப்பிக்கிறார்களோ, அவர்களின் உதாரணம் மிகக் கெட்டதாகும். அல்லாஹ் அநியாயக்கார சமூகத்தை நேர் வழியில் செலுத்த மாட்டான் (62 - 5) என்ற அல்லாஹ்வின் வசனத்திற்கு அமைய நாங்களும் குர்ஆன் எனும் புத்தகத்தைச் சுமந்த கழுதைகளாக மாறிவிடலாகாது. மாறாக, குர்ஆன் எனும் அருள்வாக்கை அறிந்து அதன்படி ஒழுக முயற்சி செய்தாலன்றி திருக்குர்ஆனின் முஃஜிஸாத்து எம்மில் நடமாடாது அரபு தெரியாத நாம் தெரிந்த பாஷையில் திருக்குர்ஆனை வாசித்து அறிவதே ஒரே வழியாகும்.

முஸ்லிம்கள் என்று கூறிக்கொள்ளும் நாம், சிலரிடம் தொழுகை உண்டு. ஸக்காத் இல்லை. சிலரிடம் தொழுகையும் ஸக்காத்தும் உண்டு, ஆனால், ஹராமான வட்டியைப் பற்றி அவர்களுக்குக் கவலையல்ல. சிலரிடம் ஒன்றும் இல்லை. காரணம் திருக்குர்ஆனை வாசித்து அறியாத ஒன்றேயாகும்.

ஒவ்வொரு நாளும் சொற்பநேரத்தை கருத்துடன் வாசிப்பதில் செலுத்தினால் அல்லாஹ்வின் தௌஹீத் மனதில் குடிகொள்ளும். பாவங்கள் அகலும், நன்மைகள் நிறையும். திருக்குர்ஆன் அருமருந்தென்ற அல்லாஹ்வின் வார்த்தை எமது வாழ்க்கையில் உண்மையாகும்.

பல தீமைகள் நிறைந்த யூஸுப் இஸ்லாத்திற்கு திருக்குர்ஆன் - ஹிதாயத் - (நேர்வழியைக்) கொடுக்குமானால் ஏன் அது நமக்கும் உதவாது.? அதனைத்தான் நாம் "இஹ்தி நஸ்ஸிராத்தல் முஸ்தகீம்" - ("யா அல்லாஹ் நீ எங்களை நேர் வழியில் நடத்துவாயாக.") என்று தினமும் இறைஞ்சுகின்றோம். அதற்கு அல்லாஹ் கொடுக்கும் பதில் "இந்தச் சிறு வேதம் எத்தகைய சந்தேகமும் இல்லாது பயபக்தியுடையோருக்கு நேர்வழி காட்டியாகும்." (2 – 2) என்பதாகும்.

அஹ்மத் முன்வ்வரின் இந்த நூல் யூஸுப் இஸ்லாத்தின் சரித்திர வரலாறு மாத்திரமன்றி எமக்கும் திருக்குர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆன் மூலம் நல் வழி கிட்டும் ஓர் அரும் பெரும் நூலாக அமைந்து விடுமானால், - எழுதியவருக்குக் கிடைக்கும் பலன் புத்தகத்தில் இல்லை, எழுத்துத் திறமையிலும் இல்லை. கோடி கோடியான ஸவாபும் நன்மையும் கிடைக்கும்.

நிய்யத்துக்கும் நன்மை (ஸவாபு) உண்டு. பலன் பெற்ற மக்களின் தொகையின் அடிப்படையிலும் ஸவாபு - நன்மை உண்டு. எனவே இதனைப் படிக்கும் நாம் ஒவ்வொருவரும் நமது ஆத்மீக வளர்ச்சிக்கும் ஆசிரியரின் நலனுக்குமாக யூஸுப் இஸ்லாத்தின் வாழ்க்கையில் திருக்குர்ஆன் மறு மலர்ச்சியை ஏற்படுத்தியதுபோல் நமது வாழ்க்கையிலும் புனருத்தாரணம் செய்வதற்கு திருக்குர்ஆனை நன்றாகப் பயன் படுத்தல் வேண்டும்.

முயற்சி இல்லாதார்க்கு அல்லாஹ்வின் அருள் இல்லை. முயற்சி நமது பணி. அருள் அல்லாஹ்வின் கொடை. முயற்சி செய்வோர் வெற்றி காண்பர். செய்யாதோர், தோல்வி உற்றார்.

அல்லாஹ் நமது வார்த்தையில் திருக்குர்ஆனின் ஒளி பிரதிபலிக்க என்றென்றும் அருள் புரிவானாக.

இதை எழுதிய ஆசிரியருக்கும் ஸவாபையும் இன்னும் ஊக்கத்தையும் உற்சாகத்தையும் அளிப்பானாக. ஆமீன்.

எம் எம். அப்துல் காதர்
உயர் நீதிமன்றம், கொழும்பு.

பாத்திமா கார்டன், மாகோல,
களனி
4-4-85



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

நம்மவரை நம்பிவந்து

நாம் பார்க்காமையினால்

சமூகப் பாதையோரங்களில்

நடைப்பிணங்களாய் —

பௌத்தாகிக் கொண்டிருக்கும்

பௌலா இஸ்லாம்களுக்கு

இந்த

"யூஸுப் இஸ்லாம்-சில நினைவுகள்"

சமர்ப்பணம் !



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாக்கியம் பெற்றவர்கள்

அல்லாஹ்வின் நல்லருள் பெற்றவர்கள்தான், நல்வழியில் நடக்கும் பாக்கியம் பெற்றவர்கள். அப்படியானவர்கள், முஸ்லிம்கள் மத்தியில மாத்திரமன்றி, முஸ்லிமல்லாதார்களிடையிலும தோன்றியுள்ளார்கள் என்பதை நிருபிக்கும் வகையில், பலப்பல நூற்றாண்டு காலமாக முஸ்லிமல்லாதார், இஸ்லாத்தைத் தழுவி வருகின்றார்கள். இன, நிற வேறுபாடற்ற இஸ்லாத்தில் பல இனங்களைச் சேர்ந்தவர்களும, பல நிறங்களையுடையவர்களும் சேர்ந்துள்ளார்கள். ஆபிரிக்கக் கண்டத்தில வாழபவர்களில் பெரும்பாலானவர்கள், கறுப்பு நிறத்தவர். இன்று, ஆபிரிக்கா "ஒரு முஸ்லிம் கண்டம்" எனக் கூறுமளவிற்கு, அங்குள்ளவர்களில் எண்பது சத விகிதத்துக்கு மேற்பட்டவர்கள் இஸ்லாத்தின் வழி நிற்கிறார்கள். பல பிரசித்தி வாய்ந்த ஆங்கிலேயர்கள் - பிரபுக்கள் எனப்படும் சிலர்கூட - இஸ்லாத்தைத் தமது வாழ்க்கைப் பாதையாகத் தேர்ந்தெடுத்துள்ளனர்.

சமீப காலத்தில், அமெரிக்க நீக்ரோ சமூகத்தவரான குத்துச்சண்டை வீரர் கஸியஸ் கிளே இஸ்லாத்தின்பால் ஈர்க்கப்பட்டு முஹம்மது அலி ஆனதுடன் நின்றுவிடாமல், இஸ்லாத்தின் சிறப்புப பற்றி வெவ்வேறு நாடுகளுக்குச் சென்று எடுத்துக் கூறி வருகிறார்.

இந்த வரிசையில், 'பொப்' இசைப் பாடகரான ஆங்கிலேயர், கட் ஸ்டீவன் குர்ஆனின் கவர்ச்சியால் இஸ்லாத்தை ஏற்றுக்கொண்டுள்ளார். சமீபத்தில் அவர் இலங்கைக்கு விஜயம் செய்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''மத்திய கிழக்கு அரபியர்களின் பணத்துக்கு ஆசைப் பட்டு, நீங்கள் இஸ்லாத்தைத் தழுவினீர்களா?'' என்று இங்கு அவரிடம் ஒருவர் கேட்டார். ''இல்லவே இல்லை. எனக்கு யார் பணமும் தேவையில்லை. என்னிடம் போதியளவு பணம் இருக்கின்றது'' எனப் பதில் அளித்தார், இஸ்லாத்தில் மாறாத பற்றுக்கொண்டுள்ள யூஸுப் இஸ்லாம், ஆனால், அவருக்கு ஒரு பெரும் கவலை ''பரம்பரையாக முஸலிம் என்று வாழ்பவர்கள், சரியான இஸ்லாமிய முறையில் நடந்துகொள்கிறார்களில்லை. அப்படி அவர்கள், சரியான இஸ்லாமிய வாழ்க்கை நடாத்தினால், ஏனையவர்கள் இஸ்லாத்தில் தாமாகப் புகுந்துவிடுவார்கள். எதுவித பிரசாரமும் தேவையில்லை' என்பதுதான அவரின் சித்தாந்தம்.

அவர் கூறுவதில் நிறைய உண்மை இருக்கிறது என்பதை யாரும் மறுக்க முடியாது. எம்மில் பலர், உலக ஆசாபாசங்களால் கவரப்பட்டு, இஸ்லாமிய வழிமுறைகளை மறந்து வாழ்கிறோம். அந்நியர் வழியில்தான் நாம் நடக்கிறோம் - எமது வழியிலல்ல. நாம் இஸ்லாமிய வழியில் நடந்தால், அந்நியர் எம்முடன் சேர்ந்து எம்மைப் பின்பற்றுவார்கள்.

யூஸுப் இஸ்லாம் அவர்களின் இலங்கை விஜயத்தின் போது, அவருடன் செய்தியாளர் என்ற முறையில் நெருங்கிப் பழகிய சகோதரர் அஹ்மத் முனவ்வர், தனது நினைவுகளை இந்நூலில் தந்துள்ளார். இதனால், தமிழ் தெரிந்த அனைவரும் பயனடைவர் என்பதில் கிஞ்சித்தும ஐயமில்லை. நூலை நாம் வெளியிடுவதற்கு வாய்ப்புத் தந்த சகோதரர் அஹ்மத் முனவ்வருக்கு எமது மனமார்ந்த நன்றிகள்.

**எஸ். எம். ஹனிபா**
நிர்வாகி.

**தமிழ் மன்றம்,**
**கல்ஹின்ன.**
***1.6.1985***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னுரை

எவையெவையெல்லாமோ இந்தச் சமுதாயத்துக்கு இன்று தேவைப்படுவதுபோல் தோன்றுகிறது.

அரசியல் தலைவர், அரசியல் அறிவு போதாதென்பர். மௌலவிமார் மார்க்க அறிவுப் பற்றுக்குறை மக்களில் உள்ளது என்பர்.

ஆசிரியரும், கல்விமான்களும் கல்வியறிவு போதாதுள்ளது என்பர். வியாபாரியும், ஏழையும், ஏன் செல்வரும் பணம் பற்றுக்குறை, பொருள் போதவில்லை என்பர்.

இதன் மறுபக்கத்தைப் பார்த்தால் பெண்கள் அழகும் பொருளும் ஏன் அகிலமே கிடைத்தாலும் போதவில்லை என்று கூறுவது போல் உள்ளது என்பர்.

ஆனால், ஆத்மீகவாதியும் - தன் வாழ்க்கையைப் புரிந்துகொண்ட நேர்மையான மனிதனும் தனது குடும்பமும் தானும் உண்டு என்று தனது மனச்சாட்சிக்கு ஏற்ப ஏதோ கிடைப்பதைக் கொண்டு போதுமாக்கி, தன் தேவைபோக மீதியிருந்தால் அடுத்தவருக்கும் கொடுத்து வாழ்வதையே விரும்புவர். இதனை இன்றைய தேவையாக இங்கே குறிப்பிடுவதில் குற்றமிருக்காது என நம்புகிறேன்!

நான் சிந்தித்தபோது, என் சிந்தையில் தோன்றிய வாழ்க்கையின் உண்மைகளை ஒழுகுபவராக, ஒரு சிலதினங்களுக்குள்ளே காணக்கிடைத்த ஒருவராக யூஸுப் இஸ்லாம் அவர்களைக்கண்ட மகிழ்ச்சியில் அதனை இவ்வாறு எழுதி வெளிப்படுத்தியுள்ளேன்.

ஜனநாயக உலகு, மக்களாட்சி யுகம் என்றெல்லாம் பேசப்படும்போது, ஒரு தனி மனிதனைப் பற்றி அவர் அனுமதியின்றி எனக்குள்ள சுதந்திரத்தைக் கொண்டு இதை எழுதியதில் தவறிருக்காது எனவும் நம்புகிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யூஸுப் இஸ்லாம் அவர்களை இன்றைய சமுதாயத்துக்கு தேவையானதோர் உதாரண புருஷராகக் காண்கிறேன், அந்த உதாரண புருஷரை இந்த நூலில் நீங்கள் வாசிப்பதன் மூலம் உங்களோடு நடமாடிக் கொள்பவராக நம்பிக்கை ஏற்படுத்திக் கொண்டால், நான் கொண்ட இலட்சியம் நிறைவேறுமெனவும் நம்புகிறேன்.

ஜனநாயக உரிமைகளுள் எழுத்துச் சுதந்திரமும், ஒன்றுயில்ல என் கருத்துப்படி ஒரு தனிமனிதனை அதிலும் இஸ்லாத்தைத் தழுவி எட்டு ஆண்டுகளாகிவிட்ட பாலப் பருவத்தில் அவரை "நவ முஸ்லிம் சிந்தனையாளரென்று" நாமமிட்டுக் கோடிட்டுள்ளேன். இன்றைய சமுதாயம் இதனை வரவேற்கும் என்பதும் எனது நம்பிக்கை.

சிந்தனுவாதிகள், சீர்திருத்தவாதிகள் இன்னும் ஆத்மஞானிகள் இப்படிப்பலர் நம் மத்தியில் பரம்பரையாக இருக்கும்போது எயமைப்பற்றி எழுதாது, நவ முஸ்லிமான வெள்ளைக்கார யூஸுப இஸ்லாத்தை ஏன் எழுதினேன் என்பதற்கு சிறு விளக்கமாகவே என்னுரையில் ஒரு பீடிகை விட்டேன்.

1948ம் ஆண்டில் பிறந்த அவர் தனது 29வது வயதில் இஸ்லாத்தைத் தழுவினா். இஸ்லாத்தைத் தழுவி, 8 ஆண்டுகள்தான் - அந்தக் காலகட்டத்தில் இஸ்லாத்தினதும் அறிவுக்களஞ்சியமான அல்குர்ஆனினதும் ஞானமழையில நன்ருக நனைந்து, நபிகள் நாயகம (ஸல்) அவர்களின் வாழ்வும் வாக்குமான அல்ஹதீஸ்படியே வாழ முயறசித்துக் கொண்டிருக்கும் யூஸுப் இஸ்லாத்தை, இன்றைய நமக்குள் ஒரு நல்லடியாராய் (ஸாலிஹீனுய்) நான் கண்டதுவும் இதை எழுதக் காரணமாகும்.

அவர் இலங்கை வந்த 9-2-85 சனிக்கிழமை முதல் திருமபிச்சென்ற 12-2-85 செவ்வாய்க்கிழமை நள்ளிரவு 12.30 வரையும் நமக்குள் ஒருவராக இருந்தார். இங்கிருந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்த சொற்ப கால எல்லையான 96 மணி நேரத்துக்குள்ளும் தலை நகர் மட்டுமன்றி முழுச் சமுதாயமுமே ஆத்மீக விழிப்புப் பெற்றது என்று அப்போது பலரும் பேசினூர்கள்!

இலங்கை வானொலி, மற்றும் தமிழ்த் தேசியப் பத்திரிகைகள், ஏனைய சமூக சஞ்சிகைகள் மட்டுமன்றி, தொலைக் காட்சியிலும் இப்படிப் பலவாருக யூஸுப் இஸ்லாம் அவர்கள் பிரபல்யமானதுகூட எல்லாம் அறிந்த அல்லாஹ்வின் செயலாகும்.

இதேவேளை, சமூகத்தோடு தொடர்புடைய என்னைச் சந்தித்த பலர் யூஸுப் இஸ்லாத்தைப் பற்றி தாம் எழுதப்போவதாகவும் எழுதியுள்ளதாகவும், நிறைய அறிந்திருப்பதாகவும் கூறினர். எனினும் நூல் உருவில் அவர்கள் முன்வைக்கிறார்களா என்று பார்த்தேன், அதற் கெல்லாம் பல காரணங்கள் இருக்கலாம்.

தமிழ் முஸ்லிம் உலகில், மொழிபெயர்ப்புத் துறையில் தனியிடம் பிடித்துள்ள பாராளுமன்ற உரைபெயர்ப்பாளர் மன்னூர் எச். எம். ஷரீப் அவர்கள் மித்திரன் பத்திரிகையில் இரு தினங்கள் யூஸுப் இஸ்லாத்தைப்பற்றி மிகச் சிறப்பாக எழுதினூர். இதேபோல, தினகரன் தேசியப் பத்திரிகையில் இலங்கை ஜமாஅத்தே இஸ்லாமி பிரமுகர் சகோதரர் எஸ். எம். மன்ஸூர் அவர்களும், நீதியரசர் அல்ஹாஜ் எம். எம். அப்துல் காதர் அவர்களும் யூஸுப் இஸ்லாத்தைப்பற்றி நம் சமூகத்தோடு ஒப்பிட்டு எழுதினூர்கள்.

மேலும் தமிழ் முஸ்லிம் பத்திரிகையாளர்கள் யூஸுப் இஸ்லாத்தின் பேருரையை கேட்டுவிட்டு உடனுக்குடன் தாம் கடமையாற்றும் தினசரிகளில் எழுதினூர்கள். இப்படிப் பலவாருக யூஸுப் இஸ்லாம் அவர்கள் சமூகத்துக்கும் பொதுவாக நாட்டுக்கும் அறிமுகப்படுத்தப்பட்டார்.

NF 20460



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இத்தகைய பிரபல்யமான ஒருவரைப்பற்றி அதிலும் முற்றிலும் இஸ்லாமிய வாழ்வில் மாறியிருக்கின்ற யூஸுப் இஸ்லாம் அவர்களை இந்தச் சமுதாயம் அறியக்கூடிய நிலையான வழியொன்றை ஏற்படுத்துவதாயின் தனி நூல் ஒன்றை எழுதுவதே சிறந்தது என என் சிந்தையில் எழுந்தது.

ஹாஜி யூஸுப் இஸ்லாம் அவர்களை வழியனுப்பிவிட்டுத் திரும்பும்போதே அதற்குரிய பணியில் என் மூளை, வேலை செய்யத் தொடங்கியது. அதன் பிரதிபலனே இன்று உங்களுக்குச் சொந்தமானதாக இந்நூல் கிடைக்கப் பெற்றுள்ளது. அல்ஹம்துலில்லாஹ்.

எனது முதல் நூலான பிஞ்சுமனம் பெற்றுக்கொண்ட ஓரளவான வரவேற்பைவிட, இந்தநூல் பெருமளவிலான வரவேற்பைப் பெறுமாயின் நான் அடையும் பெருமகிழ்ச்சி அதுவென்பேன்.

யூஸுப் இஸ்லாம் பற்றி எழுதுவதற்கு எனக்குத் தகுதி உண்டா? இல்லையா? என்று இந்தச் சமுதாயம் பேசிக் கொள்ளும் என்று என் மனம் பலமுறை எண்ணிப் பார்த்தது. எனினும் அறிஞர் அப்துற்றஹீம் அவர்கள் கூறியதுபோல் 'மனதை வெல்லுவாய் மனிதனாகுவாய்'' என்ற கருத்துப் படி, எனக்குத் தெரிந்தவகையில் எழுதியிருக்கிறேன்.

எனக்குரிய தகுதி தாரதம்மியம் பற்றி அவர் பிரிந்த சில மணித்தியாலங்களுக்குள் பதிலும் கிடைத்தது.

இரவு நித்திரைக்குப்போகு முன்னர் ஒரே யோசனை. தேசிய பத்திரிகைகள் அன்றேல் சமூக இதழ்களில் எழுத வேண்டும் என்றவாறெல்லாம் என் சிந்தை சிறகடித்துப் பறந்தது. ஒன்றாகஇருக்கும் என் அரும் நண்பர் பத்திரிகையாளர் என். எம். அமீனுடன் இதுபற்றி அடிக்கடி கூறுவேன். அவரும் கிண்டலாகவோ கேலியாகவோ திருப்பியடிப்பார். எதற்கும் எழுதித்தான் ஆகுவேன் என்ற ஒரு வெறி ஏற்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சகோதரர் அமீனுக்கு அடுத்த கட்டிலில் நித்திரைகொண் டெழுந்தேன். அதற்குள் ஒரு வெளியீட்டுவிழாவே முடிந்து, எனது கையில் யூஸுப் இஸ்லாத்தைப் பற்றி நான் எழுதிய நூல்கள் நிறையக் கிடைக்கப்பெற்று மகிழ்ந்து கொண்டி ருந்தேன். என்ன ஆச்சரியம் ?

நாம் இருவரும் வழமைபோல் அதிகாலை எழுந்து, தொழுகையின் பின்னர் சில விடயங்களைப்பற்றி கருத்துப் பரி மாறும் சமயம், இரவு நடந்த சம்பவத்தைச் சொல்லி மகிழ்ந் தோம். இன்ஷா அல்லாஹ், நூலை எழுதித்தான் ஆகுவேன் என்ற என் மனம் வெற்றி கண்டு, அந்தக் கனவு நனவாகி உங்கள் கரங்களில் கிடைத்துள்ளது.

அழுதும் பிள்ளை அவளே பெறவேண்டும் என்ற நாட்டுப் புறத்துப் பழமொழியை எனது முதல் வெளியீடான பிஞ்சு மன நூல் பிரசுரத்தின்போது அனுபவித்ததை நினைத்துப் பார்க்கிறேன். ஆனால், அவ்வாறு பிள்ளை பெறுபவளுக்கு மருத் துவச்சி கிடைத்தால் எப்படி இருக்கும் என்பது போல் எனக்கு கல்ஹின்னைத் தமிழ் மன்றம் கை கொடுத்தது. அதன் 24வது நூலாக இது அமைகிறது. இதற்கெல்லாம் மூல கார ணம் தமிழ் மன்றத்தின் தலைவராயிருந்து, தானே எல்லாமாய் தியாகியாய் திகழ்பவர் அருமைப்பெருந்தகையாளர், தாராள மனம்படைத்த சட்டத்தரணி அல்ஹாஜ் எஸ். எம். ஹனிபா அவர்களே.

தமிழ் மன்றம் என்றால் தெரியாதோர், அதனைத் தமிழர் தலைமையில் இயங்குவது தமிழர் சமுதாயத்துக்குத்தான் சொந்தமானது, என்றும் கருதுவர். ஆனால், இன்று நிலைமை மாறிவிட்டது.

தமிழ், வடக்கு கிழக்கு மட்டுமல்ல நாடளாவியதாக வளர்வதற்குரிய காரணகர்த்தர்களாக இன்று நம்மவர்களே இருக்கிறார்கள் என்பதை நான் சொல்லித் தெரிய வேண்டிய தில்லை. 1970களில் இது ஒப்புக்கொள்ளப்பட்ட ஒரு முடிவாகி விட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதற்கோர் உதாரணமாக, தமிழ் வளர்க்கும் தனிப் பெரும் அமைப்பாக கல்ஹின்னைத் தமிழ் மன்றம் திகழ்கின்றது, அதிலும் பெருந்தகையாளர் அல்ஹாஜ் எஸ். எம். ஹனிபா பொருத்தமான ஒருவராவார். சன்மார்க்க, சமுதாய நூல்கள் மட்டுமன்றி பொதுவான நூல்களுமாக முஸ்லிம், தமிழ் எழுத்தாளர்களின் பல படைப்புக்களை அவர் வெளியிட்டு வருகின்றமை சிறப்புக்குரியதாகும்.

அவரின் வெளியீட்டுப் பணியின் 24வது மைல் கல்லில் நான் நிற்கிறேன். ஆகவே, மிகப் பொருத்தமான நூல் வெளியீட்டுத்துறை சாதனை வீரராக ஹாஜி எஸ், எம். ஹனிபா அவர்களை, தைரியத்தோடு குறிப்பிடுவேன்.

எல்லாமே பணத்துக்காகவுள்ள இன்றைய உலகில் தனக்கு, எல்லாமே ''புத்தகம்'' என்று கூறுமளவிற்கு பணத்தைப் பொருட்படுத்தாமல் பெருமனதுடன் நான் பேசிமுடிய முன்னர் அன்புடன் ஒப்புக்கொண்டு இதனை வெளியிட உதவியமையும் அவரின் இன்னொரு பெருந்தன்மையாகும்.

பெருந்தகையாளர் ஹாஜி எஸ். எம். ஹனிபா அவர்களே இந்த நூலின் தனிப்பெரும் சொந்தக்காரராவார். அவர் தம் தமிழ்ப்பணி இன்னும் தழைத்தோங்க மேலும் பல நூல்கள் வெளிவர வேண்டும். சமுதாயம் ஊக்கமும் உற்சாகமும் அளிக்கவேண்டும்.

கொஞ்சம் அதிகமாக உங்களோடு உரையாடுகிறேன் என்று எண்ணுகிறேன். உள்ளதைக் கூறித்தான் ஆகவேண்டும்.

இஸ்லாத்தின் நிழலில் நாள்தோறும் புதியவர்கள் சேர்ந்து கொண்டிருக்கும் இன்றைய நிலையில் இந்த யூஸுப் இஸ்லாத்தைப் பற்றி மட்டும் எழுதியதற்கும் நியாயம் உண்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னால் முடிந்த அளவு யூஸுப் இஸ்லாம் அவர்களைப் பற்றி, சமுதாயத்திற்கு முன்வைக்கக் கிடைத்திருக்கும் என்ற நம்பிக்கை இருக்கிறது. இன்னும் பலர் அவரைப் பற்றி நான் அறியாதவற்றை அறிந்திருக்கலாம். ஆயின். அவர்களும் இவ்வாறு முயல வேண்டாம் என்று கூறவில்லை.

எனது முதல் நூலுக்கு ஆசி உரை தந்த நீதியரசர் அல்ஹாஜ் எம். எம். அப்துல் காதர் அவர்கள், இந்த நூலுக்கு அணிந்துரை தந்து சிறப்பித்துள்ளார். யூஸுப் இஸ்லாம் அவர்களின் பல கருத்துக்களை பாராட்டிய அல் ஹாஜ் அப்துல் காதர் அவர்கள் அல்குர் ஆன்தான் அவரை மாற்றியது என்று தன்னுடைய அணிந்துரையில் அடித் துக் கூறியுள்ளார். பல பொறுப்பான பணிகளுக்கு மத்தி யிலும் அணிந்துரை தந்து ஆர்வப்படுத்திய நீதியரசர் அவர்களை நெஞ்சாரப் பாராட்டுகிறேன். நூலுக்குரிய அட் டைப்படம் பெருமளவு பொருத்தமாக அமைந்துள்ளது என நம்புகிறேன். அதற்குரிய பெருமை நண்பர். கவிஞர் கலை வாதி கலீல் அவர்களையும் உதவிய திரு. பெஸில் செபஸ்தி யனையும் சாரும்.

அட்டையை மட்டுமன்றி அனைத்தையும் சிறப்புற அச் சேற்றித் தந்த குமரன் அச்சகத்தாரையும் அவர்தம் பணி யையும் மெச்சுகிறேன்.

எழுதிய காரணங்களை கூறிவிட்டேன். எழுதுவதற்கு ஊக்குவித்த அனைவரையும் நினைவு கூர்ந்துவிட்டேன் என நம்புகிறேன்.

சமுதாயத்துக்கு மிகத் தேவையானவற்றை யூஸுப் இஸ் லாம் அவர்களைக் கருத்திற் கொண்டு இங்கே அடக்கியிருக் கிறேன். அந்த நம்பிக்கையில் தடையாக நிற்காது, நூலை படித்து பயன்பெறுவீர்கள் என்று நம்புகிறேன்.

''நானும் மனிதன்தான், நூல் எழுதுவதில் போதிய அனுபவமற்ற நான், இத்தகைய முயற்சி ஒன்றில் இறங்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கியிருக்கிறேன். தவறுகள் நடக்கலாம்.'' இவ்வாறு இஸ்லாமிய கலைக் களஞ்சிய வெளியீட்டுக்காக அறிஞர் அப்துற் றஹீம் அவர்கள் இலங்கை வந்தபோது கொழும்பு ஸாஹிறாக் கல்லூரியில் ஆற்றிய உரையொன்றில் குறிப்பிட்டார். ஆனல், அந்நூல் ஆசிரியரான அப்துற் றஹீமோடு அடியேனை அருகிலும் வைக்க வேண்டாம். இன்னும் பல அப்துற் றஹீம்கள் தேவைப் படாவிட்டாலும், அப்துற்றஹீமின் வாசகராகவாவது இருக்க வேண்டுமே! அதே நிலையில், என்றும் நான் இருக்கவே விரும்புகிறேன்.

இன்று அறுபதுக்கும் மேற்பட்ட அறிவு நூல்களை எழுதிவிட்டு முஸ்லிம் தமிழ் உலகிற்கு இஸ்லாமியக் கலைக் களஞ்சியம் எனும் பெரு நூலொன்றையே அறிஞர் அப்துற் றஹீம் அவர்கள் ஆக்கிக் கொடுத்துள்ளார்.

எல்லாவற்றுக்கும் காரணம் அவரின் நூல்களை, அவரே கூறுவதுபோல், வாங்கிப் படிப்பதாகும். அவ்வாறு செய்வது அவரின் அடுத்த நூலுக்கு அத்திவாரமாக அமைந்தது.

ஆகவே, என்னுடைய இந்த சிறு முயற்சியின் பெரும் பயன் நூலை வாசித்து நூலில் முன்வைத்துள்ள கருத்துக்களின் வழி வாழ்ந்து, பயன் பெறுவதாகும்.

இந்தப் பெரு நினைவில் நிறைவு செய்து விடை பெறுகிறேன்.

புகழ் அனைத்தும் அல்லாஹ்வுக்கே-அல்ஹம்துலில்லாஹ்!

சகோதரன்

அஹ்மத் முனவ்வர்

140/பி. ஹிதாயா மன்ஸில்,
கஹடோவிட்ட,
வேயன்கொட.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யூஸுப் இஸ்லாம்

## சில நினைவுகள்

இங்கிலாந்து நாட்டில் ஓர் இஸ்லாமியப் பேரொளி. இருபதாம் நூற்றாண்டின் இறுதிப் பகுதியில் இறைமறையினதும் அதன் வழி வாழ்ந்த மறை போதகர் - நபிகள் நாயகம் (ஸல்) அவர்களினதும் வழியில் மலர்ந்த ஒரு தீன் ஒளி.

மேற்கத்திய நாகரீகத்தின் ஊற்றுக்கண் - உறைகல் என்றெல்லாம் உலகம் வியந்து பேசும் நாடுதான் இங்கிலாந்து. அதன் தலைநகர் லண்டன் மா நகர். உலகத்துச் சுகங்களையும், சல்லாப நிகழ்ச்சிகளையும், உல்லாச சில்லறை இன்பங்களையும் பச்சையாக அனுபவிக்கும் பாதையோரங்களும், பட்டினங்களும், களியாட்டக் கூடங்களும், இரவுக் கேளிக்கை மண்டபங்களும், லண்டன் மாநகரில் சாதாரணம் என்று சொல்வர்.

ஐயாமுல் ஜாஹிலிய்யாக் கால மக்களின் வாழ்க்கை வழிமுறைகளா? என்று நினைக்குமளவிற்கு, இங்கிலாந்து மக்களின் நாளாந்த வாழ்க்கையில் நாற்றமெடுக்கும் நிகழ்ச்சிகள் நடந்துகொண்டிருப்பதாக நவீன உலகின் தகவல் சாதனங்கள் தெரிவிக்கின்றன. இந்த நிலையில்தான் 1948ம் ஆண்டு ஜூலை 21ம் திகதி கிறிஸ்தவக் குடும்பமொன்றில் இந்த நூலின் கதாநாயகன் - கட் ஸ்டீவன் பிறந்துள்ளார்.

பிறக்கும்போது யூஸுப் இஸ்லாம் என்பது அவர் பெயரல்ல. பிறந்து 29 வருடங்களின் பின்னர் இஸ்லாத்தின் ஒளி அவரைக் கவர்ந்ததனால் அவர் யூஸுப் இஸ்லாம் ஆனார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இசை உலகில் தனிப்பெரும் முடிசூடா மன்னராய்த் திகழ்ந்ததனால், முன்னர் சொன்ன அத்தனை நிகழ்ச்சிகளை யும் அவர் அனுபவித்திருக்கலாம். அரச வைபவங்களிலும், ராஜோபசார நிகழ்ச்சிகளிலும், தேசிய சடங்குகளிலும், தனிப்பட்ட உல்லாச இரவு விடுதிகளிலும் கட் ஸ்டீவன் கான மழை பொழிவதென்றால் முழு இங்கிலாந்துமே லயித்துப்போகுமாம்.

ஆனால் இன்று, கட் ஸ்டீவன் மேடைகளில் தோன்றுவது உண்மையான முஸ்லிம் என்ற நிலையிலென்பத னால் அவரைக் காணக் குழுமுபவர்கள் இஸ்லாமியர்கள் மட்டுமாம்.

இதுபற்றி கட் ஸ்டீவன் பெரிதாக ஒன்றும் அலட்டிக்கொள்ளமாட்டார். உலகமே தன்னை ஒதுக்கினு லும், தன்னுடைய பழைய நண்பர்கள் வெறுத்தாலும் உண்மை தெரிந்துவிட்டதால், தான் வெற்றி பெற்று விட்ட மகிழ்ச்சியில் நிமிடத்துக்கு நிமிடம் இஸ்லாமியனாக வாழ்வதிலேயே இன்பம் காண்கிறார்.

தான் புகழ்மிகு பொப் பாடகராக இருக்கும்போது கூடியிருந்த நண்பர்கள் இஸ்லாமியனாக மாறியதன் பின்னர் தன்னை ஒதுக்குவதால் தான் மேலும் பிரபல்யமாவதாகவும், தன்னை அல்லாஹ்வின்பால் அணுகச்செய்வதற்கு - குப்ரியத் தான தனது பழைய நண்பர்கள் உதவி செய்தார்கள் என்பதாகவுமே அவர் அமைதியோடு கூறுவார்.

குத்துச்சண்டையால் உலகத்தைக் கலக்கிய கசியஸ் கிளே, உண்மை தெரிந்து முஸ்லிமானபோது - அமெரிக்கா தன்னை ஒதுக்கியதனால் தான் மேலும் உயர்ந்துவிடுகின்றேன் என்று கூறிய முஹம்மத் அலியையும் இங்கே ஒருமுறை நினைவு கூர வேண்டும்.

வல்லரசுச் சக்தியில் முன்னணி நிற்கும் அமெரிக்கா, வியட்நாம் போருக்காக முஹம்மத் அலியை அழைத்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போதுகூட அதனை உதறித் தள்ளிவிட்டு, இஸ்லாத்தையே உயர்ந்த இலட்சியமாகக்கொண்டு உழைப்பதாக வல்லரசுக்கு சவால் விடுத்தார்.

சந்திர மண்ணில், முதல் கால் பதித்த நீல் ஆம்ஸ்ரோங்கிற்கும் இதே நிலையாம். அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் பயமுறுத்தலும், சவாலும் தடையாக அமைந்ததோ என்னவோ அந்த ஆம்ஸ்ட்ரோங் பற்றிய பேருண்மையொன்றை உலகம் தன் கருவறைக்குள் வைத்துக்கொண்டு இன்னும் இருட்டடிப்புச் செய்கிறது. எனினும் என்றுவது இவ்வுண்மை தெரியாமலா போகும்?.

இங்கு கூறவந்தது, இஸ்லாத்தின் பலம் வெளிப்படும் போது ஆம்ஸ்ட்ரோங் என்ன, அகிலமே ஒளிபெற்று உண்மையை உணர்ந்து திருந்தும் என்பதைத்தான்.

கட் ஸ்டீவன்ஸ்களை, அல்லது கசியஸ் கிளேக்களை, அனுப்பி அல்லாஹ் அவனது மார்க்கத்தைப் பாதுகாப்பான், பரப்புவான் என்ற அல்குர்ஆனின் சூசகமான கருத்தொன்றையும் நினைத்துப் பார்க்க வேண்டியுள்ளது.

இவையனைத்தையும் உங்கள் சிந்தனையில் முன் வைத்துவிட்டு பெரியார் யூஸுப் இஸ்லாதைப் பற்றி நேரிலும், அவர் மூலமாகவும் கண்டு கேட்டு, அனுபவித்தவைகள் பற்றியும், அவரே தன்னைப்பற்றி முஸ்லிமான போது வெளியிட்ட, ''என் மார்க்கம் இஸ்லாம்'' என்ற சிறு நூல் ஒன்றின் துணையோடும் சில நினைவுகளை எழுதுகிறேன்.

கவிஞர் நஸ்ருல் இஸ்லாத்தை நம் நாட்டுக் கவிகள் உட்பட ஒரு சில இலக்கிய ஆய்வாளர்கள் ஏற்றிப் போற்றுகின்ற அளவிற்கு யூஸுப் இஸ்லாத்தை ஏன் நம்மவர் அறியககூடாது என்பதுவும் எனது ஆதங்கமாகும். நஸ்ருல் இஸ்லாத்தின் பாடல்கள் காலத்தைப் படம் பிடித்துக் காட்டுகின்றன. சமுதாய நீதியை சித்தரிக்கின்றன. ஆனால், அங்கே சன்மார்க்கப் போதனை எத்தகைய அளவிற்குத் தொக்கி நிற்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கும் என்பதை இங்கே தொட விரும்பவில்லை. மாறாக யூஸுப் இஸ்லாத்தின் கருத்துக்கள் இஸ்லாத்தையும் மனித வாழ்க்கையின் வெற்றிக்கான மார்க்கத்தையும் காட்டுகின்றன. இந்த வகையில் யூஸுப் இஸ்லாத்தை முஸ்லிம் சிந்தனையாளராகவும் நம் சமுதாயத்துக்கு இன்று தேவையாகியுள்ள நல்லதொரு சீர்திருத்த வாதியாகவும் குறிப்பிடலாம்.

இஸ்லாத்தின் எந்த இயக்கம் அல்லது எது உங்களை இஸ்லாத்தின் மீது பற்றுக்கொள்ள வைத்தது என்று கேட்டபோது அவர் குறிப்பிடுவது எந்தவொரு இயக்கத்தையோ அல்லது இன்றைய முஸ்லிம்களையோ அல்ல. மாறாக தனது தமையனார் 1975ம் ஆண்டு ஜெருஸலம் சென்று வரும்போது கொண்டுவந்த அல்குர்ஆன் பிரதியையே காரணமாக அமைதியோடு கூறுவார்.

இந்த இடத்தில் இரண்டு விடயங்களைக் குறிப்பிடாமல் இருக்கமுடியவில்லை. ஒன்று முஸ்லிம்களைப்பற்றியும், இஸ்லாத்தைப்பற்றியும், மேற்குலகப் பேரறிஞரான பெர்னாட்ஷா அவர்கள் தெரிவித்த கருத்து. அவர் கூறினார்: 'உலகின சிறந்த பொருள் எதுவென்று கேட்டால் அது இஸ்லாமென்பேன். அதே நேரம் இழிவான பொருள் எதுவென்று கேட்டால் முஸ்லிம்களென்பேன்'' என்கின்றார். இதனைக் கேட்டு வேதனைப்படும் அதேவேளை கட் ஸ்டிவன் இஸ்லாத்தைத் தழுவினார் பெர்னாட்ஷா இஸ்லாத்தைத் தழுவவில்லை. அது ஏன் என்ற வினாவிற்குரிய விடையை கண்டறியும் கடமையை உங்கள் முன் விடுக்கிறேன்.

யூஸுப் இஸ்லாம் அவர்களும் ஒருவேளை அல்குர்ஆனை படிக்காது முஸ்லிம்களை உதாரணமாகக் கொண்டால், அல்லது முஸ்லிம்களைப் பின்பற்றினால், இன்னும் பெர்னாட்ஷாவாகவே இருந்திருப்பார். அதே பொப் பாடகராகவும், அநாகரீகத்தின் இருப்பிடமாகவுமே இருந்திருப்பார். யூஸுப் இஸ்லாத்தின் விடயத்தில் அல்லாஹ்வின் நாட்டம் வேறுமாதிரி அமைந்து விட்டது.

அல்குர்ஆனில் அல்லாஹ் கூறுகிறான் ''இஸ்லாத்தைப் பாதுகாக்க நீங்கள் தயாராக இல்லையென்றால் ஒரு சமுதா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யத்தை உருவாக்கி அதனைப் பாதுகாப்போம்'' என்று. இங்கே தான் சிந்திக்கவேண்டியவர்களாக இருக்கிறோம்.

இங்கு யூஸுப் இஸ்லாம் என்ற தனிமனிதன் கொடுக்கும் ஒரு சிறு விளக்கம்போல பரம்பரை முஸ்லிம்கள் என்று பெருமை பேசும் இன்றைய முஸ்லிம்களால் மட்டுமல்லாது. உலமாக்களால்தானும் முடியுமா? என்பதுதான், கேள்வி.

## "நமக்குள் ஒரு நல்லவர்"

யூஸுப் இஸ்லாம் அவர்களைப்பற்றி இலங்கைக்கு அறிமுகஞ் செய்துவைக்கவேண்டும் என்று நான் எண்ணியதற்கு இன்னும் பல காரணங்கள் கூற வேண்டும்போல் உள்ளது. உத்தமத் தூதர் (ஸல்) அவர்களின் உம்மத்துக்கள் என்று கூறும் நம்மிடம் இஸ்லாமிய நடைமுறைகள் உள்ளனவா என்று உரக்கச் சத்தமிட்டுக் கூறவேண்டும் என்ற ஓர் உணர்வு யூஸுப் இஸ்லாத்தைப் பார்த்தபோது என்னில் எழுந்தது.

இந்த நேரத்தில், உம்மத்துக்களில் நடமாடும் ஒரு நல்லவராய் யூஸுப் இஸ்லாம் அவர்களை நான் எண்ணிப்பார்த்தேன், அவர் இலங்கையில் இருந்தபோது ஆற்றிய ஆழ்ந்த சொற்பொழிவுகளைக்கேட்ட பலரும் எனது இந்தக் கருத்தோடு ஒத்துப்போவர் என நம்புகிறேன்.

நல்ல மனிதனை உலகில் நான் தேடுகிறேன். எனக்கு நல்ல மனிதன் ஒருவரைக் காட்டுங்கள் என்ருல், யாரைக்காட்டுவது? முஸ்லிம்களைத்தான் காட்ட வேண்டும். ஆனால் எந்த முஸ்லிமைக்காட்டுவது என்பது பிரச்சினையாகும். மாருக, யூஸுப் இஸ்லாம் அவர்கள் இந்தப் பிரச்சினைக்குரிய பரிகாரமாகும்.

இஸ்லாத்துக்கு வரமுன்னர் உலகில் புகழ்பூத்த பாடகராக பாராட்டுப் பெற்றிருந்தாரே தவிர நன்னடத்தைமிக்க மனிதன் என்ற பாராட்டை பெற்றிருக்கவில்லை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகின் கொடிய பழக்கவழக்கங்களுக்கு அடிமையாகி இருந்தார், ஒருவருக்கு ஐரோப்பாவின் உல்லாசபுரி எனப்படும் லண்டனில் பணமும் பொருளும் வாய்க்கப் பெற்று, சுதந்திரமாக நடமாடக் கிடைத்தால் எவ்வாறு இருந்திருப்பார் என்று கற்பனை செய்து பாருங்கள். கட் ஸ்டீவன் ஆன யூஸுப் இஸ்லாமும் அந்த நிலையில்தான் இருந்தார்.

இஸ்லாத்தைத் தழுவியதனால் அவர் நமக்குத் தேவையான, நாம் தேடும் நல்ல மனிதராக மாறிவிட்டார். சாதாரணமாக எந்தத் தவறு செய்தாலும் மனிதன்தானே என்று சாட்டுச் சொல்வது இன்று சகஜமாகிவிட்டது. தவறு செய்யாதிருப்பதற்கு மனிதன் ஒன்றும் மலக்கல்ல. என்றும் கூறப்படும். ஆனால், தொடர்ந்தும், திருப்பித் திருப்பி ஒரே தவறை செய்துகொண்டிருப்பவனும், திருந்தாமல் இருப்பவனும், மனித உருவமுடையவன் மட்டுமாவான், அவன் ஒருபோதும் மனிதனாக முடியாது. மனித உருவில் நடமாடும், மிருகம் என்றுதான் கூறப்படும்.

ஆயின் யூஸுப் இஸ்லாமும் முன்பு மனிதனாக இருந்தார் இப்போதும் மனிதனாகவே உள்ளார். ஆனால் அவர் திருந்திய மனிதர். நாம் திருந்தாத மனித மிருகங்கள். எனவே, அவர் நமக்குள், இந்த உம்மத்துக்களுக்குள் ஒரு நல்லவராய் உயர்ந்துவிட்டார்.

ஐவேளையும் தொழுது கொண்டு தானும் தனது பிள்ளைகளும் குடும்பமும், என்று தனது உழைப்பால் கிடைக்கும் சில்லறை வருமானத்தைக்கொண்டு காலம் தள்ளிக்கொண்டிருக்கும் எனது கொழும்பு நண்பரொருவரிடம் யூஸுப இஸ்லாம் அவர்களைப் பற்றிக்கேட்டேன்.

''அதுதானே பாருங்களேன். உண்மையிலேயே அவர் ஸஹாபி போன்றவர் அல்லவா'' என்று தன்னை மறந்து கூறினார். என் மெய் சிலிர்த்துப்போய் அப்படிக்கூற வேண்டாம் அது தவறு, ஸஹாபாக்களின் அந்தஸ்துக்கு அவுலியாக்களைக்கூட நமக்கு ஒப்பிட முடியாது என்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''நல்லாய்ச் செல்கிறீர்கள். அவுலியாக்கள் என்ன. இன்று எத்தனை வேஷதாரிகள்,'' என்றவாறு கேட்டுவிட்டு, சில இடங்களில் நடக்கும் அனுச்சாரங்களை எடுத்துக்காட்டி ரோஷப்பட்டார். நண்பரைப் பொறுமையாக்கி, அநியாயம் அனுச்சாரம் நடக்கும் இடங்களில் அவுலியாக்களும் அல்லாஹ்வின் மீது அன்புக் குரியவர்களான அந்த இறைநேசர்களும் அடங்கப்பட்டிருப்பதாக கூறிக் கொள்வதில் அர்த்தமில்லை என்று நகைச் சுவையாகக்கூறி நண்பரை ஆஸுவாசப்படுத்தினேன்.

அப்படியாயின் யூஸுப் இஸ்லாத்தின் வருகை அவுலியாவைவிட மிஞ்சிவிட்டதில்லையா? என்று மீண்டும் அவர் கேட்டார்.

ஆம். நிச்சயமாக அவரின் தோற்றமும், நடையும், உடையும், மூச்சும் பேச்சும் அனைத்துமே இஸ்லாமாக இருக்கும் போது, அவர் ஒரு அவுலியா அல்ல. நமக்குள் நடமாடும், சரித்திரங்களில் படிக்கும் ஒரு ஸஹாபி போன்றவர் என்று கூறி மகிழ்ந்தார்.

சாதாரண ஒரு மனிதரின் தாக்கம் எவ்வளவு ஆழமாக உள்ளது என்பதைத்தான் இங்கு சிந்திக்கவேண்டியுள்ளது. யூஸுப் இஸ்லாம் அவர்களின் வருகை அவ்வளவு சிந்தனையை ஏற்படுத்தியுள்ளதையே இங்கு வலியுறுத்துகிறேன். இப்படிப் பல சம்பவங்கள் கூறலாம்.

## மறக்க முடியுமா?

இராமகிருஷ்ண மண்டபத்தில் அவர் உரை நிகழ்த்தி விட்டு சில கேள்விகளுக்கு பதிலளித்துக்கொண்டிருந்த அந்தச் சுறுசுறுப்பான சந்தர்ப்பம்கூட மறக்க முடியாத நினைவாகும்.

அங்கே, விளக்கம் தேவையானோர் பேச்சில் இருந்து வினாக்கள் தொடுக்கலாம் என்று அறிவிப்பு ஒலித்தது. நான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முந்தி. நீ முந்தி என்று பத்திரிகைத் துண்டுகள் மேடையை நோக்கிப் பறந்தன. பல கேள்விகள். அனைத்தும் ஒன்றை யொன்று மிஞ்சும் கேள்விகள். மிக அமைதியாக, அதே நேரம் தெளிவாக அதிலும் திருப்தியான முறையில் புன் முறுவலுடன் யூஸுப் இஸ்லாம் பதிலளித்தார். பதிலளித்த பாங்கு பலரிடையே மேலும் கேள்விகள் கேட்க வேண்டும் என்ற ஆசையைத் தூண்டியது.

இடையில், அவர் இன்றிரவு பத்து மணிக்குப் பயணமாக வுள்ளார். நீங்கள் கேள்விகளைத் தாருங்கள், லண்டனில் இருந்து பதில் பெற்றுக் கொள்ளலாம் என்றவாறு அறிவித் தல் ஒலித்தது. ஒன்பது மணிக்கு உரை முடிந்தது. கூடியிருந்த சனத்திரள் மெல்ல மெல்லக்கலைகிறது ஒருவரையொருவர் மலர்ந்த முகத்தோடு பிரிகின்றனர்.

தனியாக தனது சொற்பொழிவுக்கும் அளித்த பதில்க ளுக்கும் அல்குர்ஆனையும், அல்ஹதீஸையும் மட்டுமே ஆதார மாகக் கொண்டு அவர் நடந்துகொள்ளும் போது, கேள்விக்கு மேல் எத்தனை ஆயிரம் கேள்விகள் அல்லது கேள்விக் கணை தான் வந்தாலும் அவையனைத்துக்கும் நிச்சயம் தக்க பதில் களே அளிக்கப்பட்டன என்பதையே இங்கு குறிப்பிட வேண்டும்.

தனது அரிய சொத்தாக உயிரிலும் மேலான ஒன்றாக தான் இந்த உலகில் கருதும் பொருள் இருக்குமானால் தனக்கு நிம்மதியையும், அமைதியையும் அளித்து, ஈடேற் றத்தைக் கொடுத்த அல்குர்ஆனைத்தான் அவர் குறிப்பிடு வார். இராமகிருஷ்ண மிஷன் மண்டபத்தில் அவரின் பேரு ரையை பொறுமையோடு மக்கள் கேட்டு மகிழ்ந்தனர். அதே நேரம் மக்கள் ரசித்தனர், என்று கூறலாம். ஏனெனில் தனக்கே உரித்தான மதுரக் குரலில் அவர் அல்குர்ஆன் வசனங்களை தனதுரைக்கு மேற்கோள் காண்பித்த போது அழகுற ஓதிக்கொண்டே சென்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தத் தன்மை கேட்போருக்கு மிக அழகான பாடல் ஒன்றைக் கேட்பதுபோல் இருந்ததாகப் பலரும் கூறிய தைக் கேட்க முடிந்தது.

அல்குர்ஆனை சில மௌலவிகள் மேற்கோள் காட்டிப் பேசும்போது வெறுமனே வாசிப்பது போன்றிருக்கும்.

இன்று யூஸுப் இஸ்லாம் அவர்கள் அல்குர்ஆனை மேற்கோள் காட்டும்போது அதனை அழகுற ஓதிக் காண்பிப்பது நமக்கோர் முன்மாதிரியாகும். வெறும் பாடல் ஒன்றை உலகப் புகழ்மிகு பாடகர் ஒருவர் பாடும் போது, மக்கள் எவ்வாறு ரசிப்பாரோ அதேபோன்று அல்குர்ஆனை இந்தப் புகழ் பாடகர், கருவி எதனதும் துணையின்றி அழகுற தனது இன்பக் குரலால் ஓதிக்கொண்டே தன் பேருரையை நடத்திச் சென்றார்.

இராமகிருஷ்ண மிஷனில் ஒலித்த கேள்விகளுள் முக்கிய மான இரண்டு பற்றி இங்கு நினைவு படுத்துவது கடமையெனக் கருதுகிறேன்.

ஒரு வினா:- இன்று முஸ்லிம்கள் பொதுவாக பிறந்தநாட் கள் என்றும் திருமண விழாக்கள் என்றும் பல்லாயிரக் கணக் கான ரூபாய்களைச் செலவு செய்து கொண்டாடுகிறார்கள். இது பற்றி இஸ்லாம் என்ன கூறுகின்றது? உங்கள் கருத் தென்ன?.

"ஆம் பிறந்த நாள் என்று ஏன் பெரிதாக சிந்தனைப் போட்டு உடைத்துக்கொள்ள வேண்டும். மனிதன் ஒருமுறை தான் பிறக்கிறான். ஒருமுறைதான் இறக்கிறான் இதற்கிடை யில் ஒவ்வொரு முறையும் பிறந்த நாள் கொண்டாடுவதா யின் அவன் ஒவ்வொரு முறையும் பிறக்கிறான் என்பதுதான் அர்த்தம். ஆனால் அவ்வாறில்லையே.

அதேபோல் பலமுறை இறக்கிறானா?. பிறக்கச் செய்பவ னும், இறக்கச் செய்பவனும் அல்லாஹ்தான். என்பதுவே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இஸ்லாத்தின் அடிப்படை. எந்தவொரு இடத்திலாவது குர் ஆனுவது கூறுகிறதா? பெரு விழாக்களையெடுத்து பிறந்த நாளையோ, திருமண விழாக்களையோ கொண்டாடுங்கள் என்று. இதற்கிடையில் வெறும் மேற்குலக வெள்ளைக்காரர் கள் விட்டுச் சென்ற பழக்க வழக்கங்களுக்கு முஸ்லிம்கள் அடிமைப்பட்டுப் போயுள்ளதால்தான் இவ்வளவு சிரமம் ஏற்பட்டுள்ளது.

அவர்களைப்போல் திருமணமும் ஏனைய சடங்குகளுக்கும் வீணுகப் பணத்தை அள்ளி இறைத்து நாம் நம்மைச் சிரமப் படுத்திக் கொள்பவர்களாக மாறியுள்ளோம். இஸ்லாம் சிக் கனமான திருமணத்தையே விரும்புகிறது. ஸஹாபாக்களின் திருமண முறைகளை நினைத்துப் பாருங்கள். அதேவேளை வீண் விரயம் செய்பவர்கள் ஷெய்த்தானின் நண்பர்கள் என்று நபி மொழி கூறுகிறது. அல்குர்ஆனும் உண்ணுங்கள், பருகுங் கள், வீண் விரயம் செய்யாதீர்கள் என்று அருளுரை பகர் கின்றது. இவற்றை நாம் மறந்துவிட்டு, வெறும் மேற்குலக வெள்ளைக்காரர்களின் பழக்கங்களுக்கு அடிமையாக இல் லையா? என்று, அந்த வெள்ளைக்கார யூஸுப் இஸ்லாம் கேட்டார்.

**மறு வினு:-** நவீனஉலகில் இன்று உலமாக்கள், மௌலவி மார்கள் தொலைக் காட்சி நிகழ்ச்சிகளில் தோன்றுவது பற்றி என்ன கூறுகிறீர்கள்?

**பதில்:-** இது நவீன உலகு. விஞ்ஞானம் மனிதனது வீட் டுக்குள் வந்துவிட்டது. உலகை ஒரு குடும்பமாக மாற்றி விட்டது. இந் நிலையில் விஞ்ஞானத்தின் கண்டுபிடிப்பாக, டி.வி. இருக்கும்போது அதே கண்டுபிடிப்பு அழிவுப் பாதைக்கு இட்டுச் செல்வதாயின் அதை நாம் புறக்கணிக்கலாம். ஆக் கப் பாதைக்கு இட்டுச் செல்வதாயின் அதை நாம் பயன் படுத்தலாம். எந்த விஞ்ஞானக் கண்டுபிடிப்பும் குர்ஆன் கூறிய விஞ்ஞானத்தை மிஞ்சியதாக இல்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குர்ஆனின் விஞ்ஞானக் கூற்றுக்கள் எதுவும் பொய்ப்பிக் கப்படவும் இல்லை. பொய்ப்பிக்கப்படப் போவதுமில்லை.

இந்நிலையில் அல்லாஹ் அறியாமல் அணுவும் அசையாது என்றிருக்கும்போது நாம் ஏன் மனித முயற்சிகளுக்கு அஞ்ச வேண்டும்? சன்மார்க்கத்துக்கு முரண் இல்லாத வகையில் சமூக அழிவுக்கன்றி - ஆக்கத்திற்காக எந்த விஞ்ஞானமும் உதவுமாயின் அதனை வரவேற்கலாம். அதுவே புத்தி பூர்வ மானதாகும்.

மிகவும் கடுமையான நிகழ்வாக நடந்துமுடிந்த இராம கிருஷ்ண மிஷன் மண்டப நினைவுகளுள் இன்னொன்று, மண்ட பத்துக்கு எதிரே உல்லாச ஹோட்டலில் தங்கியிருந்த வெளி நாட்டு வெள்ளைக்காரர்கள் பலரும் சட் ஸ்டீவனின் வரு கையைப்பற்றி அறிந்திருந்ததனால் அவரை அங்கு காண வந் திருந்த பாங்காகும்.

ஒருவரோடொருவர் பேசி மகிழ்ந்து, மேடையருகே அந்த உல்லாசப் பிரயாணிகள் அமர்ந்திருந்தனர். கேள்வி நேரத் தின்போது அவர்களின் ஆர்வத்தை அறிய விழைந்தேன். அவர்களும் ஒரு சில வினாக்களை கேட்க விரும்பினர்.

கிறிஸ்து மதம்பற்றி உல்லாசப் பிரயாணி ஒருவர் கேட்ட கேள்விக்கு தக்க விளக்கம் ஒன்றை யூஸுப் இஸ்லாம் கொடுத்தார். "இஸ்லாம் ஏனைய மதங்களையும், முன்னைய நபிமார்களான மத போதகர்களுக்கு அருளப்பட்ட வற்றை யும் நம்புமாறு கூறுகிறது. அதே நேரம் புர்கான் வேதத் தின் வருகையால், அந்த வேதங்கள் மாற்றப்பட்டன. இதுவே இஸ்லாத்தின் கொள்கையாகும்" இவ்வாறு இரத் தினச் சுருக்கமான பதிலை அளித்தபோது கேள்விகேட்ட கிறிஸ்தவ உல்லாசப் பிரயாணி ஒப்புக்கொண்டார்.

இங்கிலாந்து, நெதர்லாந்து, டென்மார்க், சுவீடன் பெல்ஜியம் நாடுகளின் வெள்ளைக்கார முஸ்லிம் அல்லாத உல்லாசப் பிரயாணிகள் ஆண்களும், பெண்களுமாக பலர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்போது அங்கிருந்தனர். அவர்களுள் ஒரு சுவீடிஷ் பொறியியலாளர் பெண்மணியும், லண்டன் பல்கலைக்கழக மாணவியர் இருவரும் அங்கிருந்தனர்.

லண்டனில் பெருங் கூட்டத்திற்கு மத்தியில் இசை நிகழ்ச்சிகளில் இசை விருந்தளிக்கும் கட்ஸ்டீவன் இன்று இங்கு முஸ்லிம் கோலத்தில் இஸ்லாமியப் பணி புரிவதை அறிந்து அவர்கள் வியந்து பேசிக் கொண்டனர்.

பல்வேறு வகைப்பட்ட கேள்விகளுக்கும் இஸ்லாத்தின் அடிப்படையில் பதிலளித்துக் கொண்டிருந்த யூஸுப் இஸ்லாத்திடம் அவர்களும் இரு விளக்கங்களைக் கேட்டனர். அதற்கிடையில் அவர்களின் ஆவலையும் ஆர்வத்தையும் கண்ட நான் அருகே சென்று சிறு விளக்கம் பெற்றேன்.

தங்கள் ஊர், பெயர், யார், எவர், தொழில் என்பவற்றையெல்லாம் மிகவும் அவசரமாகக் கூறிவிட்டு, கட்ஸ்டீவன் அவர்களின் கருத்தைக் கேட்பதிலேயே ஆர்வமாயினர். லண்டனில் பெரும் மேடைகளில் 70 களில் புகழ் பெற்றுத் திகழ்ந்த கட் ஸ்டீவன் இங்கே இஸ்லாமியக் கோலத்தின் தாடியோடும் ஜுப்பாவோடும், பஞ்சாப் மனிதத் தோற்றத்திலிருப்பதைக் கண்டு தம் கண்களையே நம்ப முடியவில்லை என்றும், இவ்வளவு நல்ல மனிதரை, மத போதகராக மாறியிருப்பது உண்மையிலேயே உலக அதிசயமாகும் என்றும் அது "கோட்" (இறைவன்) செயல் என்றும் அவர்கள் கூறி மகிழ்ந்தனர்.

சுவீடிஷ் பெண் பொறியியலாளர் அவசரப்படவே, தாம் நேராக லண்டன் போவதால் அங்கு சந்தித்துக் கொள்வதாக முடிவு செய்தார். இதற்காக அவர் ஒரு துண்டில் யூஸுப் இஸ்லாம் அவர்களின் லண்டன் முகவரியை எழுதிப் பெற்றுக் கொண்டார்.

இலங்கையில் தங்கியிருந்த நான்கு நாட்களிலும் யூஸுப் இஸ்லாத்தை முழுதாக அறிந்து புரிந்து கொள்ள முடிந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெரு மகிழ்ச்சியில் அங்கிருந்து குழுமிய ஆயிரக்கணக்கான சமுத்திரத் துளிகளுள் ஒரு துளியாக கலந்து வந்தேன். அவர் தங்கியிருந்த வெள்ளவத்தை ஹோட்டலுக்கு எப்போதும் போல் சன்மார்க்க சமூக, விடயங்களில் அல்லும் பகலும் உழைக்கும் வள்ளல் பிரமுகரின் பச்சைக்காரில் வந்து சேர்த்தேன்.

## அமைதியைத் தேடி இப்படியும் நடந்தார்!

''பிரேசில் நாட்டுக்குச் சென்றேன். அங்கே ஆண்டுக்கொருமுறை அந்த நாட்டு மக்கள் கடற்கரையோரமாய் நாட்டின் அமைதிக்கும் அபிவிருத்திக்குமாக கடலிடம் பிரார்த்தனை புரிவது வழக்கமாகும். அந்தக் கடற்கரையோரமாய் மன அமைதியை வேண்டி நானும் தனியாக நடந்தேன்.

அப்போது எனக்குள் ஒரு போராட்டம். என் கொடிய போக்கில் இருந்து மீட்சி பெற வழியில்லையா? என்று ஏங்கினேன். அந்த வேகத்தில் நான் ஜெர்மனி போனபோது பெற்று வந்த என் விருப்பத்துக்குரிய கைத்தடியை கடலில் வீசினேன். ''நான் தேடும் மன ஆறுதலை, வாழ்க்கையின் விடிவை நீயாவது எடுத்துவர மாட்டாயா'' என்று அந்தத் தடியிடம் கூறி அப்போது கடலிடம் கேட்டது போல் இருந்தது.

மனதில் என் போராட்டங்களுக்குரிய காரணங்களைப் பற்றிச் சிந்திக்கத் தலைப்பட்டேன். எனது பிரேஸில் விஜயம் மன அமைதியை தேடுவதற்குரிய தூண்டுதலாக அமைந்தது.''

(கொழும்பு தப்லீஃ ஜமா அத் தலைமையகத்தில்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## "இருந்த ஒன்றை இழந்தால் மீளப் பெறப் போராட வேண்டும்"

பத்திரிகையாளர் மாநாட்டின் போது 12-20க்கு ளுஹர் தொழுகையை நினைவுபடுத்தி பாங்கு ஒலிக்க வேண்டுமே, அஸான் கேட்கமாட்டாதா என்று பக்கத்திலிருந்த பள்ளிவாயல் ஒன்றை சுட்டிக் காட்டி, அமைதியோடு கேட்டார் யூஸுப் இஸ்லாம் அவர்கள், பள்ளிவாயலில் ஒலி பெருக்கி இல்லையா..? என்றவாறும் கேட்டார்.

பக்கத்தே இருந்த நான் அது பழுதாகியிருக்கலாம், ஆமாம் என்றவாறு, எதற்கும் தலையசைத்துப் பழகிய நாம் அதற்குரிய பதிலையும் அவ்வாறே கூறினோம்.

விடயத்தைத் தெரிந்த ஒரு சகோதரர், "அதுவல்ல காரணம் முன்பு அஸான் கூற ஒலிபெருக்கி பாவிக்கப்பட்டது. இன்று அதற்குத் தடை போடப்பட்டுள்ளது. அதனால்தான் நேரத்துக்கு பாங்கு கூறினாலும் இங்கு கேட்க முடியவில்லை" என்று பதிலளித்தார்.

இதனைக் கேட்ட யூஸுப் இஸ்லாத்தின் கறுத்த புருவம் இரண்டும் ஒரு முறை சிலிர்த்துப் போயின. கண்கள் ஆத்திரத்தால் சிவந்து போயின. "ஏன்? முன்பு இருந்த ஓர் உரிமையை இப்போது இழந்துவிட்டீர்கள். புதிதாக ஓர் உரிமைக்காகப் போராடுவதை விட இருந்த உரிமையை இழந்தால் அதனைப் பெறுவது, அதற்காகப் போராடுவதுதான் ஜனநாயகம்" என்றவாறு ஜனநாயகத்தின் உறைவிடம் என்று புகழப்படும் இங்கிலாந்தில் பிறந்த மனிதன் அந்த யூஸுப் இஸ்லாம் தமக்கே உரிய தூர சிந்தனைத் தன்மையோடு கூறினார்.

"என்ன செய்ய! இலங்கையில் எமது துரதிர்ஷ்டம் இவைகள்" என்றவாறு ஒரு பத்திரிகை நண்பர் சாக்குக் கூறினார். "அதுவல்ல நீங்கள் கோழைகள் என்று கூற இடம் வைக்காது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதற்காகக் குரல் எழுப்ப வேண்டும். புதிதாக ஓர் உரிமைக்கோ சலுகைக்கோ போராடுவதைவிட இருக்கும் உரிமைகளையும், சலுகைகளையும் இழந்து விடாமல் பாதுகாத்துக் கொள்வது புத்தி பூர்வமானது'' என்றார் யூஸுப் இஸ்லாம். ''என் செய்வது ஸேர்!... அல்லாஹ் தான் போதுமானவன்'' என்றவாறு நான் சொன்னேன். யூஸுப் இஸ்லாம் இன்னொன்றைச் சொன்னார்!

''இலங்கை முஸ்லிம்களுக்கு நான் சொல்லும் செய்தி என்னவென்றால் தொழுகையை தவறாது பின்பற்ற வேண்டும் என்பதாகும். பாங்கினை கூடுதலாக ஒலிக்கச் செய்ய வேண்டும். பாங்குதான் அதிகமதிகம் ஒலிக்க வேண்டும். பாங்குதான் இஸ்லாத்தின் சின்னமாகவும் திகழ்கின்றது, பாங்கும் தொழுகையும் இஸ்லாத்தின் அடிப்படையாக அமைந்திருக்கிறது. பெரிய பிரித்தானியாவில் 15 இலட்சம் முஸ்லிம்கள் இன்று வாழும் இரகசியமும் அதுதான், 10 வருடங்களுக்கு முன்னர் 30 பள்ளிவாசல்களில் ஒலித்த அஸான், இன்று 500க்கும் அதிகமான பள்ளிவாயல்களில் ஒலிக்கின்றது. பள்ளிகளாக மாறிய பழைய கிறிஸ்தவ ஆலயங்களிலும் பாங்கு ஒலிக்கின்றது. ஆகவே, இலங்கை முஸ்லிம்கள் தமக்கு இருந்த ஓர் உரிமையை இழந்துவிடுவார்களேயானால், அது முஸ்லிம்களின் இயலாமையை எடுத்துக் காட்டுவதாகலாம்.''

## ''தவறைக்கண்டால் உடனே திருத்துவார்''

பத்திரிகையாளர் மாநாட்டின்போது ஒரு பணிவான வேண்டுகோள் விடுக்கப்பட்டது. அல்குர்ஆனின் ஏதாவது ஒரு பகுதியை ஓதிக் காண்பிக்க வேண்டும் என்பதே அந்த பணிவான வேண்டுகோளாகும். நல்லது என்று அவர் மகிழ்ந்தார். புன்முறுவல் பூத்தார். ஒருமுறை கனைத்தார். அப்போது உலகப்புகழ் காரிகள் அல்குர்ஆனை ஓத முற்படும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போது, போடும் கனைப்புக்களும் நினைவில் வந்தன. எனினும் யூஸுப் இஸ்லாம் குரலினிமை மிக்க உலகப் புகழ் பாடகர் அல்லவா? ஆயின், அல்குர்ஆனை ஓதுவதற்கு குரல் இனிமையைத் தருவித்துக்கொள்ளும் தன்மை கனைப்பின் மூலம் வெளிப்படுவதை உணர முடிந்தது.

சூரா பாத்திஹாவை மிக்க பயபக்தியுடன் தொடங்கினார், பார்த்துக்கொண்டு வியந்துப்போன நம்மால் ஒரு முறை அப்படியே அள்ளி அரவணைக்க வேண்டும் போல் இருந்தது. இதற்கிடையில் பாத்திஹா சூராவை ஓதும்போது பக்கத்தே இருந்த நண்பர்களுள் இருவர் ஏதோ மெல்லியதாக குசுகுசுத்தார்கள். ஓதி முடிந்ததும் நண்பர்களை நோக்கி யூஸுப் இஸ்லாம், முகத்துக்கே சொல்லிக் காட்டினார். "அல் குர்ஆன் ஓதப்படும்போது கதைக்கிறீர்களே! அதன் கருத்து தெரியாவிட்டால் அது ஓதப்படும் போதாவது கேட்டுக் கொண்டிருப்பதற்கும் பல நன்மைகள் உண்டு. என் அலட்சியமாக நடந்துகொள்கிறீர்கள். அல்லாஹ்வின் பேச்சாகிய அல்குர்ஆனை அவமானப்படுத்த வேண்டாம்" இவ்வாறு, அந்தப் பெருந்தகையாளர் யூஸுப் இஸ்லாம் நண்பர்களுக்கு பணிவோடு அறிவுரை பகன்றார்.

இராமகிருஷ்ண மிஷனில் சிறப்புரையாற்றிய தன் பின்னர் கேள்விக்குமேல் கேள்விகள். ஒருவரின் புதுமையான கேள்வி, எல்லோரையும் அது கவர்ந்தது. "தயவு செய்து மிக இனிமையான குரல் வளத்தால் பாடிப் புகழ் பெற்ற நீங்கள் அல்குர்ஆனையும் அந்தக் குரல் இனிமை மூலம் இசைத்துக் காட்டுவீர்களா?" கூட்டத்தின் தலைவர், யூஸுப் இஸ்லாம் அவர்களிடம் கேள்வியை அறிவித்தார்.

"ஆம் என்று உடன்பட்ட யூஸுப் இஸ்லாம் உடனே இன்னொன்றை தெளிவுபடுத்தினார். தவறு என்று சொல்லாவிட்டாலும் திருத்திக்கொள்ளுங்கள்" என்று சுட்டிக்காட்டினார். "அல்குர்ஆன் பாடப்படுவதற்குரிய ஒன்றல்ல. இசை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைத்து மகிழ்வதற்கு அங்கே அலங்காரங்கள் எதுவும் இல்லை. "ஸிங்" பண்ணிக்காட்டுவதற்கு அல்குர்ஆனைப் பயன்படுத்துவது எவ்வளவு அறிவீனம், அது ஓதப்படுவதற்காகும். "ரிஸைட்டிங்" என்றே கூற வேண்டும், ஆகவே, உங்கள் கருத்தை மாற்றிக்கொள்ளுங்கள்" இவ்வாறு கூறிவிட்டு அல்குர்ஆனை அழகுற தஜ்வீத் முறைப்படி அனைத்துத்தன்மைகளும் அமையப்பெற்றதாக ஓதிக்காண்பித்தார். அப்போது மண்டபத்திலே ஊசி விழுந்தாலும் கேட்கக்கூடிய அமைதி நிலவியது.

யூஸுப் இஸ்லாம் அவர்களின் கவரத்தக்க இன்னொரு பண்பு ஒரு தவறைக்கண்டால் உடன் சுட்டிக்காட்டி திருத்துவதேயாகும். இதன்மூலம் இன்று நம்மவர்களுக்குத் தேவையான நமூனாவாக அவரை நாம் கொள்ளலாம்.

மேலும் வெறும் முகஸ்துதி கூறி காரியம் சாதித்து, தவறல்ல, அது பாவங்களின் தலைவாசலாக இருந்தாலும் பார்த்துக்கொண்டு இருப்போருக்கு, முன்மாதிரியாக அவரின் தன்மை அமைந்தது.

இன்றைய உலமாக்கள் மௌலவிமார்கள் தமக்குத் தேவையான துணிவையும், தைரியத்தையும் இங்கிருந்து பாடமாகக் கொள்ளத் தக்கதாக யூஸுப் இஸ்லாம் என்ற நவ முஸ்லிமின் நடத்தை பிரதிபலித்தது.

## பர்தா ஏன்?

பெண்களுக்கு பர்தா உடை மிகத் தேவை என்பதாலேயே இஸ்லாம் அதனைக் கட்டாயப்படுத்தி உள்ளது. அது பெண்மையைப் பாதுகாக்கும். அது அணிவது பெண்மைக்கு பெருமையளிக்கும். ஒரு பெண் பாதையில் பர்தா அணிந்து நடக்கும்போது தன்னைப் பாதுகாத்துக்கொள்ளும் உணர்வைப் பெறுகின்றாள். அது இல்லாது போகும் பெண் தனது உணர்ச்சிகளை இழக்கின்றாள். பெண்மைக்கு ஆபரணம் இஸ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லாம் கூறும் பர்தா அணிவதாகும். பர்தா அணியச்சொல்வ தன்மூலம். பெண் இனத்தை இஸ்லாம் பாதுகாத்துக்கொடுக் கிறது. பராமரிக்கவும் செய்கிறது. பாவச் செயல்கள் நேராது முழுச் சமுதாயத்தையுமே அது பக்குவப்படுத்து கிறது. பர்தா அணியும் பெண் பாலங்களில் இருந்து மீளப் பட்ட பண்புமிக்க பெண்ணுவாள்.

(பம்பலப்பிட்டி முஸ்லிம் மகளிர் கல்லூரியில் — உதவி: சகோதரர் முஹம்மத் ஸியாத் — இஸ்லாமிய செயலகம்)

## "கல்வியே கருந்தனம்"

"கற்றவரும் கல்லாதவரும் சமமானவர்களா ?" என்று அல்லாஹ் அருள்மறையில் சவால் விடுகிருன். இஸ் லாம் கல்வியறிவின் மகத்துவத்தை பல நிலைகளில் வலி யுறுத்துகிறது. நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு அல் லாஹ் அருளிய முதல் வசனமே "ஓதுவீராக" என்பதாகும். அல்குர்ஆனை அடிப்படையாகக் கொண்ட அறிவுமிக்க சமு தாயம் ஒன்றுதான் இன்றைய பிரச்சினைகளுக்குப் பரிகார மாக உள்ளது.

கல்வியறிவின்மூலம் மனிதன் மனிதனுக வாழ முடியும். கல்வியறிவே மனிதனுக்கும் அது அல்லாதோருக்கும் இடையே வித்தியாசப்படுத்துகிறது. முன்னேறிய சமுதாயம் எனப்படுவது கல்விகற்ற சமுதாயத்தையே யாகும். கற்ற வனுக இரு அல்லது, கற்பவனுக இரு. அல்லது, கற்பவ னுக்கு உதவுபவனுக இரு. நான்காம் பிரஜையாக இருக்கக் கூடாது என்பது நபி மொழியாகும்.

ஆகவே, ஆணும், பெண்ணும் அறிவுள்ளவர்களாக இருப்பது இன்றியமையாததாகும். லண்டன் மாநகரில் இதனை இலட்சியமாகக் கொண்டு சிறுவர்களுக்கு சன்மார்க்க அடிப்படையிலான கல்வியறிவூட்டும் பணியில் உழைத்துக் கொண்டிருக்கிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்றைய விஞ்ஞான உலகு இஸ்லாத்துக்கு விடுக்கும் சவால்களை முறியடிப்பதற்கு அல்குர்ஆனை அடிப்படையாகக் கொண்டு கற்ற கல்வியின் மூலம் தான் முடியும், அல்குர்ஆனை விளங்குவதற்கும் விளக்குவதற்கும் அரபு மொழிப் பாண்டித்தியம் பெறுவதற்கும் அதனை அடிப்படையாகக் கொண்ட ''குர்ஆனிய'' சமுதாயம் ஒன்றை உருவாக்க வேண்டும்.

எனது தஃவா பணியாக நான் மேற்கொண்டுள்ள சிறுவர்களுக்கான சன்மார்க்க கல்வியைப் புகட்டும் கைங்கரியத்துக்கு, லண்டன் முஸ்லிம் அறிஞர்களின் ஒத்துழைப்பும் வரவேற்பும் கிடைக்கப்பெற்றுள்ளது. எனவே, பூரணமான குர்ஆன் கூறும் சமுதாயம் ஒன்றின் நிர்மாணமே இன்றைய அவசரப்பணியாகும். இதற்காக பாடுபட ஒவ்வொரு முஸ்லிமும் கடமைப்படுகிறார்கள்.

(கொழும்பு - ஸாஹிறாக் கல்லூரியில்)

## செஞ்சோற்றுக் கடன்

எல்லா நிகழ்ச்சிகளும் முடிந்து, தான் தங்கியிருந்த ஹோட்டலில் இருந்து 12-2-85 செவ்வாய்க்கிழமை இரவு 10.45 மணியளவில் அவரோடு உழைத்துக் கொண்டிருக்கும் ஒரு நண்பர்களோடு விமான நிலையம் நோக்கிப் போவதற்காக வெளியே வந்தார் யூஸுப் இஸ்லாம் அவர்கள்.

தான் தங்கியிருந்த ஹோட்டலுக்குரிய கட்டணத்தை செலுத்துவதற்கு தயாரானபோது ஏற்கனவே கட்டணம் செலுத்தப் பெற்றதாக அவரிடம் அமைதியோடு அதே நேரம் பயத்தோடு அப்போது அறிவிக்கப்பட்டது. பக்கத்தே இருந்த நான் தள்ளி நின்றேன். ஓரளவு சினந்த அவர் அருகே இருந்த சகோதரர்களின் முகத்தைப் பார்த்து, தாடியைத் தடவி, ஐஸ்ஸாகல்லாஹு, அல்ஹம்துலில்லாஹ் என்றார்.

விமான நிலையத்தை நோக்கி, நாம் ஐவர், யூஸுப் இஸ்லாம் அவர்களோடு புறப்பட்டோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விமான நிலையத்தில் யூஸுப் இஸ்லாம்

கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில், கட்டித் தழுவி அன்னாரை வழியனுப்பும்போது ஏற்பட்ட சில நினைவுகள்:

நாம் ஐந்து பேர் அவருடன் வழியனுப்பச் சென்றோம். இருவர் தாடியோடு இருந்தனர். என்னுடன், மற்ற இருவருக்கும் தாடி கிடையாது. ஒவ்வொருவராக மார்புற அணைத்து ஆலிங்கனம் எனப்படும் முஸாபஹா செய்து நாம் பிரிந்தோம். ஒரு ஹஜ்ஜாஜியை வழியனுப்புவது, அல்லது வரவேற்பது போன்ற ஒரு பிரமை என்னுள் எழுந்தது. ஆனால் சில ஹாஜிகளை முஸாபஹா செய்து இங்கே வரவேற்றதன்பின்னும் அவர்கள் ஹாஜிகளாக வந்து, நடந்துகொள்ளும்முறைகளை ஒரு முறை நினைத்துப் பார்த்து, எத்தனைஹஜ்ஜு செய்து வருவோரையும் பார்க்க, யூஸுப் இஸ்லாம் அவர்களை மனம் திறந்து தூய்மையான எண்ணத்தோடு, முஸாபஹா செய்வதில் ஒரு தனி இன்பம் ஏற்பட்டது.

அடர்ந்த தாடியுடன் கூடிய அழகொளிர் வதனமிகு யூஸுப் இஸ்லாத்தை முஸாபஹா செய்யும்போது அங்கே தாடியில்லாத ஒருவரைப்பார்த்து, தாடியை வைத்துக் கொள்ளுங்கள் என்று மனந்திறந்து கூறினார். அதை வைக்காத நாம் எப்படி ''தாடியை என்னுடைய நடைமுறையென்று கூறிய நபிகள் நாயகத்தின் உம்மத்துக்கள் என்று சொல்லலாம்.'' தாடியில்லாது இருக்கும் நாம் நபிகளாருக்குச் செய்யும் நய வஞ்சகத்தனம் அல்லவா என்றவாறு அவர் சுட்டிக்காட்டினார். இதனை கேட்ட என்மனம் சற்று வேகமாகத் துடித்தது. இதயத் துடிப்பு கூடியதை அறிந்தேன். எத்தனையோ வகைகளில் எத்தனையோ பேர் எத்தனையோ ரகமான தாடியோடு இருக்கின்றனர். பலர் இந்த தாடியை வைத்துக்கொண்டு போடும் அத்தனை திருவிளையாடல்களையும் அவருடன் அப்போது வாய்விட்டுக் கூறவேண்டும் போல் இருந்தது. எனி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

னும் நபிகளாரின் நடைமுறை என்றும் வையங்கள் என்றும் சொன்னபோது, அதற்கும் ஒரு தகுதி, தாரதம்மியம் தேவை என்பது போல் உள்ளத்தை திடமாக்கி, யூஸுப் இஸ்லாம் அவர்களிடம் கைகளைக் கொடுத்து மீண்டும் ஒருமுறை திடப் படுத்திக் கொண்டேன்.

இங்கே நான் கூற வந்தது தாடியைப் பற்றியல்ல, தாடி யில்லாத அங்கிருந்த நம்மவர்களைப் பார்த்து அவர் முகஸ் துதியின்றி ஒரு கடமையைச் செய்வது போன்று - முகத் துக்கே - மேலும் கூறியதைத்தான்.

நபிகள் நாயகத்திற்கு நாம் செய்யும் நயவஞ்சகத்தனம் என்று அதனை வலியுறுத்திக் கூறியதையும்தான். சுமார் நான்கு தினங்கள் ஒன்றித்து, உறவாடி மிக நெருக்கமாகப் பழகிய எங்களைப்பார்த்து துணிச்சலோடு சொன்னாரே, அத னையும்தான் குறிப்பிடுகிறேன். மாறாக, தாடி வைத்தோ ரையோ, வைக்காதவரையோ அல்ல.

இன்னோர் உண்மையையும் இங்கு எழுதாமல் இருக்க முடியவில்லை. புதிதாக தாடி வைத்தல் இன்றைய இளைஞர் கள் மத்தியில் ஏற்பட்டுள்ள இஸ்லாமிய ஆத்மீகத் தாக்கம் என கருதப்படுகிறது. எனினும் பல இளைஞர்களை புதிதாக அதனை வளர்ப்போர்கள் எந்த அளவிற்கு தாடிமீது பற்று வைத்திருக்கிறார்கள், அன்றேல் வெறும் போலிக்காக அல்லது வேலைபபழுவின் காரணமாகவோ, வழிப்பதற்கு நேரம் இல் லாமலோ, வைப்பதாக சிலர் அபிப்பிராயப்படலாம். மேலும் கொமைனியின் காற்று, உங்கள் பக்கம் அடிக்கிறதா? ஈரானின் தாக்கமா...? என்றெல்லாம் சிலர் கேட்கும் நிலை. நிச்சயமாக அவ்வாறு யாரும் தாடி வைத்தால் அது வெறும் கோழைத்தனம். அல்லது தாடி வைக்காதோர் வீரர் கள் என்று தீர்ப்பு வழங்க முடியாது. எனினும், இங்கே யூஸுப் இஸ்லாம் அவர்கள் இந்த அளவிற்கு தாடியைப்பற்றி மிகுந்த கரிசனையோடு சொன்னதைத்தான் இங்கே சுட்டிக் காட்டினேன். மற்றது உங்கள் விருப்பம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இஸ்லாமிய உணர்வுடன் நபிகளாரின் நடைமுறைகளை கண்ணியப்படுத்தும் வகையில் யாரும் தாடி வைத்தால் அவர்களைத்தான் யூஸுஃப் இஸ்லாம் அவர்கள் சொன்ன கருத்தோடு, ஒத்துபோகின்றேன். அவ்வளவுந்தான். அல்ஹம்துலில்லாஹ்.

## கொழும்புப் பத்திரிகையாளர்கள் சந்திப்பு

11-2-85 திங்கட்கிழமை மாலை மஃரிபுத் தொழுகையின் பின்னர் தப்லீஃ ஜமாஅத்தினரின் தலைமையகத்தில் –யூஸுஃப் இஸ்லாத்தை இயக்கிக் கொண்டிருக்கும் இஸ்லாமியச் செயலகத்தின் இயக்குனர் சகோதரர் ஹம்ஸா ஹனிபா அவர்களைக்கண்டு கேட்கிறேன்.

இவ்வளவெல்லாம் செய்கிறீர்கள். ஒரு பத்திரிகையாளர் மாநாடு நடத்தினால் என்ன? என்கிறேன். ஏன் இல்லை. ஒழுங்கு செய்திருக்கிறோம். இன்ஷா அல்லாஹ் நாளை 12ம் திகதி, நண்பகல் 12 மணிக்கு வெள்ளவத்தையில் அவர் தங்கியுள்ள ஹோட்டலில் நடக்கும். சமுகம் தாருங்கள், உங்களை சார்ந்த பத்திரிகையாளர் நண்பர்களையும் அழைத்து வாருங்கள் என்றார். அனுமதி கிடைத்தது.

வானொலி நிலையத்தில் எனது பணிப்பாளரிடம் கூறி, உத்தியோகபூர்வமானதாக ஆக்கிக்கொள்ள வேண்டுமென்பதற்காக அனுமதி பெற்றேன். செய்திப்பகுதியில் கடமை பார்க்கும் பத்திரிகைத் துறையோடு பழுத்த அனுபவமுடைய ஹாஜி எம். ஏ. ஏ. ஹஸன் அவர்களிடமும் விடயத்தைக் கூறி, இருவருமாக சென்றோம்.

இதற்கிடையில், செய்திப்பகுதியில், எமது பணிப்பாளரோடு இருவருமாக கட்ஸ்டீவன் பற்றி அலசினோம். கட்ஸ்டீவன் அவர்களின் (Morning has broken) "காலை அகல்கிறது" என்ற ஆங்கில பொப் பாடல் தன்னை மிகக் கவர்ந்தது. தன் வாழ்க்கையில் தான் கேட்டு மகிழ்ந்த பாடல்களில் இந்தப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடல் தனி இடம்பிடித்துள்ளது எனவும், கட் ஸ்டீவனின் பொப் பாடல்களை தான் இங்கிலாந்தில் இருக்கும்பொழுதும் கூட தனக்குரிய பொழுது போக்குப் பாடல்களாகக் கேட்டு மகிழ்ந்ததாகவும் கூறினர். அவ்வளவு என்ன விசேஷம் என்று கேட்டேன். ஒருமுறை ஆங்கில நாடாக்கள் வைத்திருக்கும் களஞ்சியத்திற்குச் சென்று, கட்ஸ்டீவனின் பாடல்களைக் கேட்டுப்பாருங்கள் என்று ஓர் ஆர்வத்தையூட்டினர். இதற்கு முன்னர் கட் ஸ்டீவன் என்ன கண்ணதாசன் பாடல்களே விருப்பங் குறைந்த எனக்கு, நேரம் போதவில்லை என்பதால், மறுவாரம் தனியாகச் சென்று கேட்டு மகிழ்ந்தேன்.

பணிப்பாளர் அவர்கள் திசை திரும்பினர். நாம் தாராளமாக கட் ஸ்டீவனுக்குப் பிரச்சாரம் கொடுத்துள்ளோம். அவர் இலங்கைக்கு வந்ததுமுதல் பிரபல்யப்படுத்தியுள்ளோம். காலைச் செய்தியிலும் ஒலிபரப்பினேம். தனி நிகழ்ச்சிக்கு பேட்டி ஒன்றையும் எடுத்துள்ளோம். இரவு தொலைக் காட்சிச் செய்தியில்கூட இடம் பெற்றுள்ளது. இப்படியிருக்க பத்திரிகையாளர் மாநாட்டில் முடியுமானல் இன்னும் மேலதிகமான தகவல்களை திரட்டி வாருங்கள் என்று தட்டிக் கொடுத்தார். முஸ்லிம் அல்லாத ஒருவர் அதுவும், யூஸுப் இஸ்லாம் அவர்கள் முன்னர் இருந்த கிறிஸ்தவ மதத்தைச் சேர்ந்த எமது பணிப்பாளர் அவர்களின் தாராளத் தன்மையை இருவருமாகப் போற்றினேம்.

## பத்திரிகையாளர் மாநாட்டிற்கு வருகிறேன்

சரியாக 11 30க்கு ஹாஜி ஹஸன் அவர்களுடன், யூஸுப் இஸ்லாம் தங்கியிருக்கும் இடத்தைச் சென்றடைந்தேன். 12-15க்கு அவர் அங்கு சமுகமளித்தார். அதற்கு முன்னர் பம்பலப்பிட்டி முஸ்லிம் மகளிர் கல்லூரியிலும் அங்குள்ள நமது மாணவிகளுக்கான விரிவுரையொன்றை நிகழ்த்திவிட்டு வந்து சேர்ந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தினபதி, சிந்தாமணி பத்திரிகைகள் சார்பில் சகோதரர் ஐயூபும், தினகரன் பத்திரிகை சார்பில் சகோதரர் அமீன் அவர்களும், ஸன் பத்திரிகைப் படப்பிடிப்பாளரும் சேர்த்து, வேறு யூஸுப் இஸ்லாம் அவர்களோடு உழைத்துக்கொண்டிருக்கும் ஏனைய ஐந்து நண்பர்களுடன் ஆரம்பமாகியது.

**இஸ்லாத்தை உங்களுக்கு அறிமுகப்படுத்தியவர் யார்? அது எவ்வாறு தெரிய வந்தது?**

"எனது சகோதரர் ஜெரூஸலம்போய் வரும்போது எடுத்து வந்த அல்குர்ஆனின் ஆங்கில மொழி பெயர்ப்பை படித்ததனால்தான் இஸ்லாம் தெரியவந்தது, ஏனைய மதங்களையும் படித்துக்கொண்டிருந்த எனக்கு அல்குர்ஆனைப்படிக்கும்போது தனிப்பற்று ஏற்பட்டது. அல்குர்ஆனால் ஈர்க்கப்பட்டேன். அல்குர்ஆனையும் அல்ஹதீஸையும் மனதார நம்பினேன். அல்லாஹுவிற்கும் அவனது தூதருக்கும் அடி பணிந்தேன். திருக்கலிமாவை மொழிந்தேன், முஸ்லிமானேன்.


நான் தேடி அலைந்துக்கொண்டிருந்த நிம்மதி என்ற வினாவிற்குரிய விடையாக, அது அமைந்தது. அதனால்தான் யூஸுப் இஸ்லாமாக உங்கள் நாட்டில் இவ்வாறெல்லாம் நிற்கமுடிகிறது! அல்ஹம்துலில்லாஹ்.

**இன்றைய முஸ்லிம்களைப்பற்றி தாங்கள் என்ன நினைக்கிறீர்கள்?**

என்ன கூறச் சொல்கிறீர்கள்?. அவர்களிடமிருந்து இன்று பயபக்தியும், தக்வாவும் எடுபட்டுப் போய்விட்டன. வெறுமனே பேரளவில் முஸ்லிம்களாக இருப்பதனை இன்றைய உலகில் முஸ்லிம்களுக்கு ஏற்பட்டுக்கொண்டிருக்கும் நிலையைப் பார்க்கும்போது நிரூபணமாகின்றதல்லவா?. எவ்வளவு பலவான்களாக இருக்கிறோம் என்பதனை அவர்கள் மறந்தவர்களாக, இருப்பது விந்தையாக இல்லையா?. முஸ்லிம் உலகமே இழிநிலைக்கு உட்பட்டதன் காரணம் இஸ்லாம் இல்லாமை என்று இஸ்லாத்தை அறிந்து எட்டே ஆண்டுகளாகிவிட்ட நான் கூறுவதைவிட, இஸ்லாத்திலே பிறந்த நீங்கள் அறியலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



"நாம் கைதூக்கித் தக்பீர்கட்டித் தொழுத திசையாயிருந்த பைத்துல் முகத்தஸ் அல் அக்ஸாப் பள்ளியிது! ஆனால் இஸ்ரவேலரின் இரும்புக் கைக்குள் இன்று இது சிக்கியுள்ளது! அந்தோ! இழந்து தவிக்கும் இதயங்களே! மீட்கப்பட வேண்டிய ஒன்றான அல்அக்ஸாப் பள்ளியைப் பார்த்துவிட்டுத் திரும்பும் போதுதான் என் தலைமையனார் டேவிட் இருளடைந்த என் இதயத்திற்கு ஒளியூட்டி நேர்வழிகாட்டிய புனிதத் திருக்குர்ஆனை பெற்றுவந்து பரிசளித்தார்."

யூஸுப் இஸ்லாம்
பத்திரிகையாளர் மாநாட்டில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருவேளை இஸ்லாத்தை தழுவ முன்னர் முஸ்லிம்களை நான் கண்டிருப்பேனேயானால், இஸ்லாத்தை நிராகரிக்க வேண்டியிருக்கவும் ஆகலாம். ஆனால் எல்லாம் அறிந்த அல்லாஹ் எனது மத மாற்றத்தை அவனது அல்குர்ஆனில் இருந்து உருவாக்கினான். அல்ஹம்துலில்லாஹ்.

எத்தனையோ பிரிவுகள், இயக்கங்கள், சங்கங்கள், அமைப்புக்கள் என்றெல்லாம் இருக்கின்றனவே இதுபற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?

ஒவ்வொன்றும் இஸ்லாத்தின் பேரில் நல்லவற்றையே சொல்கின்றன, செய்கின்றன. அவை இன்னும் நல்ல இயக்கங்களாகவும், அமைப்புக்களாகவும் இருக்க இஸ்லாத்தின் கட்டுக்கோப்புக்குள், அல்குர்ஆனின் அடிப்படையில் இயங்கினால்தான் அவற்றை இஸ்லாமிய இயக்கங்கள் எனக் கூற முடியும்.

அப்படியாயின் தங்களைக் கவர்ந்த இயக்கம் ஏதாவது உண்டா என்றும், தப்லீஃ இயக்கம் பற்றி என்ன கருதுகிறீர்கள் என்றும் கேட்டேன்.

நான் எதிலும் பாசறை அமைத்துத் தங்கவில்லை. இஸ்லாமிய அடிப்படையில் சமுதாய முன்னேற்றத்துக்காக உழைக்கும் எந்த இயக்கத்தையும், ஏற்றுக்கொள்ளலாம். எனினும் நான் இஸ்லாத்தில் நுழைந்தபோது, அதன் இனிய கோட்பாடுகளையும், போதனைகளையும் பின்பற்றுவதற்கு தப்லீஃ இயக்கம்தான் பெரிதும் உதவியாய் அமைந்தது. இன்னும் அந்த இயக்கம் ஒன்று மட்டுமே ஆத்மீகத்துக்காக பாடுபடுவதைக் காண்கிறேன். அவ்வளவுதான்.''

இவ்வாறு அவர் விளக்கம் அளித்தார்.

தன்னைக் கவர்ந்தது எது என்பதனைக் கூறியபோது தப்லீஃ இயக்கத்தைப பற்றி சில கருத்துக்களையும் அவர் முனவைததார். உலகின் பல பாகங்களிலும இந்த இயக்கம் தீனுக்காகப் பாடுபடுவதை அவர் அறிந்துவைத்துள்ளார்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனக்கு அந்த லண்டன் மாநகரில் முஸ்லிம்கள் தாடியோடும், தலைப்பாகையோடும், தோற்றமளிப்பதைக் காணக் கிடைக்கும்போது தப்லீஃ ஜமாஅத்தினர்களை நினைவுவருதாகச் சொன்னர்.

ஆரம்பத்தில் இஸ்லாமியப் பயிற்சி தேவைப்பட்டபோது, தப்லீஃ பணியின் பங்கு முஸ்லிம்களுக்கு இன்று அவசியப்படுவதை அடித்துக்கூறுவதுபோல் இருந்தது.

சொல்லொன்ருகவும், செயலொன்ருகவும் உள்ள இன்றைய முஸ்லிம்களில் ஒரு சிலரை உதாரணமாகக் கூறுவாரோ என்று தயங்கினேன். அவ்வாறு நடைபெறவில்லை எது எவ்வாருயினும், தப்லீஃ இயக்கத்தை அவர் உதாரணமாகக் கூறியபோது, இன்று அதன் தாக்கத்தை தன்னையும் உதாரணப்படுத்திச் சொன்னர். முதல்நாள் மாலை மஃரிபுத் தொழுகையின் பின்னர் கொழும்பு தப்லீஃ ஜமாஅத் தலைமையகத்தில் அவர் நிகழ்த்திய பேருரையின் சில கருத்துக்களையும் பத்திரிகையாளர் சந்திப்பின்போது சிந்திக்கவைத்தார்.

* இங்கிலாந்தின் இன்றைய நிலையில் இஸ்லாத்தின் தாக்கம் எவ்வாறு உள்ளது? எதிர்கால இங்கிலாந்து ராஜ்யம் (யு. கே) இஸ்லாத்திலாகுமா?

இன்றைய சூழ்நிலையில் லண்டன் நகரில் மாத்திரம் சுமார் ஒரு லட்சத்துக்கும் மேற்பட்ட முஸ்லிம்கள் உள்ளனர். முக்கியமான தெருக்கள் உட்பட இன்னும் பல இடங்களிலும் நூற்றுக்கும் அதிகமான (சுமார் 600) பள்ளிவாசல்கள் உள்ளன. கிறீஸ்தவ ஆலயங்கள் பல அல்லாஹ்வின் இல்லங்களாக மாறியுள்ளன. இவை அனைத்திலும் தப்லீஃ பணி நடக்கிறது. ஏனைய வழிகளாலும் இஸ்லாமிய சிந்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனைப் புரட்சியும், மறுமலர்ச்சிக்குரிய முயற்சிகளும் நடக்கின்றன. இங்கே ஒன்றை ஒளிவு மறைவின்றிக் கூற வேண்டும்.

இங்கிலாந்தில் இஸ்லாத்தின் காற்று வீசும் வேகம் அதிகரித்துக்கொண்டு வரும் அதேவேளை அங்குள்ள முஸ்லிம்கள், ஆட்சி அரசியல் துறைகளிலும் தீவிரமாக பங்கெடுத்துக் கொண்டால் 20 ஆண்டுகளில் அடைய உள்ளதை 10 ஆண்டுகளில் அடைந்து, இஸ்லாத்தால் வெற்றி கொண்டுவிடலாம். இன்ஷா அல்லாஹ்!

*** இஸ்லாத்தைத் தழுவியபோது, தங்களுக்கு கிடைத்த வரவேற்பு எத்தகையது?**

எனது இஸ்லாமிய பிரவேசம் அல்லாஹ்வின் நாட்டம், எல்லாம் அறிந்த அவனின் செயலாக அது தீர்மானிக்கப்பட்டிருக்கும் போது, ஏனையவர்களின் வரவேற்பைப் பற்றியோ அது இல்லாமை பற்றியோ, பொருட்படுத்தப் போவதில்லை. எனக்கு அரப் ஷேக்குகளோ வேறு யாருமோ பணம் தரவும் இல்லை. என்னிடம் போதியளவு செல்வம் இருக்கிறது. நான் இஸ்லாத்திலானபோது சமூகத்திற்கு எதிராக பெரிதாக ஏதோ செய்துவிட்டதாக எண்ணிய பலர் என்னை அன்போடு நோக்கவில்லை. அதைப்பற்றி நான் ஒன்றும் அலட்டிக் கொள்ளவும் இல்லை. நல்லது எது, தீயது எது என்று தடுமாறும் லண்டன் மட்டுமல்ல முழு ஐரோப்பாவுமே என்னை எதிர்த்தாலும், எனது பாடல்களைச் சுட்டெரித்தாலும், எனக்கு என்ன என்றவாறு இருந்தேன். எனது குடும்பமும், உறவினர்களும், என்மீது கொண்டிருந்த அன்புள்ளத்தை, நாளுக்கு நாள் குறைத்துக் கொள்வதை உணர்ந்தேன்.

சந்திர சூரியனை தன் கைகளில் தருவதாக, தாஹா நபி (ஸல்) அவர்களிடம் எதிரிகள் கூறியபோது, எது கிடைத்தாலும் என் கொள்கை தவறமாட்டேன் - என்றுரைத்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நபி (ஸல்) அவர்களின் திடமான உறுதியைப் பற்றி அறிந்த தனால் அதன் மூலம் ஈமானின் உறுதியை வலுப்படுத்திக் கொண்டேன்.

* தங்கள் குடும்பம், தாய் தகப்பன் இவர்களைப்பற்றி?

நான் மத மாற்றம் பெற்றதனால் அவர்களுக்கு ஒரு தீங்குமில்லையே. அவர்களுக்கு தடையாக இருக்கவும் இல்லை. அல்லாஹ்வின் ஒளி கிடைத்தபோது அவர்கள் எனக்குத் தடையாக இருக்கவும் முடியவில்லை. அல்லாஹ் தனித் தனியாக இந்த உலகத்தில் மனிதனைப் படைத்திருக்கும்போது ஏன் வீணாகப் பயப்படவேண்டும்?

* உங்கள் பாடல் துறை என்னவாயிற்று ?

நல்லது. இஸ்லாத்தில் நுழைந்தபோது, இசைத்துறை எனக்குச் சோறு போடுவது, எனது தொழில் அது என்பது பற்றியெல்லாம் தனியாக முயற்சிக்கவில்லை. மேலும் மேலும் இஸ்லாத்தை விளங்குவதிலேயே எனது காலத்தையும் நேரத்தையும் கழித்தேன். காலப்போக்கில் மேடைகள் தோறும் ஆடுவது, பாடுவது முதலிய அநாகரீக பழக்கங்களனைத்தும் அடியோடு ஒழிந்துவிட்டன. இசையோடு கூடிய பாடல்களை இஸ்லாம் வெறுக்கிறது. நல்ல வாழ்க்கைக்கும் களியாட்டம் நிறைந்த அநாகரீக வாழ்க்கைக்கும் இடையே பெரும் முரண்பாடு இருக்கிறது. களியாட்ட உலகில் ஒழுங்கீனமும், அமைதியின்மையும் ஏற்படுகிறது. போட்டியும், பொறாமையும், பேராசையும் ஆத்மீக முன்னேற்றத்தைப் பாதிக்கின்றன. என்னுடைய அனுபவத்திற்கும், அறிவுக்கும் எட்டியமட்டில் ஷெய்த்தானுக்கு இடம் கொடுப்பதனால் அந்த வாழ்க்கை குப்ரிய்யத்தை நோக்கியதாக அமையுமென்பேன். எனது இசைக்கருவிகளைக் கைவிட்டேன்.

அல்லாஹ்வின் அருள் என்று எனது குரல் வளத்தைக் கூறினார்கள். அதன் வளத்தால் இன்று இள உள்ளங்களின் -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுவர்களின் பசுமை இதயங்களில் இஸ்லாத்தைப் பற்றிய தாக்கத்தையும், மோகத்தையும் ஏற்படுத்தும் பாடல்களை நானே இயற்றிப் பாடிக்கொண்டிருக்கிறேன். சுருங்கக் கூறின் அவை ஏகத்துவத்தை ஏந்திப் பிடிக்கின்றன. அல் குர்ஆனையும் அண்ணல் நபிகளாரின் வாழ்க்கை வரலாற்று நிகழ்ச்சிகளையும் சித்தரிக்கின்றன.

* உங்களது இசைக்கருவிகள் என்னவாயிற்று ?

அவைகளை விற்றுப்போட்டேன். அதன்மூலம் இரண்டு இலட்ச ரூபா பணம் கிடைத்தது.

* அப்படியாயின் பாவனைக்கு அந்தப் பணம் ஹலாலா குமா ? அது சுத்தமாகிவிட்டதாகக் கருதுகிறீர்களா ?

இதற்கொரு உதாரணத்தை அல்ஹதீஸில் இருந்து பெற முடிந்தது. ஒருமுறை நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் உமர் (ரலி) அவர்களுக்குப் பட்டுத்துணியொன்றைப் பரிசாக வழங்கினார். ஆண்களுக்குப் பாவனைக்கு விலக்கப் பட்ட (ஹராமாக்கப்பட்ட) பட்டாடையை ஏன் தருகிறீர்கள்? என்று கேட்டார் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள். அதற்கு அழகிய முன்மாதிரி காட்டினார் அல்லாஹ்வின் தூதர் நபி (ஸல்) அவர்கள். துணியை தருமம் செய்து விடுங்கள் என்று ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களிடம் கூறினார்.

இந்தச் சம்பவத்தை அறிந்த நான் இதயம் பூரித்தேன். இசைக்கருவிகளை விற்பதெனத் தீர்மானிப்பதற்கு இது உதவியது. அவ்வாறு விற்றுக் கிடைத்த பணத்தைக்கொண்டு தரும நிதியொன்றை ஆரம்பித்துள்ளேன். இன்று அதன் மூலம் இளஞ்சிறார்கள் நலன்கருதி நான் நடத்தும் இஸ்லாமியக் கல்விக்கூடத்தின் பணியை இலகுவாகச் செய்வதற்கும் முடிந்துள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

* உங்கள் வயது? எப்போது பிறந்தீர்கள்? திருமணம், எத்தனை பிள்ளைகள் ?

இது எனது பணிவான கேள்வியாகும்.

நான் பிறந்தது 1948ம் ஆண்டு ஜூலை மாதம் 21ம் திகதியாகும். இப்போது 37 வயதை அடைந்துள்ளேன். அல்லாஹ் அருளால் 3 பெண் பிள்ளைகள் உண்டு. மூத்த மகளுக்கு வயது 5, இரண்டாவதுக்கு வயது 3, அடுத்த மகளுக்கு வயது 2.

எனது தாய் சுவீடன் நாட்டுக்குரியவர். தந்தை சைப்பிரஸ் நாட்டுக்குரியவர்.

* உங்கள் குடும்பத்தில் இஸ்லாத்தைத் தழுவியோர்கள் வேறு யாரும் இருக்கிறார்களா ?

எனது சகோதரர் இஸ்லாத்தைத் தழுவிவிட்டார். தாயும் தந்தையும் இஸ்லாத்தை விளங்கிக் கொண்டிருக்கிறார்கள். தழுவவில்லை. நான் இஸ்லாத்தில் இருப்பதற்கு அவர்களால் எனக்குத் தடையும் இல்லை. என்னோடிருந்த எனது நண்பர்கள் இன்று இஸ்லாத்தை விளங்கிக்கொள்ளும் முயற்சியில் இருக்கிறார்கள். அவர்களுக்கு நேர்வழியை – ஹிதாயத்தைக் கொடுப்பது அல்லாஹ்விற்குரியது. முயற்சிப்பது எமது கடமை.

* உலக நாடுகளில் உங்கள் பயணங்கள் ?

பல நாடுகட்குப் போயுள்ளேன், தென்னமெரிக்கா, பிரேஸில், கனடா, வட அமெரிக்கா, பல ஐரோப்பிய நாடுகள், தென் கிழக்காசிய நாடுகள் இங்கெல்லாம் இசை நிகழ்ச்சிகளுக்காகப் போயுள்ளேன். மக்காவுக்கும், ஹஜ்ஜுக்கும் போயுள்ளேன். இது இஸ்லாத்துக்காகப் போயுள்ளேன். அனைத்துப் பயணங்களையும் விட எனது மக்காப் பயணம் மகத்துவமிக்கதாகவும் என்னை மேலும் புனிதமுடையவனாகவும் மாற்றியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொழும்பு வெள்ளவத்தை இராமகிருஷ்ண மிஷன் மண்டபத்தில் 12-2-85 செவ்வாய்க் கிழமை மாலை யூஸுப் இஸ்லாம் அவர்கள் பல்லாயிரக் கணக்கானோர் மத்தியில் நிகழ்த்திய

# பகிரங்கச் சொற்பொழிவு

அன்பு மிக்க சகோதரர்களே, நண்பர்களே, அல்லாஹ்வின் நல்லருள் உங்கள் மீது உண்டாவதாகுக! பல்வேறு பிரிவுகளையும் சேர்ந்த பெருந்தொகையான மக்கள் இங்கே கூடியிருப்பதும், நீங்கள் காட்டும் உற்சாகமும், எனக்கு பெரும் மகிழ்ச்சியைத் தருகின்றது.

நான் முன்பிருந்ததுபோல் ஒரு பொப் பாடகனாக இருந்தால், கட்ஸ்டீவனாக, வந்திருந்தால் இப்படியானதொரு சனக்கூட்டத்தை இங்கே நான் காண முடியாதிருந்திருக்கும். அல்லாஹ்வின் நாட்டத்தினால், இன்று இங்கே நீங்கள் என்னிடமிருந்து இஸ்லாத்தைப் பற்றிய தானறிந்த விளக்கங்களைப் பெற ஆர்வத்தோடு இருக்கிறீர்கள்.

அல்லாஹ்வைப் பற்றிய ஞானம் இன்றியமையாதவொன்று என்பதை முஸ்லிம்கள் முதலில் ஒப்புக்கொள்ள வேண்டும். முஸ்லிம்களுக்கு ஈமானைப்பற்றிய உறுதியை ஏற்படுத்துவது அல்லாஹ்வைப் பற்றிய சிந்தனையும் அவன் மீது கொள்ளும் தக்வாவும்தான்.

இஸ்லாத்திலே இறைவனுக்கு அல்லாஹ் என்று பெயர். இறை நம்பிக்கையுள்ள பலரையும், இல்லாத சிலரையும் இன்று நாம் உலகிலே காண்கிறோம். அல்லாஹ்வின் அரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

னால் நபி (ஸல்) அவர்கள் மூலம் தெய்வீகச் சக்தியாக வந்ததுதான் அல்குர்ஆன். எல்லா விடயங்களுக்கும் சரியான விளக்கம் தரக்கூடியதும் அதுவே. அல்லாஹ்வின் அறிவுறுத்தல்கள் அல்குர்ஆன் மூலமே மக்களுக்குக் கிடைத்தன. இப்படியான ஒன்று வேறு எங்குமே காணமுடியாது. ஆகவே, அல்குர்ஆன் எனப்படும்போது இஸ்லாத்தைத்தான் இங்கே கருத்திற்கொள்ளவேண்டும்.

இஸ்லாம் தவிர்ந்த ஏனைய மார்க்கங்களில் உண்மையில்லாமல் இல்லை. ஆனால் இஸ்லாத்திலே நூற்றுக்கு நூறு வீதம் உண்மை பொதிந்துள்ளதால்தான் தூய இஸ்லாத்தைத் தழுவினேன். புனித திருக்குர்ஆன் சொல்கிறது "மார்க்கத்தில் பலவந்தமில்லையென்றும் சந்தேகமின்றி நம்ப வேண்டும்" என்றும்.

இறைவனால் அருளப்பட்ட இந்த வேதம் நிச்சயமாக உங்களுக்கு நேரான வழியைக் காண்பிக்கின்றது என்றும் அது கூறுகிறது. அதிலே ஒன்றோடு ஒன்றுக்கு தொடர்பு இருக்கிறது. இதுவும் அல்குர்ஆனை இலகுவாக விளங்கிக் கொள்வதற்கு உதவுகிறது.

இஸ்லாம் தனியாக தியானத்தையோ அல்லது ஹஜ்ஜையோ வேறு ஏதாவது ஒன்றையோ செய்யுமாறு கூறவில்லை. தியானத்தையும், தருமத்தையும், ஹஜ்ஜையும் நிறைவேற்றுவதுடன், லௌகீக வாழ்க்கைக்கு அவசியமானவற்றை நேரான வழியில் சம்பாதித்து, செலவு செய்து, மனைவி - மக்களையும், சுற்றத்தாரையும், ஏனையோரையும் பராமரித்துக்கொள் - பாதுகாத்துக்கொள் என்கிறது.

வெறுமனே தியானத்தையோ, ஜெபித்தலையோ செய்து கொண்டிருந்தால், வாழ்க்கைக்குத் தேவையான ஏனையவைகளைப் பெறமுடியாது போய்விடுகிறது. ஒருவன் திருமணம் முடிப்பதன்மூலம் அவன் பூரண மனிதனாகிறான். அதன் மூலம் அந்த மனிதன் வாழ்க்கை என்றால் என்ன? அன்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எது? கவலை எது? என்பதையெல்லாம் உணரத் தலைப்படு கின்றான். அத்துடன் அவனுக்காக மட்டுமன்றி அவன் பிற ருக்காகவும் வாழ வேண்டியவனாகின்றான்.

ஆதம் நபி (அலை) அவர்கள் காலமுதல் காலத்துக்குக் காலம் நாட்டுக்கு நாடு அல்லாஹ் நபிமார்களை அனுப் பினான். ஆனால், பூரணப்படுத்தப்பட்ட நபியாகவும், பூரணப் படுத்தப்பட்ட வேதமாகவும் அருளப்பட்டது அல்குர்ஆன் மாத்திரமாகும். இந்த உண்மையை 1400 ஆண்டுகளுக்கு முன் உலகமும் ஒப்புக்கொண்டது.

இப்ராஹீம் நபி (அலை) அவர்களின் சந்ததியில் இறுதி நபியாக முஹம்மது நபி (ஸல்) அவர்கள் அனுப்பப்பட் டார்கள். விவிலிய வேதத்தின் முதல் ஐந்து நூல்களிலும், ஹஸ்ரத் இப்ராஹிம் நபியின் சந்ததியினர் ஆசீர்வதிக்கப் பட்டுள்ளனர். ஹஸ்ரத் இப்ராஹீம் நபியின் முதல் மகன் இஸ்மாஈல் (அலை) அவர்கள், இரண்டாம் மகன் இஸ்ஹாக் (அலை) அவர்கள்.

இஸ்ரவேலர்கள் ஹஸ்ரத் இஸ்ஹாக்கின் சந்ததியில் தோன்றியவர்கள். இதே சந்ததியில்தான் நபி ஈஸா (அலை) அவர்கள் பிறந்தார்கள். யூதர்கள் ஈஸா (அலை) அவர்களை ஒப்புக்கொள்ளவில்லை. இதனால் சகல நபித்துவ அந்தஸ்தும் இஸ்ரவேலர்களிடம் இருந்து அகற்றப்பட்டன. இறுதியாக ஹஸ்ரத் இஸ்மாஈல் (அலை) அவர்களின் சந்ததியிலிருந்து முஹம்மத் நபி (ஸல்) அவர்கள் தோன்றினார்கள். இஸ்லாத் தின் முக்கிய அம்சம் முஹம்மது நபி (ஸல்) அவர்களுக்கு அல்லாஹ்வால் அருளப்பட்ட அல்குர்ஆனை நம்புவதாகும். இதன்மூலம் நாம் உண்மையை உணர்ந்து அல்லாஹ்வை யும் ரஸூலையும் பின்பற்றக் கடமைப்பட்டுள்ளோம்.

உண்மையிலேயே, ஒருவனுக்கு கஷ்டமோ துன்பமோ வரும்போதுதான் இறை வணக்கம் கூடுகிறது. தன்னைவிட பலம் கூடிய ஒருவனை உதவிக்கு நாடுகிறான். இந்த ஆர்வம்

ஏற்படும்போதுதான் ஒருவன் சரியையும் பிழையையும். நல்லதையும் கெட்டதையும் உணர்கிறான். ஏழு அல்லது எட்டு வயதாகும்போது நல்லதையும் தீயதையும் அறியும் தன்மை ஏற்படுகிறது.

சிந்தனையாலும், ஆராய்ச்சித் திறனாலும் இந்த இறை உண்மையை அறிகிறோம். உலகம் படைக்கப்பட்ட தன்மையை விளங்கிக் கொள்கின்றோம். நாம் மண்ணில் வாழ்கின்றோமா, அல்லது விண்ணில் வாழ்கின்றோமா என்பதையெல்லாம் தெரிந்துகொள்கிறோம். அண்டத்தில் கோள்கள் அனைத்தும் சட்டப்படி சரியாக திசை தவறாது இயங்குவதை தெளிவாகப் புரிகிறோம்.

காலங்கள் மாறுவதும் மாரி, கோடை என்பன மாறி மாறி வருவதும், நாம் வாழ்நாளில் காணாத ஒன்றல்ல. இவையனைத்தும் தாமே செயலாக நடைபெறுவதென்று சொல்ல முடியுமா? ஒருபோதும் முடியாது,

ஒருவன் இக்கருத்துக்களை அபிப்பிராய பேதமின்றி நம்புகிறான். கோளங்கள் ஒரு நியதிப்படி இயங்குவதன் மூலமே அவற்றை அல்லாஹ் படைத்துள்ளான் என்பதை அவை நம்பவைக்கின்றன. இந்த வேலைகளை பலர் செய்தால் ஒரே குளறுபடியாகவும் குழப்பமாகவும் தானிருக்கும் உதாரணத்திற்கு ஒரு நிறுவனத்தையோ, அல்லது ஒரு ஸ்தாபனத்தையோ பல அதிபர்கள் பரிபாலனம் செய்து, உத்தரவுகளை வழங்கினால் அந்த நிலையத்தின் கதியை நினைத்துப் பாருங்கள்.

வல்லரசுகளான அமெரிக்காவையும், ரஷ்யாவையும்நோக்குங்கள். ஓர் அதிபர் ஒரு தலைவர் தனியாக நிருவகிக்கிறார். இதைப்போலவே சகல உலகங்களுக்கும் ஒரே ஒருவன்தான் அதிபதியாக இருக்க முடியும், பல கடவுளர்கள் பரிபாலித்தால் நிலைமை எப்படியிருக்கும்? என்பதை நான் கூறவேண்டியதில்லை. ஆதலால் ஏக இறைவனான அல்லாஹ்வைப்பற்றி இஸ்லாம் மாத்திரமே மிகத் தெளிவாகச் சொல்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிவாற்றலின்மூலம் சகலதையும் அறிய முடியுமென சிலர் நினைக்கிறார்கள். அறிவை மூலதனமாகக்கொண்ட விஞ்ஞானிகளே இன்னும் எத்தனையோ விஷயங்களை அறிய முடியாமல் தடுமாறுவதை நாம் அறிகிறோம். அதே நேரத்தில் அருள் பெற்றவர்கள் அனைத்தையும் அறிந்துள்ளார்கள் என்பது நிரூபிக்கப்பட்ட உண்மையாகிவிட்டது.

உலகம் அழியும் என்று கூறுகிறார்கள். எப்போது என்று கேட்டால் இன்றைய அறிஞர்களால், விஞ்ஞானிகளால்கூட பதில் சொல்ல முடியாமல் இருக்கின்றது. அல்லாஹ் நமக்கு வழிகாட்டுகிறான். நபி (ஸல்) அவர்களின் மொழியும், வழியும் நமக்கு துணைபுரிகின்றன. ஆதம் நபி முதல் முஹம்மது நபி (ஸல்) அவர்கள் காலம் வரை, அல்லாஹ் உடைய வழி நடத்தலை பின்பற்றியதனால்தான் நற்பேறு பெற்றார்கள், பின்பற்றாதோர் கவலைப்பட்டார்கள். கைசேதப்பட்டார்கள். மண்ணுலகில் மனிதனே மிகவும் மேலான படைப்பு. எறும்பு முதல் யானை வரை எல்லாமே மனிதனின் கட்டுப்பாட்டில் தான் இருக்கின்றன, இயங்குகின்றன.

இவ்வுலக வாழ்க்கையைப் பற்றி இறுதி நாளன்று கேட்கப்படும். இங்கிருந்து நாம் எதையுமே நம்மோடு எடுத்துச் செல்லமுடியாது. அதனால்தான் முஸ்லிம்களை நல்லடக்கம் செய்ய அணிவிக்கும் கபனுக்கு பொக்கட் வைத்துத் தைப்பதில்லை.

நாம் மண்ணுலகிலே செய்யும் ஒவ்வொரு அணுவளவான செயலுக்கும் நாமே பொறுப்பாகும். வேறு யாருடைய தலையிலுமே அதனைப் போட முடியாது.

அல்லாஹ் எனக்குத் தந்த உணர்வையும், அறிவையும் செல்வத்தையும் பயன்படுத்தி, பல வினாக்களுக்கு விடைதேடினேன் அதன் காரணமாக எத்தனையோ மதக்கோட்பாடு களைப்படித்தேன். ஏனைய மதங்களை விளங்கிக் கொள்ளும் முயற்சியில் ஈடுபட்டேன். ஒரு நாளிலே 24 மணி நேரமும்ப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தியானிக்கவேண்டுமென்று சில கூறின, உண்ண, உறங்க காலேக்கடன்களை முடிக்கச் செல்லும் பொழுதெல்லாம் தியானம் தடைப்படுகிறது, அமைதி குலேகிறது.

சின மதத்தைப் படித்தேன். பௌத்தமதத்தைப் படித்தேன். அதன் கருத்துக்களேயும் அறியப்பெற்றேன். நான் படித்த எந்த மதமும் எனக்குப் பூரண திருப்தியைத் தரவில்லே. ஆனால், நான் ஒரு விடயத்தை ஒளிவுமறைவின்றிச் சொல்லவேண்டும். நான் படித்த மதங்களுள் இஸ்லாத்தைப் படிக்கும்போது தனியானதொரு சிந்தனேயும் தெளிவும் பிறந்தது. எனினும் இஸ்லாத்தைப் பற்றி எனக்கு பிழையான கருத்துக்களும் கதைகளுமே முன்னமே கூறப்பட்டிருந்ததால் ஆரம்பத்தில் இஸ்லாத்தைப்படிக்க வேண்டுமென்று, எண்ணவில்லே.

இஸ்லாம் பலாத்காரத்தால் பரவியது, வாளாயுதத்தால் வளர்ந்தது, என்றெல்லாம் பொய்யான கதைகள் பரவிவிடப்பட்டிருந்தமையால், இஸ்லாத்தை அறியும் ஆர்வமும் தடைப்படுத்தப்பட்டது. அவ்வளவு விருப்பமும் இருக்கவில்லே. முயற்சியும் இருக்கவில்லே.

அலாவுதீனும் அற்புத விளக்கும் என்ற கதையை எனக்குத் தெரியும், ''ஆயிரத்தொரு இரவுகள்'' எனும் கதைகளும் எனக்கு தெரியும். ஆனால் இஸ்லாத்தைப் பற்றியும் அல்லாஹ்வின் மகத்துவம் பற்றியும் தெரியாதுபோய்விட்டது. கடைசியாக அல்குர்ஆனுடைய மொழி பெயர்ப்பைப் படித்தேன். அமைதி பெற்றேன். நிம்மதியடைந்தேன். நெஞ்சுறுதி பெற்றேன். நேர்வழி கண்டேன்.

அல்குர்ஆனின் ஒவ்வொரு வார்த்தையும் என் உள்ளத்தில் புதியதோர் உத்வேகத்தையும், சிந்தனேயையும், வாழ்க்கையின் தெளிவையும் வழங்கியது.

சூரத்துல் பாத்திஹாவையும், சூரத்துல் பகராவை படித்தவுடனேயே என் அகக்கண் திறந்தது. முதல் ...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மான அல்லாஹ்வின் அருள் நாமத்தால் ஆரம்பிக்கிறேன் என்ற கருத்து என் கருத்தைக் கவர்ந்தது. குர்ஆன் தெய்வீக நூல் என்பதை சந்தேகமின்றி நம்பினேன். நம்பிக்கை கொண்டவர்களினதும், ஈமான் தாரிகளினுடையதும் வழிகாட்டியாக அதுதான் விளங்குகிறது.

முஸ்லிம்கள் கண்ணால் காணாத அல்லாஹ்வை ஐயமின்றி நம்புகிறார்கள். அவன் சொற்படி தொழுகை நடத்துகிறார்கள். அவன் நபியின் வழியில் நடக்கிறார்கள். தருமம் செய்கிறார்கள். நபி (ஸல்) அவர்கள் சொன்னதை செய்து காட்டியதை அப்படியே ஏற்றுக் கொள்கிறார்கள். அதன் படி வாழ்கிறார்கள்.

மறுமையை நம்பிப் பயந்து, முன்னைய முஸ்லிம்கள் நேர் வழி சென்றார்கள். அதனால், வெற்றிக்குமேல் வெற்றி பெற்றார்கள். ஐரோப்பியர்கள் விடுத்த வினாக்களுக்கு விடை காண்பித்தார்கள்.

தவறுகள் ஏற்படுகின்றன. அந்தத் தவறுகள் திரும்ப ஏற்படாதவரை திருத்திக் கொள்ளவும் திருந்தி வாழவும் வழி காண்பித்தனர் முன்னோர்கள்.

ஐரோப்பியக் கல்வி முறை வினா எழுப்பி பல பிரச்சினைகளுக்கு விடை காண முயல்கிறது. அங்கே தவறுகள் நிகழ்கின்றன. அந்தத் தவறுகள் திருத்தவும் படுகின்றன. ஆனால் அல்லாஹ்வின் கலாமில் பிழையுமில்லை. அது இதுவரைக்கும் திருத்தப்படவும் இல்லை. இனிமேல் திருத்தப்படப்போவதுமில்லை. உலகம் முடியும்வரை எந்தத் திருத்தமும் அதற்குத் தேவைப்படவும் மாட்டாது. எத்தனையோ பெரும்பெரும் சவால்களை எல்லாம் எதிர்கொண்டு வெற்றி கண்டுள்ளது அல்குர்ஆன்.

அல்குர்ஆனை ஆராயும் ஒவ்வொருவருடனும் அது நேரடியாகப் பேசுகிறது. நெஞ்சைத் தொட்டு, நம்முடைய உற்ற நண்பனாக அது நமக்கு அபயம் அளிக்கிறது. ஆறுதல் தருகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நண்பர்களே! சகோதரர்களே "குல்ஹுவல்லாஹ்" என்ற சிறிய அத்தியாயத்தை எடுத்துக் கொள்ளுங்கள். "அல்லாஹ் ஒருவன், அவன் சுதந்திரமானவன். எந்தத்தேவையும் அற்றவன். யாரையும் பெறவும் இல்லை. யாராலும் பெறப்படவும் இல்லை. அவனுக்கு இணையாக எதுவும் இல்லை" என்று அதன் பொருள் அமைகிறது. எத்தனை அற்புதமான கருத்துக்கள் இவை. இந்தச்சிறிய சூரா என்னை மிகவும் கவர்ந்தது.

இஸ்லாத்தை அறிய முன்னர் இந்த தெய்வீக மார்க்கத்திலும் ஆயிரக்கணக்கான கடவுளாகள் இருப்பதாகவே நான் நம்பினேன். கருதினேன். அல்குர்ஆனைப்படித்து எனது முந்திய முடிவுகள் யாவும் மாபெரும் பிழையென உணர்ந்து உண்மையையும், சத்தியத்தையும் தெரிந்தவுடன் அல்லாஹ் தனிப்பட்ட எவர்க்கும் சொந்தமானவன் அல்ல, சகல நாடுகளுக்கும், எல்லா மக்களுக்கும், சொந்தமானவன் என்பதை மக நன்றுகவே புரிந்து கொண்டேன். அகிலங்களனைத்துக்கும் சொந்தக்காரனும் அவனே.

இஸ்லாம் படைத்தவன் பெயரையோ, அல்லது பரப்பியவரின் பெயரையோ உடையது அல்ல, இஸ்லாம் என்று சொன்னுல் வழிப்படுதல், கட்டுப்படுதல், சாந்தி, சமாதானம், எனப் பலவாறுக விரிந்து பொருள் கொள்ள முடிகிறது. நபி (ஸல்) அவாகளுக்கு முன்னர் அனுப்பப்பட்ட தூதர்களும் இஸ்லாம் என்ற பொருளுக்கு ஏற்ப அல்லாஹ்விற்கு தன்னை அர்ப்பணித்தவர்களாகப் பணியாற்றினுர்கள்.

இறுதியாக வந்த நபியவர்கள் எழுத வாசிக்கத் தெரியாத உம்மி. ஆனுல், அற்புதத் திருக்குர்ஆனை அழகுற ஓதிக்காட்டினுர்கள். யூதர்கள் சொல்லும் மூஸா நபியைப்பற்றியும் குர்ஆன் கூறுகிறது. சூரா ஆல இம்ரானின் 84,85 ஆம் திருவசனங்களைப் பாருங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"முஹம்மதே சொல்லுங்கள்" நாம் அல்லாஹ்விஞல் எமக்கு அருளப்பட்டதை நம்புகிறேம். இப்ராஹீம் இஸ்மாஈல், ஈஸா, யாகூப், ஆகியோருக்கும் அருளப்பட்டவை இதுவாகும், இதில்தான் மூஸாவுக்கும், ஈஸாவுக்கும் ஏனைய நபிமார்களுக்கும் கொடுத்தான்.

நாங்கள் அவர்களில் வேறுபாடு காட்டுவதில்லை. நாங்கள் அல்லாஹ்விற்கே எம்மை அர்ப்பணித்துவிட்டோம். இஸ்லாத்தைத் தவிர வேறு மார்க்கத்தை தெரிவு செய்தவர்களிடம் இருந்து அது ஒப்புக் கொள்ளப்படவும் மாட்டாது. வரப் போகும் உலகத்தில் அவர் நட்டவாளர்களில் ஒருவராக இருப்பார். ஆகவே அல்லாஹ்வையே நம்புங்கள். அவனுக்குக் கீழ்ப்படியுங்கள். அவ்வாறு வாழ்வதுதான் இஸ்லாமிய வாழ்வாகும். இதுதான் இஸ்லாத்தின் அத்திவாரமுமாகும்.

நான் முன்னர் சகுணம் பார்த்தேன். குறி கேட்டேன். சாஸ்திரமும் கேட்பேன். நாணயத்தைச் சுண்டிப் பார்த்தேன், நட்சத்திரங்களைப் பார்த்தேன். இவற்றையெல்லாம் நம்பினேன்.

ஒழுக்கமில்லாத வாழ்வு வாழ்ந்து களைப்படைந்தேன். நிம்மதியைத் தேடினேன். அது எங்கே கிடைக்குமெனத் தேடி அலைந்தேன். எனது பாவச் செயல்களை உணர்ந்து வருந்தி என்னையே நொந்து கொள்வேன். என்னை யார் மன்னிப்பது என்று ஏங்கினேன். இணை வைப்பதைத் தவிர மற்றவைகள் எதையும் உள்ளத் தூய்மையோடு கேட்பவர்களுக்கு அல்லாஹ் அருள் செய்வதாகவும் மன்னிப்பளிப்பதாகவும் அல்லாஹ் கூறுகின்றான்.

ஆகவே எனது வாழ்க்கை முறையை மாற்றியமைக்க கலைப்பட்டேன். முதலில் பாவங்களினதும் தவறுகளினதும் தலைவாசலான மதுவை நிறுத்தினேன். அதன் மூலமாகத் தொடரும் தீய பழக்க வழக்கங்களை நிறுத்தினேன். என்னை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவற்றுக்குப் பழக்கிய தீய நண்பர்களையும் அவர்களின் சகவாசத்தையும் நிறுத்தினேன். உண்மையை உணர்ந்த எனது இதயக் கறள் அகன்றது. இஸ்லாம் என்னை மனித னுக்கியது. புனிதனுக்கியது. தூய்மையைத்தந்தது. அமைதிப் படுத்தியது - ஆற்றுப்படுத்தியது.

அல்லாஹ் ஆதம் நபியைப் படைத்து ஆதமிடம் நான் உங்கள் இறைவன் அல்லவா என்று கேட்ட பொழுது. அவர்கள் ஒப்புக்கொண்டார்கள் என்று அல்லாஹ் கூறுகின் ருன். ஆகவே ஆதம் நபி (அலை) அவர்களின் பிள்ளைகளா கிய நாமும் ஒப்புக் கொண்டதாகின்றது. அதனை இறுதி நாளில் எனக்குத் தெரியாதே என்று கூற முடியாது. இவை கள் அனைத்தையும் படித்ததும் என் வாழ்வு மேலும் மேலும் ஒளி பெற்றது. எனது இருள் அகன்றது. ஒளி பெற்றேன். சுவர்க்கத்தின் தலைவாசலான தொழுகையை ஆரம்பித்தேன்.

எங்கு சென்ருலும் எவரிடம் சென்ருலும் என்னை கவர்ந்த குர்ஆனை எடுத்துச் செல்வேன். யாரும் அதனைத் தொட விடமாட்டேன். எனது ஒப்புயர்வற்ற கனிப்பெரும் சொத்தாக அதனைக் கருதினேன்.

எனது மதமாற்றத்தைக் கண்ட எனது நண்பர்கள் என்னைக் கேலி செய்தனர். என்னேடு நெருங்கிப் பழகிய பழைய நண்பர்கள் பலரும் என்னை ஒதுக்குவதை உணர்ந் தேன். எனது பழைய வாழ்க்கையை முற்று முழுதாக விட்டொழித்தேன். என்னுடன் ஒன்றித்து உறவாடி பழகி வாழ்ந்த பழைய நண்பர்களை கைவிடுவதற்கு படிப்படியாக நான் இஸ்லாத்தின் பால் வாழத் தலைப்பட்டமை அனை புரிந்தது இஸ்லாத்தின்மீது எனக்கு இருந்த பற்றும் பாச மும் குர்ஆனின் வாழ்க்கையை அமைத்துக்கொள்ளும் ஆர் வத்திற்கு உந்து சக்தியாக அமைந்தன.

கூத்துக்களையும் கும்மாளங்களையும் நிறுத்தினேன். மது வையும் மாதுவையும் தொடுவதைத் தடுத்துக் கொண்டேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்க்கையின் உண்மையான தத்துவத்தை நோக்கத்தை. அல்குர்ஆனை அடிக்கடி ஓதும்போதெல்லாம் தெளிவு படுத்திக் கொள்ள முடிந்தது. இவ்வுலக வாழ்வு தற்காலிகமானது. மறு உலக வாழ்வு நிரந்தரமானது. மறுமையை நம்புவதே முஸ்லிமின் முக்கிய கடமை. நாம் செய்த ஒவ்வொரு செயலுக்கும் உரிய கூலி கிடைக்கும், இந்த உலகில் எதையும் செய்த பின் பறந்துவிடலாம். சாக்குப்போக்குச் சொல்லித் தப்பியும் விடலாம். மறு உலகில் இவ்வாறு தப்பமுடியாது. எல்லாம் அறிந்த அல்லாஹ் நமது செயல்களை காலமும் நேரமும் போட்டு பதியவைத்துக் கேட்பான், ஆனால், நாம் இவ்வுலகில் இன்னும் கவனமாக வாழ வேண்டும். அடுத்த ஆளுக்குத் தெரியாமல் செய்யும் கொலை, களவு, விபச்சாரம் இவையெல்லாம் அல்லாஹ்விற்குத் தெரியும்.

பரம ரகசியமாகச் செய்த பாவங்கட்கும் தண்டனை அனுபவிக்க வேண்டும் என்பதை எக்காரணத்தைக் கொண்டும் மறந்து விடமுடியாது. இறுதி நாளின்போது இவ்வுலகத் செயல்களுக்காக நரக நரகத்திற்கு அனுப்பும் போது ''யா அல்லாஹ்'' உனது அருளை இனி நாம் மறக்க மாட்டோம். உலகுக்கு மாறு செய்யமாட்டோம். எங்களுக்கு இன்னொரு சந்தர்ப்பம் உலகில் வாழ்வதற்குத் தந்தால் உனது கட்டளைகளை போதனைகளை உனது நபியை, அனைத்தையும் சிறு தவறுமின்றி அப்படியே பின்பற்றுவோம். நிறைவேற்றுவோம் என்று கதறி அழுதாலும் ஒரும்போதும் திரும்பி வர முடியாது.

இஸ்லாம் மறு உலக வாழ்வை நம்புவதை வலியுறுத்துகிறது. இத்தகைய பூரண விளக்கமொன்றை நான் பெற்றேன். எதிர்பார்த்திருந்த என் வாழ்க்கைக்கான தெளிவும் நிம்மதியும் இதன் மூலம் எனக்குக் கிடைக்கப் பெற்றன.

இஸ்லாத்தில் யாரும் அசுத்தமானவர்களாகப் பிறப்பதில்லை. யஹூதி, நஸாரா, மஜூஸிகளான நெருப்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வணங்கிகள் முதலானோரும் குறிப்பாக ஒவ்வொரு தனி மனிதனும் இஸ்லாத்தில்தான் பிறக்கிறான். அவர்களுடைய தாய் தகப்பன்மார் தான் அவர்களை அல்லாஹ்விற்கு மாறு செய்தவர்களாக மாற்றி விடுகின்றார்கள்.

வாழ்க்கையின் இன்பங்களை எல்லாம் கண் மூடித்தன மாக அவர்கள் அனுபவிப்பதனால்தானோ அவர்கள் மாறு செய்தவர்களாக மாற்றப்பட்டு இஸ்லாத்தில் நின்றும் மாற்று வாழ்வு வாழ்கிறார்கள் என்னும் எண்ணத் தோன்று கின்றது.

இந்த விளக்கங்கள் அனைத்தையும் பெற்றதும் 1975 ம் ஆண்டு முதல் எனக்குக் கிடைக்கப் பெற்ற அல்குர்ஆன் பிரதியை படித்து வந்ததனால் தெளிவடைந்த நான் 1977ம் ஆண்டு இஸ்லாத்தைத் தழுவ முடிவு செய்தேன். இதற் காக வேண்டி நான் பெரிய விழா எதுவும் எடுக்கவில்லை. ஒன்றும் பெரிதாக நினைத்து அலட்டிக்கொள்ளவும் இல்லை. ஆனால், என் வாழ்வின் மிக மிகப் பெரிய நிகழ்ச்சி எனக் குரிய பெருநாளும், திருநாளும் தெள்ஹீதை அந்த ஓர்மையை வலியுறுத்தும் புனித இஸ்லாத்தை ஒப்புக் கொண்ட நன் னாள் தான்.

லண்டன் மாநகரில் உள்ள பள்ளிவாசலுக்குச் சென் றேன். அங்கிருக்கும் முன்மாதிரியென அழைக்கப்படும் இமாம் அவர்களைக் கண்டேன். என்னுடைய தீர்மானத்தை சொன்னேன். அவர் நீ அல்லாஹ்வை நம்புகிறாயா?, நபி (ஸல்) அவர்கள் அவனுடைய தூதரென ஒப்புக் கொண்டு சாட்சி சொல்கிறாயா?, என்று கேட்டார். நான் இதய சுத்தியோடு ஆம் என்றேன்.

ஷஹாதத்துக் கலிமாவை எனக்குச் சொல்லித்தந்தார். நானும் சொன்னேன். சரி நீ இஸ்லாத்தைத் தழுவி விட் டாய். இனிமேல் பூரண முஸ்லிமாக வாழ் என்று ஆசி கூறி அனுப்பினார். எல்லா முஸ்லிம்களும் இப்படித்தான் இருப்பார்களென எண்ணினேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான் இஸ்லாத்தைப் பற்றி எந்த முஸ்லிமிடமும் கேட்டு அறியலாம் என நம்பினேன். அல்லாஹ்வின் நாட்டப்படி நான் இஸ்லாத்தைத் தழுவ முன்னர் எந்தவொரு முஸ்லிமையும் சந்திக்கவில்லை, அவ்வாறு சந்தித்துப் பழகி இருந்தால், அவர்களைப் பார்த்திருந்தால் ஒரு நேரம் நான் இஸ்லாத்தை நிராகரித்திருக்கவும் கூடும்.

இஸ்லாத்தின் வாழ்வும் கிடைத்திருக்காது. பாவியாகவே நான் மரணித்திருப்பேன். அவன் நாட்டம் வேறு விதமாக அமைந்ததால், முஸ்லிம்கள் மூலம் அவர்களைப் பின்பற்றியிருந்தால் இன்று நான் இங்கே இந்தக் கோலத்திலே உங்கள் முன் வந்திருக்கவும் முடியாது. என் வாழ்க்கையின் எல்லா வழிகளையும், கூறுகளையும் தெளிவு படுத்துவதற்கு அல்குர்ஆன் துணையாக நின்றது. அறிவூட்டியது. வழிகாட்டியது. செய்தியென சொல்லப்படும் குர்ஆன் எனக்குரிய வாழ்க்கையின் ரகசியத்தைச் சொன்ன செய்தியாக நம்பினேன். இருண்டு போயிருந்த எனது பாவ வாழ்விற்குரிய ஒளியாக அல்குர்ஆன் அமைந்தது.

பல முஸ்லிம்கள் இஸ்லாமியராக வாழ்வதில்லை. ஏனையோரைப் போலவே எப்படியும் வாழ்கிறார்கள். அல்லாஹ்வின் நல்லருளால் பேரருள் பெட்டகமான அல்குர்ஆனை ஆரம்பத்திலேயே படித்து வந்ததனால், அது எனக்குப் பேருதவி புரிந்தது. இஸ்லாத்தை கிரியையாக நடைமுறையில் பின்பற்றி ஒழுகுபவர்தான் "கைர உம்மத்" சிறந்த உம்மத் எனும் உண்மை முஸ்லிமாவார்.

ஐவேளைத் தொழுகையைப் பின்பற்றியதும் எனது வாழ்க்கையே மாறியது. தொழுகை என்னில் பழக்கமாக வந்ததனால் என்னுடைய எல்லாக் காரியங்களையும் நாளாந்த எனது வேலைகள் அனைத்தையும் இலகுவாக நிறைவேற்ற முடிந்தது. அல்லாஹ்வுக்கும் அடியானுக்கும் இடையில் திரையில்லாத சந்திப்பாக நேரடித் தொடர்பாக அமைவது தொழுகை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாகும். இறுதி நாளன்று முதலாவது கேட்கப்படுவது தொழுகை பற்றியேயாகும். அதன் பின்னரே ஏனைய தீர்ப்புகள் வழங்கப்படும்.

தொழுகையைக் கிரமமாகக் கடைப்பிடித்தால் வாழ்வில் பல பிரச்சினைகள் தீரும். நம் வாழ்க்கை முறையே மாறும். நமது குடும்பத்தையும், சமூகத்தையும் அறிந்து, சகோதரத்துவத்தை கட்டிக் காப்பதற்கு, ஒட்டி உறவாடுவதற்கு ஒன்று பட்டு வாழ்வதற்கு. தொழுகையைத் தவிர பொருத்தமான வேறு வழி கிடையாது என்பதற்கு மாற்றுக்கருத்து இருக்கவே முடியாது. தொழுகையைப் பற்றி, அல்குர்ஆனில் கூறும் போதெல்லாம், வாழ்க்கைக்காக பொருள் சம்பாதிக்க நீதி நேர்மை முக்கியமெனவும் வருகின்றது. அதே போல இஸ்லாத்தின் முக்கிய கடமைகளாக தொகையையும் ஸக்காத்தையும் அநேக இடங்களில் ஒன்றுபடுத்தியே கூறுகிறான். இதன் மூலம் தொழுகை ஆத்மீகம் என்றால், பொருளாதாரம் லௌகிக வாழ்விற்கு வழியாக அமையும் என்பதாக ஸக்காத் முறையை அல்லாஹ் காட்டித் தருகிறான்.

பிரித்தானியாவில் வருமான வரியைக் கழித்துக்கொண்டு தான் சம்பளம் கொடுப்பார்கள். ஆனால் இஸ்லாம் வருடக் கடைசியில் சகல செலவுகளும் போக எஞ்சியதில் இரண்டரை வீதம் ஸக்காத் வரி கொடுக்குமாறு கூறுகிறது. வட்டியை ஹராமாக்கி, வியாபாரத்தை இஸ்லாம் ஹலாலாக்கி இருக்கிறது. வட்டியை இஸ்லாம் இவ்வாறு தடைசெய்துள்ளதனால், என்னுடைய சேமிப்புக் கணக்கை நடைமுறைக் கணக்காக மாற்றினேன். என்னுடைய நீதி முகாமையாளர் இதனை மறுத்தார். அவருடைய விளக்கத்தை நான் மறுத்தேன். வங்கிகளோ, அல்லது தனி மனிதனோ வட்டி எடுப்பதை விட்டிடொழித்தால் பண வீக்கம் என்பது பகலவனைக் கண்ட பனிபோல் மறையும்.

இந்த இஸ்லாமிய பொருளாதார ரகசியத்யை உலகம் புரிந்து கொள்ளுதல் வேண்டும். இஸ்லாம் கூறுவதுபோல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வட்டியற்ற ஒரு பொருளாதார அமைப்பும், அத்தகைய சமுதாய அமைப்பும் ஏற்பட்டுமானுல் எல்லோரும் கடன் வாங்கலாம். எல்லோரும் கடன் கொடுக்கலாம். பொருளாதார ஏற்றத் தாழ்வு, ஏழை பணக்காரன் என்ற வித்தியாசம் எல்லாமே இல்லாமலாகும். இன்றைய பிரச்சினைகளின் மூலமென கொள்ளப்படும் பொருளாதாரப் பிரச்சினை தீர்க்கப்படுவதை நான் சொல்லத் தேவையில்லை. இது தான் இஸ்லாம் பிரகடனப்படுத்தியுள்ள பொருளாதார முறையும், நியாயமான கொடுக்கல் வாங்கல் முறையும், வியாபார முறையுமாகும்.

அல்லாஹ்வின் பொருளாதார அணுகுமுறையைக் கண்டு தான் ஆச்சரியப்பட்டேன். இஸ்லாமியப் பொருளாதாரத் தத்துவம் உலகின் ஏற்றத் தாழ்வுகளை ஒழிக்கும் ஒரு உன்னத தத்துவமாகும். பொருளுடைமை வாதிகளோ மார்க்சிஸ சமவுடைமை தத்துவங்களோ, இஸ்லாத்தின் பொருளாதார கோட்பாடுகளின் முன்னே தோற்றுப்போகும்.

நான் சங்கீதத்தை தொழிலாகக் கொண்டிருந்தவன். அதன் மூலம் என்னுடைய வாழ்க்கையின் செலவுகளுக்காகவும் என்னுடைய உயர்ச்சிக்காகவும் பொருள் பணம் சம்பாதித்தேன் சங்கீதம் கூடுமா கூடாதா, ஹராமா, ஹலாலா என்ற கஷ்டமான வினு என்னுள் எழுந்தது. அரபியில் சங்கீதம் என்ற வார்த்தையே கிடையாது. ஆனுல் ஆங்கிலத்தில் ''அமியூஸ்மென்ட்'' அதாவது களிப்பூட்டுதல் என்ற ஒரு வார்த்தையும் உண்டு. இந்தச் சொல்லுக்குள் சங்கீதம் மியுசிக் என்ற ஆங்கிலச் சொல்லும் புதைந்துள்ளது.

களியாட்டம், விளையாட்டு என்பனவெல்லாம் அர்த்தமற்றவை, என்பதை இஸ்லாமிய வாழ்வு வாழும்போது இலகுவாகத் தெரிந்து கொண்டேன். இணை வைப்பது இஸ்லாத்தில் மன்னிக்கப்படாத குற்றமாகும். இறைவன் எதையும் மன்னிப்பான். அவனுக்கு ஒப்புவமையாக நிகர்படுத்தி இணை வைத்து வணங்குவதையோ, வழிப்படுதலையோ மன்னிக்கவே மாட்டான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிலேயோ,உருவப்படமோ வீட்டிலேஇருந்தால் அல்லாஹ் வின் மலக்குகள் வீட்டில் பிரவேசிக்கமாட்டார்கள். மேலும் என்னுடைய இசை வாழ்க்கையில் அந்தச் சங்கீத வாழ்க் கையில் ஒழுக்கத்திற்கு இடமிருக்கவில்லே. சங்கீத வாழ்க் கையில் ஒழுக்கத்திற்கு இடம் கிடையாது. இஸ்லாமும் சங் கீதமும் ஒன்றுக்கொன்று முரணுனது.

சங்கீத சாம்ராஜ்யத்தில் தனிப்பெரும் சக்கரவர்த்தி யாக திகழ்ந்த எனக்கு அது பற்றிய ஆவல் குன்றியது. படிப்படியாக மேடையேறிப் பாடுவதை நிறுத்திவேன். என் றாலும் இளஞ் சிறுவர்களின் இதயங்களிலெல்லாம் தீனுல் இஸ்லாத்தின் ஓர்மையையும், உண்மையையும் உண்டாக் கும் பாடல்களே இப்போது இயற்றுகிறேன், இசைக்கிறேன். இன்ஷா அல்லாஹ் கூடிய சீக்கிரம் அவை கெசற்றுகளில் வெளிவரும்.

எவ்வித சிரமமும் அல்லாது இஷ்டப்படி பொறுப்பற்ற வாழ்வு வாழ்ந்த நான் பொறுப்போடு வாழ பொருத்த மான ஒரு துணையைத் தேடினேன். அல்லாஹ்வின் அருளால் அதுவும் எனக்கு நிரப்பமாகக் கிடைத்தது.

திருமணம் மார்க்கத்தில் பாதி என்று இஸ்லாம் இயம் புகிறது, லண்டன் நகரிலே நல்ல முஸ்லிமாக வாழும் எனக் குப்பிடித்த இஸ்லாமியப் பற்றுடைய குடும்பமாக நான் கண்ட கெனியா நாட்டு, முஸ்லிம் குடும்பம் ஒன்றின் தொடர்பு கிடைத்தது. நட்பு ஏற்பட்டது.

என்னே என்னுடைய பழைய நண்பர்கள் ஒதுக்கினுலும், நான் நாளும் பொழுதும் பள்ளியுடன் தொடர்புடையவ ஞக இருந்தமையால் என்னுடைய புதிய இஸ்லாமிய நண் பர்கள் என்னே அனுதாபத்தோடு நோக்குவதை உணர்ந் தேன். தனி மனிதனுக நான் வாழ்வதைப்பற்றியும் இறை சிந்தனேயிலும், அல்குர்ஆன் ஆராய்விலும் என்னே ஈடுபடுத்திய நான் என்னுடைய முஸ்லிம் நண்பர்கள் நான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரமச்சாரியமாக வாழ்ந்து விடுவேனே என்றுகூட எண்ணி யிருக்கலாம். ஆனால், வாழ்க்கையைப்பற்றிக் கூறும். இஸ் லாம் வாழ்வதற்கொரு பொருத்தமான துணையையும் தேடிக்கொள் எனக் கூறுகிறது. அதனைத் தரும் பெண்களுக் காக தனியானதொரு "நிஸா" என்னும் ஓர் அத்தியாயத் தையே அல்லாஹ் அல்குர்ஆனில் அமைத்துள்ளான்

எனது மனைவியின் தகப்பனாரிடம் கேட்டு கெலய நாட்டு குடும்பத்தைச் சேர்ந்த தௌஷிபா என்ற பெண்ணை 1979 ம் ஆண்டில் மணம் முடித்தேன் எங்களுக்கு மூன்று பெண் குழந்தைகள் இருக்கிறார்கள்.

இஸ்லாத்தை எனது வாழ்க்கையின் மூச்சாகவும், பேச் சாகவும் ஏற்று வாழ்வதற்கு நான் தப்லீகில் சேர்ந்தேன். அதில் என்னுடைய ஈடுபாடு இஸ்லாமிய வாழ்க்கையின் இன்பத்தைத் தந்தது.

அரபு மொழியில் ஓரளவு பாண்டித்தியம் பெற்றுள் ளேன். என்னால் முடிந்ததை என்னைப் படைத்த அல்லாஹ் வுக்காக செய்து வருகிறேன். என்னுடைய எட்டு ஆண்டு கால இஸ்லாமிய வாழ்க்கையின் அனுபவங்களில் இருந்து, இன்னும் எவ்வளவோ கூறலாம். ஆனால், உங்களுக்கு அலுப் பும் சலிப்பும் ஏற்படுத்துவதை நான் விரும்பவில்லை.

சலிப்பும், அசதியும் ஏற்படுத்தும் செயல்களை இஸ்லாம் விரும்பவில்லை- வெறுக்கின்றது. இஸ்லாம் மிக இலகுவானது. அதனை நாமே கஷ்டமானதென நினைக்கிறோம். சிலர் அரை குறை அறிவினாலும், அறியாமல் தெரியாமல் பேசுவதனாலும் மக்கள் பயந்து விடுகிறார்கள். இதனால் சிலர் இருந்த இடம் தெரியாது ஓட நினைக்கிறார்கள்.

உலகிலேயே மிக மிக இலகுவான மார்க்கத்தை இரும் பாக நினைக்க இடம் அளிக்கக் கூடாது. மாறாக இஸ்லாத் தைப் பின்பற்றும் முஸ்லிம்களே இரும்பாக இருக்கும் போது ஏனையோர் இஸ்லாத்தை எவ்வாறு எண்ணுவர்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு ஸஹாபா ஒவ்வொரு வியாழக்கிழமை மாலையும் பயான் போதனை செய்வதை வழக்கமாகக் கொண்டிருந்தார். அவரது நண்பர்கள் அவருடைய பயானின் பலனைக பெரிதும் மாற்றம் கண்டார்கள். இதனையிட்டு அந்த நண்பர்கள் ஸஹாபிப் பெரியாரிடம், இன்னொரு தினத்தைத் தெரிவு செய்து பிரசாரம் செய்யுமாறு கேட்டார்கள். அதற்கு அவர் சலிப்புத் தரும் எதையும் செய்யாதீர்கள் என்று, நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள். என்பதை நினைவு படுத்தினார்கள்.

நண்பர்களே! இங்கே இதுவரை நான் நிகழ்த்திய என்னுடைய இந்த சிறிய பயானால் யாராவது ஒருவர் தெளிவு பெற்றாலும், அது எனக்குக் கிடைத்த அழியாப் பரிசாக கருதுகிறேன். எனக்கு இங்கு வந்து கிடைத்த விலை மதிப்பற்ற பொருளாக அதனை எங்கிருந்தாலும் எண்ணுவேன்.

பல மத மக்கள் அன்புடன் அமைதி காத்து அவதானமாக எனது பேச்சைக் கேட்க இங்கே பேரருள் புரிந்த அல்லாஹ்விற்கு நன்றிகூறி எனது நீண்ட உரையை நிறைவு செய்கிறேன்.

அல்லாஹ் அனைவருக்கும் நேர்வழி காட்டுவானாக. அவனுடைய அருள் உண்டாவதாக!

ஸுப்ஹானகல்லாஹும்ம வபிஹம்திக அஷ்ஹது அல்லா இலாஹ இல்லா அந்த அஸ்தஃபிருக வஅதூபு இலைஹ்!

ஸல்லல்லாஹு அலா முஹம்மத்,
ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம்!

ஸல்லல்லாஹு அலா முஹம்மத்
ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம்,!!

ஸல்லல்லாஹு அலா முஹம்மத்
யாரப்பி ஸல்லி அலைஹிவஸல்லிம்!!!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# லண்டன் பத்திரிகையாளர் சந்திப்பு

லண்டன் பத்திரிகையாளரான சகோதரர் பி. அப்துல் லாஹ் என்பவர், 1980 ஆம் ஆண்டு மார்ச் மாதம் யூஸுப் இஸ்லாம் அவர்களை சந்தித்தபோது யூஸுப் இஸ்லாம் அவர்கள் அளித்த பேட்டி.

நீங்கள் இஸ்லாத்தை எவ்வாறு அறிந்து கொண்டீர்கள்?

ஐந்து வருடங்களுக்கு முன்னர் ஜெருஸலம் சென்ற எனது தமையனார் டேவிட் அங்கிருந்து அல்-அக்ஸா பள்ளிவாசலைத் தரிசித்தபோது தான்கண்ட அற்புதங்களை எனக்குச் சொன்னார். கிறிஸ்தவ யூத வணக்கஸ்தலங்களில் இல்லாத சூழ்நிலை ஒன்றை அங்கு கண்டதாக உணர்த்தினார். இஸ்லாத்திலுள்ள ரகசியம் என்ன என்பதை ஆராய்ந்தார். முஸ்லிம் உலகின் ஒழுக்கத்தாலும் அமைதியான அனுஷ்டானத்தாலும் அவர் கவரப்பட்டார். அவர் லண்டன் திரும்பியதும் அல்குர்ஆனின் ஆங்கில மொழி பெயர்ப்பின் பிரதியொன்றை பெற்றுவந்தார். வழிகாட்டலைத் தேடி வாடி அலைந்து கொண்டிருந்த எனக்கு அதனை அன்பளித்தார்.

* அல் குர்ஆனைப் படித்தபோது உங்களுக்கு அதிகத் தாக்கத்தைத் தந்த பகுதி எது?

அல் குர்ஆன் என்னைக் கவர்ந்தது காலத்தால் கட்டுப்படாத நூலாகும் அது. சொற்கள் பரிச்சயமாக இருப்பினும் அதன் கருத்துக்கள் அற்புதமாக அமைந்திருந்தன. வாழ்க்கை எனக்கு மர்மமாக இருந்தது. எனினும் பிரபஞ்சத்தின் இயக்கத்திற்கு ஒரு தலைவன் உண்டு என்பதை நான் நம்பினேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்ணால் காணாத அந்த தலைவன் யாரென சிந்தித்தேன். எத்தனையோ ஆத்மிக வழிகளில் அதனைத் தேட முயற்சித்தேன். உள்ளம் திருப்தியடையவில்லை. வழிகாட்டி அற்ற மரக்கலம் போலானேன், அல்குர்ஆனைப் படித்ததும் அது எனக்காகவே உருவானது என்பதை உணர்ந்தேன்.

ஒன்றரை வருடமாக திரும்பத் திரும்ப ஓதினேன், அப்போது ஒரு முஸ்லிமையும் சந்தித்தது கிடையாது. திருக்குர்ஆனின் தூதில் மூழ்கிப்போயிருந்தேன். ஒரு முடிவிற்கு வரத் தலைப்பட்டேன். ஒன்று அப்படியே நான் இஸ்லாத்துக்கு அர்ப்பணமாகுதல், அல்லது, சங்கீத சாகரத்தில் மூழ்குதல் இது எனது வாழ்வின் கஷ்டமானபிரச்சினையாக இருந்தது.

ஒரு நாள் லண்டனில் திறக்கப்பட்டுள்ள புதிய பள்ளியைப்பற்றி எனது நண்பர் கூறினார். இஸ்லாத்தை ஏற்கும் காலம் நெருங்குவதை உணர்ந்தேன், 1977ம் ஆண்டின் ஒரு வெள்ளிக்கிழமை ஜூம்ஆ தொழுகையின் பின்னர் இமாமைக் கண்டேன். இஸ்லாத்தில் இணைந்தேன். முஸ்லிம் சமுதாயத்துடன் இரண்டறக் கலந்தேன்.

* இப்போது நீங்கள் ஒரு முஸ்லிம். முஸ்லிம்களைப்பற்றி உங்கள் அபிப்பிராயம் என்ன?.

அதிக முஸ்லிம்கள் தமது பாதையிலிருந்து தவறிவிட்டனர், அவர்கள் அல்குர்ஆனைச் சரியாகப் படிக்கவில்லை. அதை விளங்க முயற்சிப்பவர்க்கு அதில் அள்ள அள்ளக்குறையாத அறிவுச் செல்வம் உண்டு. உண்மையான இஸ்லாம் ஒன்றுதான் அது எதுவென்றால் அல்லாஹ்விடம் சரணடைந்து, அவனது றஸூலைப் பின்பற்றுவதாகும். இதுதான்சுவனத்துப் பாதையுமாகும்.

உண்மையையும் போலியையும் உணரும் சக்தியைப்பெற நேரான பாதைகளில் செல்பவரைப் பின்பற்றுதல் வேண்டும். இதற்காக அல்லாஹ் எத்தனையோ செல்வங்களை உலகம் முழுவதும் பரப்பியுள்ளான். முஸ்லிம்கள் அனைவரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒன்று இரண்டு உண்மை இஸ்லாத்தை உணரவேண்டும். எல்லா முஸ்லிம்களும் ஒரே அல்லாஹ்வின் ஒரே குர்ஆனில் ஒரே றஸூலில், நம்பிக்கையுடையவர்கள். எனவே, தனிப்பட்ட ஒவ்வொருவரும் இதனைச் சிந்தித்துப் பார்க்கவேண்டும்?.

* நீங்கள் செய்த பல வேலைகளை திடீரென நிறுத்தியது உங்களுக்குக் கஷ்டமானதாக இல்லையா?

இல்லை. ஏனெனில் நான் செய்தவைகளெல்லாம் தீயவை களே. உதாரணம். மது அருந்துதல், புகை பிடித்தல் வட்டி வாங்குதல் போன்றவற்றையே செய்தேன். எனக்குக் கஷ்ட மாக இருந்தது- எனது பழைய நண்பர்களை விட்டுவிடுவது தான். இவர்கள் இஸ்லாத்தின் தூதை இன்னும் ஏன் ஏற் காதுள்ளனர் என்பது எனக்கு விளங்கவில்லை. நான் அவர் களை உடனடியாக துண்டிக்க முடியவில்லை. ஆனால் எனது மார்க்கத்திற்காக அவர்களுக்கும் எனக்கும் இடையில் ஒர் எல்லைக்கோடு போட்டுக் கொண்டேன்.

எத்தனையோ சோதனைகள். உதாரணம். முஸ்லிமாக நண் பர்கள் மத்தியில் இருக்கும்போது மன்னிப்புப் பெற்றுக் கொண்டு, தொழச் சென்றுவிடுவேன். நான் எங்கே போவது என்றுகூட அவர்களிடம் சொல்லமாட்டேன். பின்பு ஒரு நாள் அதையும் சொன்னேன். எல்லோரும் அதனை ஏற்று என்னை மதித்தார்கள், கௌரவித்தார்கள். கடமையைச் செய்ய முனையும்போது அல்லாஹ் கஷ்டத்தை இலகுவாக்கு வான்.

* உங்களுடைய பழைய வாழ்க்கைபற்றி சிறிது கூற முடியுமா?

எனக்கு 15 வயதாக இருக்கும்போது சங்கீதத்தில் ஆர் வம் பிறந்தது. தந்தை ஒரு கிடார் வாங்கித் தந்தார் தேவையான பாடல்களை நானே இயற்றுவேன். கட்ஸ்டீ வன்ஸ் என்ற பெயரைத் தெரிவு செய்தேன். 18 வயதில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனது இசைத்தட்டு வெளியாயிற்று. அது எனக்கு பெருவெற்றியைத் தந்தது. ஐரோப்பாவெங்கும் பிரபல்யமானேன்.

சங்கீத வாழ்வு என்னோடு பொருந்தவில்லை. கடுமையாக மது அருந்தினேன். கணக்கில்லாது புகைப்பிடித்தேன். அதனால் நான் பெரிதும் பாதிக்கப்பட்டேன். கடுமையான காசநோயும் வாட்டி வதைத்தது.

இதனால் கடுமையாகப் பாதிக்கப்பட்ட நான் பாடும் தொழிலைக் கைவிட்டு சிகிச்சைபெற சில மாதங்கள் ஆஸ்பத்திரியில் அடைந்து கிடந்தேன். அந்தக் காலக்கட்டத்தில் நான் கீழைத்தேய தத்துவங்களைப் படித்தேன். அவ்வேளை இரகசியப்பாதை எனும் நூல் ஒன்றைப் படிக்கும் சந்தர்ப்பமும் கிடைத்தது. அது ஆத்மா பற்றிய அறிவை ஏற்படுத்த உதவியது நான் தேடிக் கொண்டிருந்த கூட்டேற்றத்திற்கு என்னை அழைத்துச் சென்றது.

அதன் பின்னர் நான் இயற்றும் பாடல்களில் என்னுடைய ஆத்மீக எழுச்சி பற்றி கூறமுடிந்தது. அத்துடன் எனது சுயசரிதையையும் அவை சுட்டிக்காட்டின.

என்னுடைய 21 ஆம் வயதின் போது நான் உலகப் புகழ் பாடல்கள் என்ற பாராட்டைப் பெற்றதனால் என்னுடைய பொப்பாடல்களை பெரும்பாலானோர் விரும்பலாயினர்.

* பொப் பாடல்களை விரும்பும் பலரில் முஸ்லிம்களும் இருக்கிறார்கள். இதுபற்றி உங்கள் அபிப்பிராயம் என்ன?

மக்கள் தரமான பாடல்களையும் குரல் இனிமை மிக்க இசையோடு கூடிய பாடல்களையும் ரசிப்பர். என்னுடைய பாடல்களும் அவ்வாறு என்று கருதியே மக்கள் வரவேற்றனர். அதேநேரம் கசற், ரேடியோ என்பன மூலமும் எனது பாடல்கள் வெளியாகியமையும் பாராட்டுப்பெறக் காரணமாகும். பொப் பாடல் என்பது ஒரு கதை போன்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அது ஆத்மாவிற்குரிய தற்காலிக ஆறுதலையே அளிக்கும். மக்கள் இசையாக ஜனரஞ்சகமான பொப் பாடல்களை அந்தந்தப் பாடகரின் பாடும் திறமைக்கேற்ப விரும்புவதாகவும் பாவத்தில் மூழ்கடிக்கச் செய்யும் இன்றைய நவீன உலகின் ஒரு கருவியாகவும் இது அமைந்துள்ளது.

* நீங்கள் பாடுவதை நிறுத்திவிட்டீர்களா?

வாழ்க்கையின் சத்திய வழிக்கு இட்டுச் செல்வதை இசைத்துறை திசைத்திருப்பிவிடும் என்ற பயம் காரணமாக என் பாடல் துறையில் ஈடுபடமாட்டேன் என்று உறுதியாகக் கூறமுடியாது. இன்ஷா அல்லாஹ் என்று கூறுமல் எதையும் கூறமுடியாது.

* இப்போது என்ன தொழில் செய்கிறீர்கள்?

இப்போது எழுத்து ரீதியில் உழைத்துக்கொண்டு இருக்கிறேன். அல்லாஹ்வின் திருப்திக்காகவே பாடுபடுகிறேன்-வேலை செய்கிறேன். இஸ்லாத்தின் பால் பிரித்தானியாவை இழுத்தெடுப்பதற்கு என்னலான பணிகளில் உழைத்து வருகிறேன். பிரித்தானியாவில் இஸ்லாத்தின் வளர்ச்சி தினமும் பெருகிக்கொண்டு போகிறது, இஸ்லாத்திற்காகப் பாடுபடும் கருவியாக மாறியுள்ளேன். அரபு மொழியை கற்று வருகிறேன். இதனுல் அல்குர்ஆனை முழுமையாக விளங்க முடியும். அதிக முஸ்லிம்களுக்கு அரபு வாசிக்கத் தெரிந்ததனுல் குர்ஆனை ஓதுகின்றனர்.

நான் அல்குர்ஆனை இன்னும் எவ்வளவோ அறிய வேண்டியவனுக உள்ளேன். அரபு மொழி இதற்கு அவசியம் என்பதை அறிகிறேன். குர்ஆனின் ஒவ்வொரு வசனத்தையும் அறிவதற்கு அரபு மொழியில் ஆற்றல் தேவையாகும். அக்குர்ஆனின் ஒவ்வொரு வசனமும் வார்த்தையும் வழிகாட்டுவதாகும்; ஒளியூட்டுவதாகும். குர்ஆனை மக்கள் இன்று அணுகும் முறையைப் பற்றியும், பின்பற்றும் வகை பற்றியும் பெரிதும் வருந்த வேண்டியுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குர்ஆன் சாதாரண ஒன்றாக மனிதன் கருதியுள்ளான். அதன் ஒவ்வொரு வார்த்தையும் அல்லாஹ்வினதாகும். அவ்வார்த்தைகள் எக்காலத்திற்கும் பொருத்தமானது. நம்பிக்கையாளர்களது உறுதிப்பாட்டிற்குரிய மத்திமமாகவும் அத்திவாரமாகவும் அல்குர்ஆன் அமைந்துள்ளது.

* பிரித்தானியாவில் முஸ்லிம் அல்லாதோர் மத்தியில் ஏற்பட்டுள்ள தாக்கம் பற்றியும் இஸ்லாமியப் பணி பற்றியும் என்ன கருதுகிறீர்கள்?

நாம் மிகவும் கவனமாகச் செயற்படுவது கடமையாகும். இந்த விடயத்தில் கிறிஸ்தவர்களை முன்மாதிரியாகக் கொள்ளக்கூடாது. இது நம்மவரின் முன்னுள்ள மகத்தான பொறுப்பாகும். இஸ்லாத்தின் அழைப்பும் அறைகூவலும் வாயால் மாத்திரம் இருத்தல் கூடாது. செயற்படுத்தலாக இருக்கவேண்டும். நடத்தைகள் மூலம் நிரூபித்துக்காட்டி பின்னர் அந்த வழியில் இஸ்லாத்தின் அழைப்பால் எளிமையாகவும் பணிவாகவும் கருணையோடும் ஈடுபடவேண்டும்.

அல்லாஹ் ஒருவன் என்று கூறுங்கள். ஒரே முறையில் இஸ்லாத்தைப் புகுத்த முயலக்கூடாது. அல்லாஹ்வின் ஓர்மையை அறியச்செய்வதே முதற் பணியாகும். அதனை தெளிவுபடுத்தியதன் பின்னர் இரவும் பகலும் அல்லாஹ்வை தொழுவது பற்றிய கடமையைச் செய்யுங்கள்.

ஐவேளைத் தொழுகையை கூறுங்கள், தொழுகையோடு ஸக்காத் பற்றியும் கூறவேண்டும். வசதி படைத்தவர் ஸக்காத் கொடுக்கவேண்டும்.

நற்குண நற்பண்புகள் நம்மிடம் இருத்தல்வேண்டும்.

நமது நடத்தை முன்மாதிரியாக அமையவேண்டும்.

தர்க்க ரீதியாக இஸ்லாத்தை அறிமுகப்படுத்தினால் அவை அடுத்த கணமே மறந்துபோகலாம். அவ்வாறு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிமுகப்படுத்துவது அவ்வளவு வெற்றியை அளிக்காது. நபிகளாரின் வாழ்க்கை, அல்குர்ஆனக இருந்தது என ஆயிஷா (றலி) அவர்கள் அறிவித்துள்ளார்கள்.

அல்குர்ஆன் அர்த்தமின்றி ஓதப்படுவதைவிட பொருள் உணர்ந்து ஓதுவதே சிறப்பாகும். குர்ஆன் மனிதனைப் பூரணப்படுத்துவதற்கு இறைவனால் அனுப்பப்பட்டதாகும். பேச்சளவில் மாத்திரம் அதனை பாராயணம் செய்வதில் பயனில்லை.

அதன் போதனை கொஞ்சமாகப் பேசி செயற்பாடுகளை அதிகப்படுத்த வேண்டும் என்பதாகும். அந்தளவில்தான் இஸ்லாத்தின்பால் நேர்வழியை - ஹிதாயத்தை வழங்க முடியும்.

★ தகவல் சாதனங்கள் பிர்த்தானியாவில் இஸ்லாத்தைப் பற்றி தப்பான செய்திகளைப் பரப்பும் கருவிகளாகியுள்ளன. இதை நீக்கவும், இத்தகையோரை திருத்தவும் எவ்வாறு பணிபுரியலாம்? ஆகக்குறைந்தபட்சம் இஸ்லாத்தை எந்தள வுக்கு அடையச்செய்யலாம்?

மனிதன் அவனவன் மனதை அவனவனே அறிவான். தகவல் சாதனங்கள் கூறும் கருத்துக்களை அப்படியே உடனே நம்புமளவுக்கு மனிதர்கள் மடையர்களல்லர். சொன்னதை உடன் நம்புவதைவிட சிந்தித்து நம்புவதுதான் சிறந்தது. அந்தளவில் தகவல் சாதனங்கள் அவற்றின் கடமைகளைச் செய்வதாகக் கருதினாலும், அவை தரும் செய்திகளை நாம் நம்ப முன்னர் நம் மனதை சிந்திக்கத் தூண்டவேண்டும்.

முஸ்லிம்களைப் பற்றிய தவருன பிரச்சாரம் இடம் பெற்ருல் அதனை மக்கள் நம்பலாம். அதேபோல் தவருன நடத்தைகளை நேரிலும் கண்டுவிட்டு பத்திரிகை முதலியவை மூலமும் அறியச்செய்தால் மக்கள் நம்புவர்.

தனித்தனியாகவே ஒவ்வொரு தனி மனிதனூடாகவும் இஸ்லாத்தின் அழைப்பு விடுக்கப்படல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதற்குரிய சிறந்த வழி ஒவ்வொருவரும் கூட்டாகச் செயற்படுவதாகும். இன்றைய செய்தி நாளையாகிவிட்டால் அது பழைய செய்தியாகும். எனினும் மக்களில் அவ்வளவு தூரம் தாக்கத்தை ஏற்படுத்தாது.

ஒருவருக்கொருவர் கொள்ளும் நெருக்கமான பழக்க வழக்கங்கள் தான் சரியான தாக்கமாகும். எனவே நீர் ஒரு முஸ்லிமாக இருப்பின் உமது பணி உன்னைச் சார்ந்த ஒருவர் இஸ்லாத்தில் இல்லாதபோது அவரைத் திருத்துவதாகும்.

அதன் பின்னரே அடுத்தவருக்குக் கூறவேண்டும்.

முதலில் உனது குடும்பம் இஸ்லாத்தில் இருக்கிறதா? எனப் பார். பெயரளவில் முஸ்லிமாக இருப்பதால் தண்டனையிலிருந்து தப்பமுடியாது. உங்களில் எங்களில் அதிகமானோர் இஸ்லாத்தை இன்னும் பூரணமாக அறியவேண்டியவர்களாகின்றோம்.

[ஆங்கில மூல நூல் உதவி:- இலங்கை ஜமாஅத்தே இஸ்லாமித் தலைமையகம்.]

(தமிழாக்க உதவி :- மன்ஸூர் எச். எம். ஷரீப்)

[stamp] கொழும்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'தினகரன்' தேசியப் பத்திரிகையில் ஆலமுன் இஸ்லாம் பகுதியில் யூஸுப் இஸ்லாம் பற்றி தொடர்ந்து மூன்று வாரங்கள் எழுதியவை –

## இப்படி வந்தார் !

சனிக்கிழமை நண்பகல் 12-45 க்குக் கட்டுநாயக்கா விமானநிலையத்தில் தனது பிரயாணக் காசோலையை மாற்றுவதற்கு பீ. ஸீ. ஸீ. வங்கிக் கிளைக்கு அவர் போகின்றார். பிரித்தானிய கடவுச் சீட்டு அங்கே வங்கியில் கடமையாற்றும் 22 வயதுடைய அக்குறணையைச் சேர்ந்த சகோதரர் அஸ்மியிடம் கிடைக்கப் பெறுகிறது. அதனைப் பார்த்த போது அஸ்மியால் நம்ப முடியவில்லை. முன்பு தான் கேள்விப்பட்ட செய்தியை இளவல் அஸ்மி தான் காண்பது கனவோ என்று எண்ணுகின்றார். அவருடன் கதைக்கிறார். நீங்கள்தானா கட் ஸ்டீவன்? 77ல் இஸ்லாத்தைத் தழுவிய யூஸுப் இஸ்லாம் என்று பெயர் பெற்றவர் நீங்கள்தானா? அமைதியோடு பதிலளித்துவிட்டு, இளவல் அஸ்மியிடம் ஆகவேண்டியவற்றை முடித்துக்கொண்டு விடைபெறுகிறார்.

இளவல் அஸ்மியின் இதயத்தில் ஒரு ஆதங்கம், இவரை விடப்படாது. தொடர்ந்தார் பஸ் நிலையத்திற்கு யூஸுப் இஸ்லாம் அவர்களுடன் இளவல் அஸ்மியும் செல்கிறார்.

இதற்கிடையில் அந்த பீ. ஸி. ஸீ. வங்கிக்கு வரமுன்னர் விமானநிலையத்தில் "ஏயர் லங்கா'' கரும பீடத்திலும் யூஸுப் இஸ்லாம் நம் நாட்டைப் பற்றி சில தகவல்களைப் பெற்றுள்ளார். அவரின் கடவுச் சீட்டைக் கண்டதும் அங்கிருந்தோர் அடையாளம் கண்டு கொண்டனர். உலகப் புகழ் பெற்ற பொப் பாடகர் கட் ஸ்டீவன் முன்னால் தோன்றுகிறார். ஆனால், முஸ்லிம் கோலத்தில், எனினும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடவுச்சீட்டு கட்ஸ் ஸ்டீவன் என்பதை நிரூபித்ததால், எங்கும் ஓரே பரபரப்பாக இருந்தது. வாய்க்கு வாய் குழுமியிருந்தவர்கள் நூற்றுக்கணக்கானவர்கள் மத்தியில் கதை காட்டுத் தீபோல் பரவியது. தன்னால் மற்றவர்களுக்கு தர்ம சங்கடம் ஏற்படக்கூடாது என்ற நிலையில் பீ.ஸீ.ஸீ.யில் இளவல் அஸ்மியைப்போய் பிரயாணக்காசோலையை மாற்றுவதற்காக சந்தித்ததன் பின்னால் இப்பொழுது கட்ஸ் ஸ்டீவன் தான் ஆனால், அவர் ஓர் உண்மை முஸ்லிம் கோலத்தில், அடர்ந்த தாடியுடன், வெள்ளைத் தொப்பியுடன்' பொன்னிற மேனியைப் போர்த்திய வெள்ளைச் சர்வாணி போட்டு பஞ்சாப் பாணி உடையுடன் அமைதியோடு விமானநிலையத்தை விட்டு வெளியேறியுள்ளார்.

இளவல் அஸ்மியும் யூஸுப் இஸ்லாமும் ஒருவரையொருவர் நன்கு அறிமுகமாகினர். சகோதரா, இங்கே உங்கள் வருகையின் காரணம்? இளவல் அஸ்மி கேட்கிறார். அது இறைவன் செயல். அவனின் நாட்டம். இங்கு என்னை அழைத்து வரச் செய்துள்ளது. யூஸுப் இஸ்லாம் தொடர்ந்தார்.

இந்தியாவில் கேரள மாநிலத்தில் நடைபெறும் முஸ்லிம் இளைஞர் கருத்தரங்கு ஒன்றின் சிறப்புரைக்காக அழைக்கப்பட்டிருந்தேன். அங்கே திருவனந்தபுர விமான நிலையத்தில் எனது பிரித்தானியக் கடவுச்சீட்டைக் கண்டதும் விஸா தர மறுத்தனர். சீக்கியர் குழப்பம், பஞ்சாப் நிலை என்று காரணம் கூறினார்கள். அவ்வாறு விஸா தேவையாயின் அயல் நாடான இலங்கைக்குச் சென்று அதனை எடுத்து வாருங்கள் என்றனர். உங்கள் இலங்கைக்கு வர ஏதுவானதும் அதுவே.

இப்பொழுது உங்களோடு இருக்கிறேன். சனி, ஞாயிற்றுக்கிழமை என்பதனால் விஸா அலுவலகம் இங்கே மூடப்பட்டு இருப்பதனால் திங்கட்கிழமை முயற்சிப்போம் என்று இளவல் அஸ்மி கூற யூஸுப் இஸ்லாம் அவர்கள் பம்பலப்பிட்டியில் உள்ள இஸ்லாமிய செயலகத்தைச் சென்றடை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிறார். அங்கே அதன் பணிப்பாளர் நாயகம் சகோதரர் ஹம்ஸா ஹனிபா அறிமுகப்படுத்தப்படுகிறார்.

## இப்படி நடந்தார்!

அவர் இலங்கையில் இஸ்லாமியப் பிரசாரகராக ஓரிரு தினங்களாவது இருக்கவேண்டுமென்பது இறைவனின் நாட்டமாக இருந்துள்ளது.

ஞாயிற்றுக்கிழமை இந்திய மாநாடு முடிந்ததனால் இந்திய விஸா பெறும் யோசனையைக் கைவிடுகிறார். இப்பொழுது நிகழ்ச்சி நிரல் தயாரிக்கப்படுகிறது.

யூஸுப் இஸ்லாம் அவர்களின் தற்செயல் நிகழ்ச்சி நிரலா எவது எண்ணவேண்டியுள்ளது. எது எப்படியாயினும் அவரின் இலங்கை விஜயம் நான்குநாட்கள் அமைந்து, அந்த 96 மணிநேரங்களிலும் அவர் நன்றாகத் திட்டமிட்ட அடிப்படையிலேயே பயன்படுத்தப்பட்டிருக்கிறார் என்பதை மட்டும் நம்பமுடியும். அந்த வகையில் இஸ்லாமிய செயலகத்தின் பங்கும் பணியும் பாராட்டப்பட வேண்டியதாகும்.

இதுபற்றி நண்பர் ஒருவருடன் கதைத்தேன். யூஸுப் இஸ்லாம் முஸ்லிமாக அன்றி பொப் பாடகராக பழைய ஜாஹிலிய்யாக கட்ஸ் ஸ்டீவனாக வந்திருந்தால் எப்படியிருக்கும் என்று அந்த நண்பர் கேட்டார்.

ராஜ மரியாதை, உல்லாசக்காரர், நட்சத்திர ஹோட்டல் முதலியனவுமே கிடைத்திருக்கும். லட்சக்கணக்கில் கூட்டம் கூடி பாட்டுக் கேட்டு மகிழ்ந்திருப்பர். வேறு என்ன இருந்திருக்க முடியும் என்று கூறினேன்.

அதேவேளை தாடியோடும் ஜுப்பாவோடும் கை கடுக்க தஸ்பீஹ் மாலையோடும், வேஷம்போடும் நம்மவர் இவர்க்கு ஓர் உண்மை முஸ்லிமாக மனம்மாறி, மதம்மாறிய யூஸுப் இஸ்லாம் நல்லதொரு உதாரணம் இல்லையா என்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இல்லை. இஸ்லாத்தின் பெயரால் அவ்வாறு போலியாக உள்ள நம்மவர்கள் பரம்பரை முஸ்லிமாக இருப்பதனாலும் சுயநலம், ஏமாற்று வஞ்சகம், பொய், மாறுபாடு, முனாபிக் என்பன அவர்களின் பரம்பரையோடு ஒட்டிப் பிறந்தவை யாக இருந்ததனாலும், அவற்றை மூடி மறைப்பதற்கே நம்ம வர்கள் வேஷம் போடுகிறார்கள் என்று நண்பர் உணர்ச்சி யோடு கூறினார்.

யூஸுப் இஸ்லாத்தின் வருகை இத்தகையோர்களுக் கெல்லாம் பலத்த அடி. புதிதாக இஸ்லாத்தைத் தழுவிய ஜாஹிலியா வாழ்வு வாழ்ந்து, உலக சுக போகங்களுக்கு அடிமைப்பட்ட ஒருவர், உண்மையை உணர்ந்து, தானாகவே இஸ்லாமியனாக மாறுவதாயின் அது உலக சாதனையாகு மென நண்பர் கூறி மகிழ்ந்தார்.

"நீனுல் இஸ்லாத்தைப் பாதுகாக்க நீங்கள் தயாராக இல்லையென்றால், ஒரு சமுதாயத்தையே உருவாக்கி அதனைப் பாதுகாப்பேன்" என்று அல்குர்ஆனிலே அல்லாஹ் இறு மாந்து கூறுவதையும் யூஸுப் இஸ்லாத்தின் இன்றைய செயல்களுடன் ஒப்பிட்டுப் பார்க்க வேண்டும்

இஸ்லாம், ஈமான், முஸ்லிம் ,தனித்துவம், சமுதாயம், சன்மார்க்கம், என்றெல்லாம் கூறிக்கொண்டு வாழ்க்கையில் ஏதும் இல்லாது போலியாக நடிப்புலக வாழ்வு வாழ் வோரை விட யூஸுப் இஸ்லாம், குர்ஆனின் கூற்றுக்குத் தக்க உதாரணமாகும் என்று நண்பருக்குத் தொடர்ந்து விளக்கினேன். கிறிஸ்துவாகப் பிறந்த வெள்ளைக்காரர் என் பது மட்டுமல்ல அதன் போதனைகளைப் போதுமாகப் படித் தவர். ஏனைய மதங்களையும் ஆராய்ந்து நிச்சயமாக அறிந் தோர்ந்தவர்.

கிரேக்க, உரோம, பாரசீகத் தத்துவங்களையும், படித் தவர், அந்த வகையில் உலகின் மாற்ற முடியாத நியதியாகி விட்ட, இறைவனின் மார்க்கமான இஸ்லாத்தையும், ஓரிரு வாரமோ, ஒரு சில மாதங்களோ யூஸுப் இஸ்லாம் ஆராய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வில்லை. இரண்டு வருடங்கள் ஆராய்ந்தார். சகோதரர் ஜெருஸலம் சென்றபோது பெற்றுவந்த அல்குர்ஆனின் ஆங்கில மொழி பெயர்ப்பே தனது - இஸ்லாமிய ஆராய்ச்சிக்கு வித்திட்டது. அல்குர்ஆனின் மொழிபெயர்ப்பு தனக்கு நாளுக்கு நாள் தெம்பையும், துணிவையும், தெளிவையும் தூர சிந்தனையையும், சூனியமாய்ப் போயுள்ள தனது வாழ்க்கையின் காரணத்தையும் வழங்கியது என்று யூஸுப் இஸ்லாத்தைக் கேட்டபோது அமைதியோடு கூறி அல்ஹம்து லில்லாஹ் என்றார்.

உண்மையாகவே மன மாற்றம் பெற்றார். பின்னர் இவர் மத மாற்றமும் பெற்றார். 1977 ம் ஆண்டில் கலிமா மொழிந்து முஸ்லிமானார்.

யூஸுப் இஸ்லாத்தின் விஜயத்தின் பொருத்தம் மிகச் சிறப்பாக அமைந்தது என்று கூறினேன். சனிக்கிழமை நண்பகல் வந்த அவர் செவ்வாய்க்கிழமை நள்ளிரவு செல்லும் வரை சன்மார்க்கப் பணியில் இயந்திரமாகச் செயற்பட்டார்.

முதலாம் நாள் சனிக்கிழமை மாலை இஸ்லாமிய செயலகத்தில் முதலுரை. மறு நாள் காலை ஞாயிற்றுக்கிழமை ஜமா அத்தே இஸ்லாமியில், மாலை ஸாஹிராக் கல்லூரி, பின்னர் தப்லீஃ தலைமையகத்தில் - கலந்துரையாடல். இதற்கிடையில் ஞாயிற்றுக்கிழமை காலையில் இலங்கை தொலைக் காட்சிக் கூட்டுத்தாபனத்திற்கும் பேட்டி.

திங்கள் காலை இலங்கை ஒலி பரப்புக் கூட்டுத்தாபனத்தின் பேட்டி.

மாலையில் பேருவளை நழீமிய்யா கலா பீடத்தில்.

அன்று மாலை பெண்களுக்கான சிறப்புரையொன்றும் இஸ்லாமிய செயலகத்தில் நிகழ்த்தப்பட்டது. மீண்டும் திங்கட்கிழமை மாலை தப்லீக் தலைமையகத்தில் மஃரிப் தொழு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கையைத் தொடர்ந்து ஒன்றரை மணி நேரம் ஆற்றொழுக்காகப் பேசினர்.

மறுநாள் செவ்வாய்க்கிழமை அமைச்சர் முஹம்மத் அவர்களின் இல்லத்தில் காலை உணவை அருந்திவிட்டு, அங்கு கூடியிருந்தவர்கட்கு மத்தியில் ஓர் - உரை

தொடர்ந்து பம்பலப்பிட்டி முஸ்லிம் மகளிர் கல்லூரியில் நண்பகல் உரை நிகழ்த்திவிட்டு, 12 மணிக்குத் தான் தங்கியிருந்த ஹோட்டல் ஓர்ச்சாட்டில் தனது அறையில் பத்திரிகையாளர்களைச் சந்தித்து சிறப்புப் பேட்டியளித்தார். பின்னர் அன்று மாலையும் வெள்ளவத்தை இராமகிருஷ்ண மிஷன் மண்டபத்தில் கேள்விகள் பலவற்றிற்கு யூஸுப் இஸ்லாம் அவர்கள் தமது எட்டு ஆண்டு கால அனுபவத்தை வைத்து மிகவும் அமைதியோடு பதிலளித்தார் - பகிரங்கச் சொற்பொழிவாற்றினர்.

## இப்படிப் பிரிந்தார்!

ஹாஜி யூஸுப் இஸ்லாத்தை இதயத்தோடு இதயமாய் இறுகக் கட்டிப்பிடித்து விமான நிலையத்தில் நள்ளிரவு 12.25க்குப் பிரிந்தேன். என் கண்கள் மட்டுமல்லாது என்னுடன் வழியனுப்பச் சென்ற இளவல் அஸ்மி, சகோதரர்கள் ஹம்ஸா ஹனிபா, சியாத் முதலிய ஐவரினது கண்களும் கூட இதய சங்கமத்தால் மெல்லியதாகப் பனித்ததைப் பார்த்தேன்.

அது ஆனந்தக் கண்ணீரன்றி ஓர் உண்மை முஸ்லிமை விட்டுப பிரியும் சோகக்கண்ணீர் என்று கூறினல் ஒப்புக் கொள்வீர்கள் என நம்புகிறேன். விமான நிலையத்தில் ஹாஜி யூஸுப் இஸ்லாம் அங்கே சுங்கப் பரிசோதனைக்கு மிகவும் உதவியாக இருந்தமையை அவர் அவசரமாக விமான வழிக்குப் போனதால் புரிந்துகொண்டேன்.

ஏனெனில் அவர் ஓர் உண்மை முஸ்லிம் மட்டுமன்றி இறைவனைப் பயந்து தக்வாவுடன் தன் வாழ்க்கையை பாற்றிக் கொண்டுள்ளமையினுல் சுங்க அதிகாரிகளிடம் அல்லாஹ்விற்கு நாளை மறுமையில் கணக்குக் காட்டவேண்டுமென்று அச்சம் உள்ளவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளிநாடு போய்வரும் நம்மவர் சிலர் சுங்கப் பரிசோதனையின்போது சொருகிக் கொண்டுவரும் தங்கப்பாலங்களாலும் உல்லாசப் பொருட்களாலும் வசமாக மாட்டிய செய்திகளை அறிந்த எனக்கு யூஸுப் இஸ்லாத்தின் நடத்தை ஒரு நல்ல முன்மாதிரியாகப்பட்டது. இத்தனைக்கும் அவர் எடுத்துச்சென்றது கையால் தூக்கக்கூடிய ஒரு பிளாஸ்டிக் பையும் சாதாரண அளவுடைய சூட்கேஸ் ஒன்றும் மட்டுமேயாகும்.

அன்று செவ்வாய்க்கிழமையாகையால் அரபு நாட்டு விமானங்கள் இரண்டு மூன்று புறப்படுவதால் அந்த நாடுகளில் தொழிலுக்காகச் செல்லும் தமது தாய்க்குலத்தின் தத்தளிப்பையும், தடுமாற்றத்தையும், கணவர்மார் பலர் கண்ணீர் மல்கப் பிரிவதையும், நாம் மட்டுமன்றி யூஸுப் இஸ்லாம் அவர்களும் நோட்டமிட்டுச் செல்வதையும் பார்த்தேன்.

சகோதரர் யூஸுப் இஸ்லாத்தை அங்கே விமான நிலையப் பாதுகாப்பு அதிகாரி - ஒரு முஸ்லிம் அதிகாரி உள்ளே அழைத்துச் சென்றபோது, யூஸுப் இஸ்லாம் அவர்கள் வெகுதூரம் சென்றாலும் அவர் எமக்கு நன்றாகத் தென்பட்டார். அவருடைய தோற்றம் எமக்குக் காட்டியது.

ஒரு கட் ஸ்டீவன்ஸனோ, கஸியஸ் கிளேயோ அன்றி நம்மவராகிவிட்டதாகக் கூறப்படும் ஆம்ஸ்ரோங்கோ வந்து, இஸ்லாத்தை நம்மவர்க்குச் சொன்னால்தான் வெட்கம் வரும் என்ற எண்ணத்துடன் விமானநிலயத்தில் உடன் இருந்த நண்பர் ஒருவருடன் கதைத்தேன்.

மின்வெட்டி மறைந்ததுபோல் வந்துபோன யூஸுப் இஸ்லாத்தின் போதனையால் பாடம் பெற்றோர் - தெளிவுற்றோர். பலன் கண்டோர், பல நூற்றுக்கணக்கானோர் என்று கூறுவேன்.

ஆங்காங்கே எதிரொலித்த கருத்துக்களே இதற்குச் சான்றாகும். அந்த நான்கு நாட்களும் நமது சமுதாயமே விழித்துக்கொண்டது என்று அப்போது பலரும் பேசினர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்ெனாரு மௌலவி. "ஏதோ யூஸுப் இஸ்லாத்தை எல்லோரும் பெரிதாக நினைத்துக்கொண்டார்கள். அவர் என்ன ஒரு சாதாரண மனிதரே. அதுவும் ஒரு நவ முஸ்லிம் தானே! அவரிடம் போய் பெரிதாகக் கேள்வி கேட்கிறார்கள் அவரால் பதில் கொடுக்க முடியுமா?" என்றார்.

"அவ்வாறு கூறவேண்டாம். அல்லாஹ்வின் அருள், ஞானம் கிடைத்தால் அவர் நவ முஸ்லிமாக இருந்தால் தான் என்ன? உண்மையை அறிந்து உங்களுக்கெல்லாம் முன்மாதிரியாகவும், நமது மௌலவிமார்களுக்கெல்லாம் நல்லதொரு நமுனையாகவும், குறிப்பாக, இலங்கையில் நம்மவர்கட்காகவே தற்செயலாக அல்லாஹ் யூஸுப் இஸ்லாத்தை அனுப்பி வைத்தான்" என்று ரோஷத்துடன் கூறினேன். விமர்சித்த அவர் வாயடைத்துப் போனார். "வந்துபோகும் ஒருசில ஷெய்குமார்களை விட அவரின் இலங்கை விஜயம் சிறப்பாக இல்லையா?" என்றேன்.

"இஸ்லாத்தை நன்கு அறிந்துள்ளீர்கள். அதற்கு அல் குர்ஆனும், அல் ஹதீஸும் துணையாக நின்றுள்ளன, தங்கள் பெயரைக்கூட "யூஸுப்" என்று ஏன் வைத்துள்ளீர்கள்?" என்று கேட்டபோது, "'ஸூரா யூஸுப்' தான் காரணம்" என்றார்.

நம்மவரின் சொல்லும் செயலும் இனியாவது ஒன்றுக் கொன்று முரணற்றதாக இருக்கட்டும் என்று பிரார்த்தித்து அடிக்கடி யூஸுப் இஸ்லாம்கள் இங்கு வரவேண்டும் என்று விழைகிறேன்.

இரும்பு மேலெழுந்து பறந்து - அந்த யூஸுப் இஸ் லாத்தை இரக்கமின்றி எம்மிடமிருந்து பிரித்துச் சென்றதே என்ற ஏக்கத்தில் - இங்கிலாந்தில் அவர் இனிதுற வாழட் டும் என்று எனது இதயம் வாழ்த்தியது. அவர் நினைவு களால் என் இதயம் ஈரமாகியது! உங்கள் இதயம்...?

◁ ◈ ▷



பொது நூலகம்
1985-7-15
கொழும்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இசையின் மூலம் மயங்கிய நீங்கள்
"ஈமானின் மூலம் விழிப்படையுங்கள்
என்ற ஆழ்ந்த கருத்தை எங்களிடம்
ஊன்றிப் பதித்துவிட்டுப் பெரும் பணி தொடர
விமான நிலையத்தில் விடை பெற்றீர்களோ !

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


அத்தனகல்லைத் தொகுதியில் கஹட்டோவிட்டவில் பிறந்தவர். கஹட்டோவிட்ட அல்-பத்ரியா, மாவனல்ல ஸாஹிரா, கொழும்பு விவேகானந்தா கல்லூரிகளின் பழைய மாணவர். மணமுடித்த வழியில் தர்கா நகரில் வதிவிடம் பிடித்துள்ளார்.

அகில இலங்கை ரீதியிலும், மாவட்ட ரீதியிலும் பல முதற் பரிசில்களையும், சிறப்புப் பரிசில்களையும் தனது எழுத்துக்காகவும், பேச்சுக்காகவும் பெற்றவர்.

இவரது பேச்சாற்றலுக்காக, 1976ல் வீரகேசரி நாளிதழும், இலங்கை இந்து மன்றமும் தேசிய இளைஞர் சேவை மன்றமும் இணைந்து 'சொல்லின் செல்வன்' எனும் சிறப்புப் பட்டம் வழங்கி கௌரவித்தன.

பள்ளிக்காலத்திலிருந்து இன்றுவரை சமூக சேவையில் பெரும் ஆர்வமுடையவர். பல்வேறு இயக்கங்களின் செயலாளராக இருந்து சேவையாற்றியுள்ளதுடன், இன்று முஸ்லிம் வாலிபர் ஒன்றியத்திலும், முஸ்லிம் லீக் வாலிப முன்னணியிலும் அகில இலங்கை முஸ்லிம் இளைஞர் இயக்கங்களின் சம்மேளனம் (பாமீஸ்) ஆகியவற்றிலும் நிர்வாகக் குழு உறுப்பினராக இருந்து வருபவர்.

இலங்கையின் தினகரன், தினபதி முதலிய நாளிதழ்களிலும் சஞ்சிகைகளிலும் சமய - சமூக கட்டுரைகளை எழுதியுள்ள இவர் இன்னும் பல்வேறு புனைப்பெயர்களில் சமுதாய சீர்திருத்தம் கோரும் விமர்சன ரீதியான கட்டுரைகளை தனக்கேயுரிய தனி நடையில் எழுதி வருகிறார். தினபதி சிந்தாமணி பத்திரிகைகளின் அலுவலக நிருபராகவும் பணிபுரிந்துள்ளார்.



இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன முஸ்லிம் சேவையில் பணியாற்றி, தற்போது வானொலி செய்திப் பிரிவில் ஒலிபரப்பு உதவியாளராகத் தொழிலைத் தொடரும் இவரது முதல் நூல் 'பிஞ்சு மனம்' 1983ல் வெளிவந்தது.

சமுதாய உயர்வையே என்றும் தன் இலட்சியமாகக் கொண்டுள்ள அஹமத் முனவ்வர் எழுத்துலகில் மேலும் உயர்வடைந்து இன்னும் பல ஏற்றமிகு நூல்களை தந்திட எல்லாம் வல்ல அல்லாஹ் நல்லருள் புரிவானாக.

— ரஷீத். எம். இம்தியாஸ்
பீ. ஏ. (சிறப்பு)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org